# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 02 சனிக்கிழமை(16 – 05 – 1998)SANJEAVY Regenerative Tamil Weekly சிகரம்: 50


# ஐ. நா. பங்களிப்பை அரசு நிராகரித்தது!

## அமைச்சர் கதிர்காமர் அறிவிப்பு

கொழும்பு, மே 16

நாட்டின் இனப்பிரச்சினையில் ஐ. நா. சபையின் தலையீட்டையும், மேற்பார்வையையும் இலங்கை அரசு திட்டவட்டமாகவே நிராகரித்துவிட்டது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் நேற்று கொழும்பில் வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் மத்தியில் பேசும் போது இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதியான ஒலரா ஒட்டுணு விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சிலவிடயங்களில் தமக்கு வாக்குறுதிகள் தந்துள்ளதாகவும் —

அவற்றைக் கண்காணிக்க ஐ. நா. சபையின் அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் —

தெரிவித்ததை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

அப்படியான வாக்குறுதி எதையும் நாம் எந்த வேளையிலும் யாருக்கும் கூறவில்லை. இனப்பிரச்சினை, யுத்தம் தொடர்பாக ஐ. நா. மேற்பார்வை என்ற விடயத்தில் எமது பதில் 'முடியாது'

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் சிப்பாய் பலி!

தென்மராட்சி, மே 16

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் — அல்லாரைப் பிரிவில்—அரசடிச் சந்தியில் அமைந்துள்ள காவலரண் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பில் ஒரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் ஆணே!

### சடலம் நேற்று அடக்கம்

பருத்தித்துறை, மே 16

நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை பஸ் நிலையத்துக்குச் சமீபமாக பிரிகேடியர் லறி விஜேரத்னா மீது தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி ஆண் என்று தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

குண்டுதாரியின் சிதைந்த உடல் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சடலம் படம் பிடிக்கப்பட்டதுடன், கைவிரல் அடையாளமும் எடுக்கப்பட்டது.

நீண்ட கறுத்த மீசையுடன் காணப்பட்ட அச்சடலத்தில் தலையில் மயிர் குறைவாகக் காணப்பட்டது.

உத்தியோகப்பற்றற்ற பதில் நீதிவான் ஏ. கே. நடராசா விசாரணையின் பின் வழங்கிய உத்தரவையடுத்து அச்சடலம் நேற்று மாலை 6 மணியளவில் அரச செலவில் பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் அடக்கம் செய்யப்பட்டது.

(உ-3-9-109-173-118)

## மட்டக்களப்பில் மின்மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு, மே 16

மட்டக்களப்பு புறநகர் பிரதேசமான நாவலடியில் நேற்று முன்தினமிரவு மின்மாற்றி ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப் பயிற்சி நிலையவளவில் இந்த மின்மாற்றி அமைந்திருந்தது.

இந்தத் தாக்குதலால் ரூபா 4 லட்சம் பெறுமதிக்கு நஷ்டம் ஏற்பட்டதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (உ-21)

## அம்பாறைச் சம்பவங்கள்

### பள்ளிவாசலில் சூடு! கான்ஸ்டபிள் பலி!!

#### 4 முஸ்லிம்களும் காயம்

அம்பாறை, மே 16

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று — நிந்தவூர் ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையத்தில் காவலுக்கு நின்ற பொலீஸார் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு ரி. எல். பதுர்தீன் என்ற அந்தக் கான்ஸ்டபிள் தனது ஆயுதங்களை பணிசெய்த இடத்தில் வைத்து விட்டு பள்ளிவாசலுக்கு தொழுகைக்குச் சென்றதாகவும் —

தொழுகை முடித்து அவர் திரும்பும் போது ஆயுதக்குழு ஒன்றினால் அவர் சுடப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### மின்மாற்றி தகர்ப்பு 5 முஸ்லிம்கள் காயம்

அம்பாறை, மே 16

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி கடற்கரையில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு அருகில் இருந்த மின்மாற்றி ஒன்று நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

அச்சமயம் பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக் கொண்டு அந்த வழியால் திரும்பிக்கொண்டிருந்த ஐந்து முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மின்மாற்றி மீது இரு கிரனேட்டுக்கள் வீசப்பட்டதாகவும் —

மின்மாற்றிக்குப் பெருஞ்சேதம் இல்லை என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3-21-14)

### முஸ்லிம்கள் ஹர்த்தால்

அம்பாறை, மே 16

அக்கரைப்பற்று, கல்முனைக்குடி பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரண்டு தாக்குதல் சம்பவங்களையும் கண்டித்து அங்கு பல கிராமங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை, நிந்தவூர், சாயிந்திய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரலாக லறிக்குபதவிஉயர்வு

கொழும்பு, மே 16

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த வடமராட்சிப்பிரிவு கட்டளை அதிகாரி பிரிகேடியர் லறி விஜயரத்தின மரணத்தின்பின் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பதவி உயர்வு தொடர்பான அறிவித்தலை பாதுகாப்புஅமைச்சு நேற்று விடுத்தது.

லறி விஜயரத்தினாவின் இறுதிக் கிரியைகள் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாத்தளையைச் சேர்ந்த இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

(உ-3)

## இன்று கடையடைப்பு

பருத்தித்துறை, மே 16

வடமராட்சி கட்டளை அதிகாரி பிரிகேடியர் லறி விஜயரத்தினாவின் மரணத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கும் வகையில் வடமராட்சியில் இன்று கடையடைப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலோலி, பருத்தித்துறை வர்த்தக சங்கங்கள் இணைந்து இந்த கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-109)

## ஜி. சீ. ஈ. (சா. த) பரீட்சை முடிவுகள் அடுத்தவாரம்

கொழும்பு, மே 16

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தபால் திணைக்கள வேலை நிறுத்தம் காரணமாக அண்மையில் நடந்த செயன்முறைப் பரீட்சை முடிவுகள் கிடைக்காததால், பரீட்சை முடிவுகளை வெளியிட தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10-3)

## கொழும்புக்கு விஜயம் செய்யாதீர்! வாஜ்பாய்க்கு "றோ" ஆலோசனை!

புதுடில்லி, மே 16

எதிர்வரும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு செல்லவிருக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயை, கொழும்புக்குச் செல்ல வேண்டாம் என்று இந்திய உளவுத் துறையான றோ வற்புறுத்திக் கேட்டிருப்பதாக செய்தி நிறுவனங்கள் சில அறிவித்தன.

சர்வதேச சக்திகளின் துணையோடு கொழும்பு நகரில் வாஜ்பாய்க்கு எதிரான சதிநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று கருதப்படுவதாலேயே இவ் வேண்டுகோளை தாம் விடுப்பதாக 'றோ' குறிப்பிட்டுள்ளதாம்.

1987 இல் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அங்கு இரா

(8ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை பயமுறுத்தி நிதி வசூல் செய்யவில்லை என்கிறது ரெலோ

யாழ்ப்பாணம், மே 16

பொதுமக்களிடம் இருந்தோ அல்லது வர்த்தகர்களிடம் இருந்தோ கப்பமாகவோ அன்றி பயமுறுத்தல் மூலமாகவோ பணம் மற்றும் பொருள்கள் எதனையும் ரெலோ அமைப்பு அறவிடவில்லை. எமது அமைப்பின் பெயரில் எவராவது நிதி வசூலில் ஈடுபட்டால் அதுபற்றி எம்மிடமோ, பொலீஸாரிடமோ உடனடியாக முறையிடுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு ரூ. 3 கோடி பெறுமதிக்கு உதவிகள்

### ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

யாழ்ப்பாணம், மே 16
யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று கோடி ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தொழில் நுட்பக் கல்லூரியில் கற்பிக்கப்படும் கற்கை நெறிகளுக்குத் தேவையான நவீன உபகரணங்களே இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளன.

இதன் ஒரு பகுதியாக அண்மையில் 10 கணனிகளை ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தித் திட்டப் பொறுப்பாளர் தொழில் நுட்பக் கல்லூரிக்குக் கையளித்தார்.

தொழில் நுட்பக் கல்லூரியில் கணனிக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்காக இவை வழங்கப்பட்டுள்ளன.

எனினும் இக்கற்கை நெறிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான வசதிகள் தொழில் நுட்பக் கல்லூரியில் ஏற்படுத்தப்படாமையினால் கற்கை நெறிகள் அடுத்த வருடமளவிலேயே ஆரம்பிக்கப்படும் என்று தொழில் நுட்பக் கல்லூரி உபஅதிபர் செந்தில்நாதன் தெரிவித்தார்.

ஐ. நா. அபிவிருத்தித்திட்டத்தினால் வழங்கப்படும் ஏனைய உபகரணங்களும் விரைவில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொழில் நுட்பக் கல்லூரியில் கற்பிக்கப்படும் மோட்டார் இயந்திரம் திருத்துதல் குழாய்பொருத்துதல்போன்ற 9 துறைகளுக்குரிய உபகரணங்களே அவை என்றும் கூறப்பட்டது. (உ-6)

## மகளிர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 16
மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'கிராமிய மட்டத்தில் பெண்கள் தலைமையில்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கிராமிய மட்டத்தில் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை அமுல் செய்வதற்குத் தகுதிவாய்ந்த 50 க்கு மேற்பட்ட இளம் பெண்கள் இக் கருத்தரங்கில் பயிற்சிபெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

''சீடா'' நிறுவனத்தின் உதவியுடன் நடத்தப்படும் இக் கருத்தரங்குக்கு திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமை வகிப்பார்.

வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றும் இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சபா.ஜெயராஜா, மாதவி சுந்தரம் பிள்ளை, யாழ். சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த பரமேஸ்வரி பரமநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (உ-3)

## வானொலி நிகழ்ச்சி

கொழும்பு, மே 16
இலங்கையில் பல பாகங்களிலுமுள்ள வானொலி நேயர்கள்தொலைபேசிமூலம் வானொலியில் உரையாடும் 'வாரம் ஒருவலம்' என்ற நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7-10லிருந்து 8-00 மணிவரை நேரடியாக ஒலிப்பரப்பாகும். தொடர்பு கொள்ள விரும்புவோர் 696941 அல்லது693171 இலக்க தொலை பேசியில் நிகழ்ச்சி நடக்கும் போது நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிகழ்ச்சி பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 7-00மணிக்கு இடம் பெறும். (உ-3)

## தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 16
வலயம் ஒன்றுக்கான தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. போட்டிக்குத் தெரிவானமாணவர்கள் உரிய நிலையங்களில் காலை 9-00 மணிக்கு சமுகமளிக்குமாறு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

போட்டி நடைபெறும் இடங்கள் வருமாறு;-

★ சாவகச்சேரி கோட்டம்—சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
★ யாழ்ப்பாணம், நல்லூர்—யாழ், இந்து மகளிர் கல்லூரி.
★ வேலணை — வேலணை சேர். வைத்திலிங்கம் ம. ம, வி.
★ ஊர்காவற்றுறை—கரம்பொன் சிறிய புஷ்பம் ம. வி.
★ நெடுந்தீவு— நெடுந்தீவு ம. வி. (ஐ)

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 16
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சி மன்றக் கூட்டம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை திருகோணமலையில் மாகாணக்கல்வியமைச்சு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படும் என்றும்—

கூட்டத்தில் பங்கு கொள்ளும் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு போக்குவரத்துச் செலவு வழங்கப்படும் என்றும்—

சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்குழுப் பிரதிநிதிகள் தமது பதிவுகளை யாழ்ப்பாணத்தில் சிரேஷ்ட துணைத் தலைவர் த. பஞ்சலிங்கத்திடம் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

### பருத்தித்துறையில்

## பொருள் இறக்கும் பணி நேற்று நடக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 16
பொருட்களுடன் வந்துள்ள ஓஷன்ஸியர், ஹண்டி ஆகிய இரு கப்பல்களிலும் இருந்து பொருள்களை இறக்கும் பணி நேற்று பருத்தித்துறை துறைமுகத்தில் இடம் பெறவில்லை.

இந்த இரு கப்பல்களில் இருந்தும் பொருள்களை இறக்குவதற்காக சில தொழிலாளர்களே நேற்றுத் துறைமுகத்துக்கு வந்திருந்தனர். அனேக தொழிலாளர்கள் பணிக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனாலேயே நேற்றுப் பொருள்களை இறக்கும்பணி நடைபெறவில்லை என்றும் கூறப்பட்டது. நிலைமை சீரானால் இன்று அப்பணி இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது. (உ-193-9)

## வெங்காயச் செய்கை மழையால் பாதிப்பு?

யாழ்ப்பாணம், மே 16
குடாநாட்டில் பம்பாய் வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தற்போது பெய்து வரும் தொடர்மழையினால் பெரும் பாதிப்பு அடைவர் என்று விவசாய விரிவாக்க அலுவலர்கள் கூறுகின்றனர்.

எனினும் ஒரு மாதத்திற்கு முன்னர் வெங்காயம் பயிரிட்ட விவசாயிகளுக்கு இம் மழையினால் பெரியளவில் பாதிப்புக்கள் ஏற்படாது என்றும் —

ஏனைய சிறு தானியப் பயிர்ச் செய்கைகள் மழை காரணமாக பாதிப்புக்குள்ளாகாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

### அணுகுண்டுச் சோதனை:

## இந்தியப் போக்குக்கு இலங்கை முழு ஆதரவு

புதுடில்லி, மே 16
இந்தியா அணு சக்தி நாடாக உருவெடுப்பதை இலங்கை எப்போதும் எதிர்க்கவில்லை.

அதேவேளை அணு ஆயுத சோதனைகளை நடத்தியமைக்காக இந்தியா மீது பல்வேறுதடைகளை விதித்த நாடுகளையும் இலங்கை கண்டிக்கிறது.

நேற்று கொழும்பில் வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார் என இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது. (உ-7)

## சமய சந்நிதியில்

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. (152)

★ ★ ★

மீசாலை வடக்கு தட்டான் குளப் பிள்ளையார் தேவஸ்தான மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் அமாவாசைத் தினத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (117)

★ ★ ★

இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

28 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த் திருவிழாவும், மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

★ ★ ★

யாழ். வில்லூன்றி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## மக்களைப் பயமுறுத்தி...

[முதலாம் பக்கத் தொடர்] பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

கடந்த சில மாதங்களாக இயக்கங்களின் பெயரினால் நிதி வசூல்கள் செய்யப்படுவதாக பத்திரிகைகளிலும், பொதுமக்களினாலும் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன.

இது சம்பந்தமாக ரெலோ இயக்கம் தனது திட்டவட்டமான நிலைப்பாட்டினைப் பொதுமக்களுக்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளது.

எம்மால் பொதுமக்களிடமிருந்தோ அல்லது வர்த்தகர்களிடம் இருந்தோ பயமுறுத்தியோ அல்லது கப்பமாகவோ பணம், பொருள்கள் அறவிடப்படுவதில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

அப்படி எவராவது எமது பெயரைப் பயன்படுத்தி வசூலில் ஈடுபட்டால் எம்மிடமோ அல்லது பொலீஸாரிடமோ புகார் செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமக்கான புகார்களை ''பொறுப்பாளர், பிராந்திய தலைமையகம்'' 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்(தொலைபேசி இல2131) என்ற முகவரியிலோ அல்லது ''முதல்வர் — ரெலோ, 33, சென். பீற்றர்ஸ் பிளேஸ், கொழும்பு — 4, (தொலைபேசி இலக்கங்கள் 075,—338194, 075 — 338196)என்ற முகவரியிலோ தெரிவிக்கலாம்.

ஏற்கனவே நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏதாவது இருந்தால் அவற்றையும் அனுப்பி வைக்கலாம்.

கட்சி நிதிக்கு நலன்விரும்பிகளினால் அளிக்கப்படும் நன்கொடைகள் கட்சி அலுவலகத்தில் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்படும். ஒப்படைக்கப்பட்ட பணம், பொருள்கள் ஆகியவற்றிற்கான பற்றுச்சீட்டு உடனடியாக வழங்கப்படும்— என்பதனையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


ஸ்ரீ செல்வா திரையரங்கு
ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தினசரி
10-30, 2-30 மணிக்கு
(பழைய நேரம்)
முரளி (இருவேடத்தில்)
ரேவதி, சங்கீதா,
வடிவேலு
நடித்த
ரத்னா
நேரடி CD யில்
(56043)

யாழ்.
றீகல் வெண் திரையில்
10 30 மணிக்கு
முரளி (இரு வேடத்தில்)
ரேவதி, சங்கீதா
ரத்னா
(நேரடி CD)
2. 30 மணிக்கு
முரளி, சூர்யா, கவிதா
காதலே நிம்மதி
(நேரடி CD)
தினசரி 8-30 - 5-00
சினிமா உலக வரலாற்றில் வசூலில் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற
TITANIC
யாழ், றீகலில் 2 ஆவது வாரமாக வெற்றி நடைபோடுகின்றது.
TITANIC PART - II
இறுதிப் பாகம்
பார்க்கத் தவறாதீர்கள்
(56046)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று
முரளி (இருவேடத்தில்)
ரேவதி, சங்கீதா,
வடிவேலு, மகேஸ்வரி
நடித்த
ரத்னா
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலை பேசி இல.
070 - 212223
(55969)

நாகஸ்ஸ்
சினிமா
சுன்னாகம்
அகல வெண் திரையில்
15- 05- 98 வெள்ளி
ரஜனி, சோபனா
நடித்த
"தளபதி"
(பழைய நேரம்)
காட்சி 10- 30 — 2-30
(56018)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**S. N. பயஸ்**

பிறப்பு: 25 — 04 — 1915
இறப்பு: 16 — 04 — 1998

வாழ்கின்ற பொழுதுகளில்
வழிகாட்டும் ஒளி விளக்காய்
நீ வாழ்ந்து நின்றாய்
நின் பிரிவில் தினம் நனையும்
உன் பாச உறவுகள்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், மற்றும் பல்வேறு உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றிகள்.

— குடும்பத்தினர்

குருநகர்,
யாழ்ப்பாணம். (56042)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவ அதிகாரிகள் மீதான இலக்குகள்:

# ஹமாங்கொடவுக்கு பின்னர் விஜயரத்தினா!

யாழ். குடா நாட்டின் வடமராட்சிப் பகுதியில் நிலை கொண்டுள்ள 524 வது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் லறி விஜயரத்தினா [வயது 48] குடா நாட்டில் தமது சேவையை முடித்துக் கொண்டு தெற்கே திரும்பிச் செல்வதற்கு சுமார் இருபது மணி நேரத்துக்கு முன்னர் பருத்தித்துறையில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் உயிரிழந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த இடம் வடமராட்சி. வடமராட்சியை புலிகளின்



லறி விஜயரத்தின: குண்டுக்குப் பலி!

கோட்டை என முன்னர் அழைப்பர். அங்கு சிங்கத்தின் குகை வாயிலில் சிங்கத்தைச் சந்தித்ததுபோல இராணுவ முகாம் வாசலுக்கு அண்மையில் படைத் தளபதியை இத் தாக்குதலை நடத்தியவர் சந்தித்திருக்கிறார்.

குடா நாட்டைப் படையினர் கைப்பற்றிய பின்னர்—

இடம்பெயர்வின் பின்னர் வலிகாமத்துக்கு மக்கள் திரும்பியதன் பின்னர் —

குடாநாட்டில் கொல்லப்பட்ட இரண்டாவது பிரிகேடியர் இவராவார்.

1996 ஜூலை 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் யாழ். நகரின் 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஆனந்த ஹமாங்கொட கொல்லப்பட்டிருந்தார்.

அந்தச் சம்பவத்தையடுத்தும், அதே மாதத்தில் முல்லைத்தீவு இராணுவ முகாம் அழித்தொழிக்கப்பட்டதை அடுத்தும் குடாநாட்டில் தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு, பின்னர் காணாமற் போயினர்.

சுமார் 600 முதல் ஆயிரம் இளைஞர்கள் இவ்வாறு காணாமற் போனதாகத்தெரிகிறது.

என்றாலும் வடமராட்சியில் பிரிகேடியர் லறி விஜயரத்தினாவின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்—மற்றைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது—காணாமற் போகும் சம்பவங்கள் மிகக் குறைவாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பிரிகேடியர் கொல்லப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் பூதாகாரமாக உருவெடுத்த கண்டபடி கைதுகள் மற்றும் காணாமல் போகும் சம்பவங்கள் மீண்டும் தற்போது மற்றொரு பிரிகேடியர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து புதிய உத்வேகம் பெற்று எழுமா என்பதே மக்கள் மனங்களில் இன்றைய கேள்வி.

அதுவும் குடாநாட்டில் இத்தகைய காணாமற் போகும் சம்பவங்களுக்கு அதிக இடம் கொடுக்காத பிரிகேடியர் விஜயரத்தினவின் மறைவையடுத்து — அவரது செயற்பாட்டுக்கு முரணான விதத்தில் —மீண்டும் தொடருமா என்ற சந்தேகமும் உண்டு.

குடாநாட்டில் பிரிகேடியர் விஜயரத்தினவின் பணி இராணுவ நோக்கத்தை மட்டுமல்லாமல் அரசியல் சிந்தனை மயப்பட்டதாகவும் இருந்ததாக மக்கள் பொதுவாகப் பேசிக் கொள்வது வழக்கம்.

இராணுவ ரீதியில் மட்டுமல்லாமல் அரசியல் ரீதியிலும் புலிகளை ஓரங்கட்டும் முயற்சியில் லறி விஜயரத்தின ஈடுபட்டு வந்தார். அவரது தந்திரோபாய நடவடிக்கைகள்— வேலைகள்— ஒன்றும் புரியாத மக்களை இலகுவில் கவர்ந்தது என்னவோ உண்மைதான். மக்களுடன் நல்லுறவைப் பேண அவர் முயன்றார் என்பது உண்மைதான். ஆனால் வடமராட்சியில் மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில்— அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதில் அவர் பெரிதாக எதையும் சாதித்ததாகக் கூறிவிட முடியாது.

பின்னாளில் நீதிமன்றத்தினால் சுற்றவாளிகளென விடுதலை செய்யப்பட்ட—

முன்னாள் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், செயலக அதிகாரி வி. விக்கினேஸ்வரமூர்த்தி மற்றும் செயலக ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் காவலில் வைக்கப்பட்டதும்—

வடமராட்சியில் உள்ள இரு கல்லூரி அதிபர்களும், ஓர் உப அதிபரும், ஒரு கூட்டுறவு அதிகாரியும் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் காவலில் வைக்கப்பட்டதும்—

இவருடைய தொடர் நடவடிக்கைகளின் விளைவே என்ற பேச்சும் உள்ளது.

அப்பாவிகளைக் கைது செய்து நீண்ட காலம் காவலில் வைக்கச் செய்துவிட்டு மக்களின் மரண வீட்டில், கலியாண வீட்டில் கலந்து கொள்வதில் என்ன தார்மீகம் உள்ளது என்று அப்போதே விஷயமறிந்தவர்கள் கேட்டார்கள்.

என்றாலும் வடமராட்சியில் கணிசமான மக்களின் மனத்தை பிரிகேடியர் லறி விஜயரத்தின வென்றிருந்தார் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

நீண்ட காலம் வடமராட்சியில் பணிபுரிந்த அவருக்கு கொழும்பு கொத்தலாவல படைத்துறைப் பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றம் வந்தது. அந்த இடமாற்ற உத்தரவு பற்றிய தகவல் பத்திரிகையில் வெளியான





கையோடு வடமராட்சியில் ஆரவாரமாகப் பல பிரியாவிடை ஏற்பாடுகளும் நடந்தன.

பிரிகேடியர் லறி விஜயரத்தினாவும் —தமக்கே உரிய — அரசியல்வாதிகள் போன்ற— பாணியில் பிரியாவிடை வைபவங்களில் கலந்து கொள்ளத் தொடங்கினார்.

அப்போது குடாநாட்டில் புலிகளின் விவகாரங்களைக் கவனிக்கும் அரசியல் பிரிவு புங்குடுதீவில் இருந்து சம்பந்தப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வந்தோருக்கு ''அன்புக் கடிதங்களை'' அனுப்பி வைத்ததாகவும் தெரிகிறது.

அக்கடிதங்களில் பிரிகேடியர் லறி விஜயரத்தின வடமராட்சியில் பணிக்கு வருவதற்கு முன்னர் பல்வேறு தமிழினஅழிப்பு வேலைகளில் ஈடுபட்டதாகப் புலிகள் குற்றஞ் சாட்டியிருந்தனர்

அவற்றை மறந்து விட்டு இப்போது அவரை வாழ்த்துவதா என்று புலிகள் வினா எழுப்பி இருந்ததாகவும் இப்போது தகவல்.

இக் கடிதங்கள் புலிகள் பிரிகேடியர் லறி விஜயரத்தினா மீது கடும் சீற்றம் கொண்டிருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டப் போதுமானவையாக இருந்தன என்று கூறலாம்.

இக்கடிதங்களும் லறி விஜயரத்தின மீதான தாக்குதல் பாணியும், அவர் மீதான தமது கோபத்தைப் புலிகள் தீர்த்துக் கொண்டார்கள் என்பதையே காட்டுகின்றன.

குடாநாட்டில் மக்களோடு நெருங்கிப் பழக முற்பட்ட பிரிகேடியர் ஆனந்த ஹமாங்கொட கொல்லப்பட்டார். நெருங்கிப் பழகிய பிரிகேடியர் லறி விஜயரத்தினாவும் அதே பாணியில் கொலையுண்டார்.

குடாநாட்டில் அதே போக்கில் மக்களுடன் நெருங்கிப் பழக முயலும் மற்றொரு இராணுவ அதிகாரி —



ஒலிவர் ரணசிங்க: விரைவில் கைது?

தற்போது யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 ஆவது படையணியின் தளபதி — பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் ஆவார்.

இவரின் உயிருக்கு உலை வைக்கவும் சில தினங்களுக்கு முன்னர் முயற்சி எடுக்கப்பட்டது தெரிந்ததே. பலாலி வீதியில் கோண்டாவிலில் இவரது வாகன அணிக்கு சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருந்த — இவரது வாகனத்தை ஒத்த — வாகனம் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதலையடுத்து, தங்கள் நடமாட்டம் குறித்து அவதானமாக இருக்குமாறு பிரிகேடியர் மெண்டிஸுக்கும், ஏனைய குடாநாட்டு இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் பலாலி தலைமையகம் எச்சரிக்கை அறிவுறுத்தல் விடுத்ததாகத் தெரிய வருகிறது.

எனினும், வடமராட்சி பிரிகேடியர் விடுதலைப் புலிகளின் கொலை இலக்கில் இருந்து தப்ப முடியவில்லை.

யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸைப் பொறுத்தவரை குடாநாட்டில் உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மட்டத்தில் அவர் குறித்து அதிருப்தி நிலவி வருவதை அறியமுடிகிறது. அரசாங்கப்பணிகளும், அபிவிருத்தி நடவடிக்கைகளும், இராணுவ உத்தரவுப் பாணியில் பின்பற்றப்பட்டு வேகவேகமாக முடிக்கப்பட வேண்டும் என்ற போக்கில் பிரிகேடியர் மெண்டிஸ் செயற்பட்டு வருவதே அரச அதிகாரிகள் மட்டத்தில் அதிருப்தி நிலவக் காரணமாகும்.

இதே போன்று குடாநாட்டின் படைகளின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவும் ஓரளவுக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துள்ளார்.

குடாநாட்டில் படை அதிகாரத்தை ஆரம்பத்தில் பகுதியாகவும், பின்னர் முற்றாகவும் அவர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், அவரது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவ அத்துமீறல்கள், கைதுகள்— படை அதிகாரிகளினால் கட்டுப்பாட்டில் கொண்டுவரக் கூடிய சுமாரான ஓர் அளவுக்கு— குறைந்து போனமை ஒரு காரணம்.

தொலைபேசி வசதி, விமானப் போக்குவரத்து போன்ற விடயங்களில் நெருக்கடி நிலை சற்றுத் தணிய வைத்தது மற்றொரு காரணம்.

பொது மக்கள் பிரதிநிதிகளை இராணுவ அதிகாரி என்ற மிடுக்கோடு அல்லாமல் சாதாரண அதிகாரிக்குரிய பண்போடு சந்தித்துப் பேசுவது போன்ற தன்மை மற்றொரு காரணம்.

இவ்வாறு இராணுவ வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மக்களை தந்திரோபாய அடிப்படையில் நெருங்க முற்படும் படை அதிகாரிகள் இலக்கு வைக்கப்படுவார்கள் என்பது யுத்த சதுரங்கத்தில் ஒன்றும் புதியதல்ல.

★ ★ ★

## அமைச்சரவையின் கூட்டம் ரத்தானது ஏன்?

கடந்தபுதன்கிழமைநடைபெறவிருந்தவாராந்தஅமைச்சரவைக் கூட்டம் திடீரென ரத்து செய்யப்பட்டது. பாதுகாப்புத்துறையினரின் ஆலோசனைகளுக்கு இணங்கவே இக்கூட்டம் ரத்துச் செய்யப்பட்டதாக தற்போது தெரிய வருகிறது.

வன்னியில் 'வெற்றிஉறுதி' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு கடந்த புதன்கிழமையன்றே ஒருவருடம் பூர்த்தியானது. அத்தினத்தை முன்வைத்து புலிகள் தாக்குதல் மேற்கொள்ளக் கூடும் எனக் கிடைத்த தகவல்களையடுத்தே பாதுகாப்புத்துறை இவ்வாறு ஆலோசனை வழங்கியதாகத் தெரிகிறது.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு அமைச்சர்கள் வருகை தரும் நேரம், அவர்கள் கூட்டம் முடிந்து திரும்பிச் செல்லும் நேரம் ஆகியவற்றை இலக்காக வைத்து இத்தாக்குதலை நடத்தப் புலிகள் திட்டமிட்டிருந்ததாக தேசிய இரகசியப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல்கள் கிடைத்திருந்தனவாம்.

அதனை அடுத்தே அமைச்சரவைக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அமைச்சரவைக் கூட்டம் ரத்தானதால், அதனைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெறும் வாராந்த செய்தியாளர் மாநாடும் ரத்துச் செய்யப்பட்டது.

★ ★ ★

## இராணுவத் தளபதி விரைவில் வீட்டுக்கு?

இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் றோஹான் தளுவத்தை குறித்து அரச உயர்மட்டத்தில் புகைச்சல் கிளம்பியிருப்பதாக கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறு



றொஹான் தளுவத்த: விரைவில் வீட்டுக்கு?

கின்றன.

இராணுவத் தளபதி தளுவத்தவின பதவிக்காலம் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது. எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்கு சேவை நீடிப்பை வழங்கினார். எவ்வளவு காலத்துக்கு அந்த சேவை நீடிப்பு வழங்கப்படுகின்றது என்பது குறித்து காலவரையறை ஏதும் குறிப்பிடாமல் அந்த சேவை நீடிப்புப் பிரகடனம்

**பாசுபதன்**

அமைந்திருந்தது.

வன்னியில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருக்கும் ''வெற்றி உறுதி'' படை நடவடிக்கை முடிவடையும் வரை — நீண்ட ஒரு காலத்துக்கு — றோஹான் தளுவத்தையை இராணுவத் தளபதி பதவியில் நீடிக்கச் செய்வதற்காகவே காலவரை குறிப்பிடாமல் சேவையை நீடிக்கும் கடிதத்தை அரச உயர்பீடம் அவருக்கு வழங்கியதாக அப்போது பேசப்பட்டது.

ஆனாலும் குறிப்பிட்ட காலத்துக்கு சேவையை நீடிக்கும் உத்தரவை வழங்கிவிட்டு இடைநடுவில் இராணுவத் தளபதியை வீட்டுக்கு அனுப்பினால் அது பல்வேறு சர்ச்சைகளைக் கொண்டுவரும் எனக் கருதியும் —

காலவரையறை குறிப்பிடாமல் பதவி நீடிப்பு வழங்கினால் இடையில் தமக்கு விருப்பமான நேரத்தில் சேவை நீடிப்பை நிறுத்தி, தளபதியை வீட்டுக்கு அனுப்பலாம் என்றும் —

அரச உயர்பீடம்அப்போது கருதியதாலேயே அத்தகைய விதத்தில் இராணுவத் தளபதிக்கு கடிதம் வழங்கப்பட்டதாக இப்போது விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசியத் தொடங்கியிருக்கின்றன.

விமானப் படைத்தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவுக்கு அண்மையில் வழங்கப்பட்ட சேவை நீடிப்பு, இதேபோன்றுஇடைநடுவில் — இரண்டு வாரங்களில்— முடிவுக்குக் கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கிறைசர்கள். விஸ்டர் எஞ்சின்கள், 350 அம்பியர் D.C. ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 457, பிரகாஸ் றான்ஸ்போட்ஸ், K.K.S. வீதி, யாழ்ப்பாணம். [55994]

தூய இன பூச்சி அகற்றப்பட்ட Alsation Pups விற்பனைக்கு உண்டு. பூக்கன்றுகள், செவ்வரத்தை, பூச்சாடிகளும் விற்பனைக்கு உண்டு. ச. பாக்கியநாதன், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (56033)

மிகவும் நல்ல நிலையிலுள்ள L.M.L ஸ்கூட்டர். E.N மைனர் கார், சாளி மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 17, விதானையார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (56028)

### சேவல்குஞ்சு

8 நாள்கள் வளர்ச்சியடைந்த பிறிமா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 25 மட்டுமே. ''மல்லிகாபதி'' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய் [56012]

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் வயது 29, 5' 4'' 7இல் செவ்வாய், பாவம் 50 அரசியல் ஆசிரியராகவும், கொழும்பு பல்கலைக்கழக Diploma பட்டம் பெற்றவரும் அழகிய, சிவந்த ஒரே மகளுக்கு டாக்டர் தந்தை, படித்த மணமகனை எதிர்பார்க்கின்றார்கள் தொடர்பு: இல. 736, C/o உதயன், யாழ்ப்பாணம். [55862]

### ஆங்கில சிங்களக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம். சிங்களம் தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 730, C/o உதயன், யாழ்ப்பாணம். [55286]

### மணமகள் தேவை

27 வயது, மூலம் அரச சேவையில் கடமைபுரியும் மணமகனுக்கும், 38 வயது மூலம்செவ்வாய்க்குற்றமுள்ள சொந்த வியாபாரம் செய்யும் மணமகனுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: இல. 738, C/o உதயன், யாழ்ப்பாணம். [56026]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler), கல்பேட்ஸ் ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [56031]

NAAVALAR EDUCATION CENTRE

தவிர்க்க முடியாத காரணத்தால் 17 ஆம் திகதி நடைபெற வேண்டிய பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. பின்னர் அறிவிக்கப்படும்.

— நிர்வாகி
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[56029]

# பஸ் நிலையக் காணியில் உள்ள கடைகளை அகற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 16

யாழ். பஸ் நிலைய காணியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் கடைகளை அப்புறப்படுத்தும் படி வடபிராந்திய போக்குவரத்துச் சபை, யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். பஸ் நிலையக் காணியில் 13 தனியார் கடைகள் கடந்த சில வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

இக்கடைகளை மூடி காணியிலிருந்து வெளியேறுமாறு போக்குவரத்துச் சபையினர் கடை உரிமையாளர்களிடம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்த போதும் கடைகள் மூடப்படவில்லை. இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ். பஸ் நிலையக் கட்டடம் விஸ்தரிக்கப்படவுள்ளதால் இக்கடைகளை மூட வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

## புவிவெளியுருவவியல்

ஆக்கியோன்: த. தியாகராசா

- ★ ஆங்கில முதல்நூல்களின் தரத்தில்(1968இல்) தமிழில் முதன் முதல் வெளிவந்த இந்நூல்
- ★ புதுப்பிக்கப்பட்டும், மேலும் விரிவாக்கப்பட்டும் வெளிவந்துள்ளது.
- ★ பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்க்கும், உயர் வகுப்புக்களில் புவியியலைக் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் உகந்தது.

(56025)

## அறிவித்தல்

பொதுக்கூட்டமும், உத்தியோகத்தர் தெரிவும்

லங்கா சிமெந்து நிறுவன கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் = கிளை காங்கேசன்துறை,

இடம்: தற்காலிக காரியாலயம் (L.C.L.) இணுவில்

காலம்: 17-05-1998 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி

சகல தொழிற்சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தலைவர் செயலாளர்

(55856)

## அறிவித்தல்

வாடிக்கையாளரின் வசதிக்கேற்ப
எமது ஸ்தாபனம்

## பீ.எஸ். சேவிஸ் ஸ்ரேசன்


ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை நடைபெறும்.
சகல வாகனங்களும் வேலைசெய்து கொடுக்கப்படும்.
புதன்கிழமைகளில் திறக்கப்படமாட்டாது.

நிர்வாகி,
பீ.எஸ். சேவிஸ் ஸ்ரேசன்,
257/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3746)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

உருவாய் 18 — 08 — 1947



அருவாய் 06 — 04 — 1998

அமரர் இராஜநாயகம் இராஜேஸ்வரன்
(Marketing Manager)

நீர் வற்றாக் கண்கள்
நீர் பெற்ற எம்மிடம்
எண் ஐந்து நாள்களாய்
எண்ணியுமை போற்றும் நாம்
எப்போதும் உமை மறவோம்.

= குடும்பத்தினர்

''சாந்தினிகேதன்''
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(56038)

## மிதிவெடியில் காயம்

யாழ்ப்பாணம், மே 16

இராணுவ காவலரண் பகுதி எல்லையைக் கடந்து சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தி காவலரண் பகுதியில் கடந்த புதனன்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் கந்தர்மடத்தைச் சேர்ந்த செல்லத்துரை செல்வம் (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ139-15)

## இளைஞர் கலாசார விருது வழங்க விரைவில் போட்டிகள்

கொழும்பு, மே 16

சமுர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாட்டில் உள்ள இளைஞர்களை ஊக்குவிக்கு முகமாக இளைஞர் கலாசார விருதுவழங்கும் போட்டிகளை நடத்தவுள்ளது.

இவ்வாண்டுக்கான போட்டிகளுக்குரிய விண்ணப்பங்கள் இளைஞர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. இதில் 17 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் கலந்து கொள்ளலாம்.

கிராமிய நடனம் (தனி, குழு), பரதநாட்டியம், நாட்டிய நாடகம், பேச்சு, சாஸ்திரிய வாத்தியம், மேலைத்தேய வாத்தியம், புதிய பாடல்கள் குழு, தனி, குறு நாடகம், அறிவிப்பாளர் ஆகிய துறைகளிலும் —

மற்றும் அபிநயம், சித்திரப் புகைப்படக்கலை, கிராமியப் பாடல் (குழு,தனி), கவிதை, பாடல் இயற்றுதல், சிறுவர் இலக்கியப் படைப்பு, சிறுகதை, நாட்டுக்கூத்து. தொலைக்காட்சி நாடகப் பிரதியாக்கம், சாஸ்திரியப் பாடல் (தனி, குழு), கதகளி நடனம், புதிய கண்டு பிடிப்பு, கார்ட்டூன், சித்திரம், நாவல், அச்சிட்டு வெளியாகியுள்ள சிறந்த பதிப்பு, வானொலி நாடகப்பிரதியாக்கம், சிறந்த பாடகர், இசையமைப்பாளர், நகைச்சுவை நடிகர், போன்றவற்றுக்கும் போட்டிகள் நடத்தப்படும்.

விண்ணப்பதாரிகள் தமக்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை தமது பிரதேசஇளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட இளைஞர் சேவைக் காரியாலயங்களூடாகப் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றினை ''1998 — இளைஞர் கலாசாரப் போட்டி விண்ணப்பம் பெறுதல்'' என்று குறிப்பிட்டு ''கலாசாரப் பகுதி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 65, ஹைலெவல் வீதி, மஹரகம'' எனும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களுக்கான முடிவு தினம் இம்மாதம் 30ஆம் திகதியாகும். (ஐ-6)

## விபூதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 16

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழக விபூதி வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் விழா கடந்த 10 ஆம் திகதி நடைபெற இருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## எள்ளுப் பயிர்ச்செய்கை மழையினால் பாதிப்பு

வலி. தென்மேற்கு, மே 16

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் மழையினால் வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் உள்ள சிறுதானியச்செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவாலி — வட்டுக்கோட்டை — கட்டுடைப் பகுதிகளில் எள்ளுச்செய்கை மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

எள்ளு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது பயிர்களை கூலியாள்கள் சகிதம் அறுவடை செய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. (ஐ-185)

## வடிசாலை உபகரணங்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 16

கோப்பாயிலுள்ள தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க வடிசாலை அனுமதி இன்றியேவடிசாராய உற்பத்தியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து வடிசாலைப் பொருள்கள் கோப்பாய் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டு யாழ். நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சுமார் 16 பரல்கள்ளும், ஏனைய உபகரணங்களுமே இவ்வாறு கைப்பற்றப் பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

பதில் நீதிவான் வழக்கை விசாரணை செய்த போது வடிசாலை சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் இது வரை வடிசாலை அனுமதி எடுத்து செயற்படவில்லை —இதனாலேயே தற்பொழுதும் அனுமதியெடுக்கவில்லை எனவும்—குறிப்பிட்டனர்.

இதனையடுத்து பதில் நீதிவான் வழக்கை எதிர் வரும் 12 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார். (ஐ-9)

## ஒத்திவைப்பு

வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையில் நடைபெற இருந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளைப் பிரதேச மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 16

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பிரச்சினைகள் குறித்து நேற்று பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது.

யாழ். மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த கிளிநொச்சி அரச அதிபர் எஸ். இராசநாயகம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 54 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் லெஹான் குணவர்த்தன உட்பட பிரிக்கேட் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பளைப் பிரதேசத்தில் உள்ள மக்கள் அனுபவிக்கும் பல்வேறு கஷ்டங்கள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ-3)

## சிறுவரின் சச்சரவினால் பெற்றோரிடையே மோதல்

### கணவன் மனைவி காயம்!

சிறு பிள்ளைகளிடையே ஏற்பட்ட சண்டை பெற்றோரின் அடிதடியில் முடிவடைந்ததில் கணவனும் மனைவியும் காயமுற்றனர்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணியளவில், பருத்தித்துறையில் உள்ள கற்கோவளத்தில் இடம் பெற்றது.

இராணுவ முகாமிற்கு அருகில் வசித்து வரும் இவர்கள், பழுதடைந்த ரியூப் பல்பினால் தாக்கப் பட்டனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த, பூராசா பகீதரன் (வயது 36), பகீதரன்-வள்ளிநாயகி(வயது 36)ஆகிய இருவரும் தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-109)

## கூட்டம்

நெடுந்தீவில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் வேலைகளில் பொதுமக்களின் பங்களிப்புக்குரிய நிதியைச் சேகரிப்பதற்காக அரசாங்க ஊழியர்கள் பொது மக்கள் அடங்கிய பொதுக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-111)

## சண்டிலிப்பாயில் 120 பேர் ரூ. 5 ஆயிரம் பெற்றனர்

சண்டிலிப்பாய், மே 16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மேலும் 120 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர்ந்தவர்கள் தங்களது விண்ணப்பத்தில் தெரிவித்திருந்த வங்கிக்கணக்கு இலக்கங்களுக்கு இக் கொடுப்பனவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## மந்திகை ஆஸ்பத்திரி எக்ஸ்-றே இயந்திரம் பழுது

மந்திகை மருத்துவமனையின் ''எக்ஸ்—றே'' கதிர்வீச்சு இயந்திரத்தின் மின்மாற்றி பழுதடைந்திருப்பதனால் சத்திர சிகிச்சைக்குரிய நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக பழுதடைந்த இந்த இயந்திரம் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டும் திருத்த முடியாத நிலையில் மீண்டும் மந்திகை ஆஸ்பத்திரிக்கே எடுத்துவரப்பட்டுள்ளது.

''எக்ஸ்—றே'' இயந்திரம் பழுதடைந்தமையினால் நோயாளிகள் யாழ். போதனா மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். (ஐ-109)

## பல்கலைக்கழகத்துக்கு இந்திய கவுன்ஸிலர் உறுதி

யாழ். பல்கலைக்கழக வளர்ச்சிக்கு தன்னாலான உதவிகளை வழங்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதாக இந்தியத் தூதரக அரசியல்துறை கவுன்ஸிலர் சச்சதேவ் ராஜேஷ்குமார் உறுதி அளித்துள்ளார்.

நேற்று முன் தினம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தஅவர் அங்கு உள்ள பிரச்சினைகள் குறித்து துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் க.குணராஜா ஆகியோரிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

பல்கலைக் கழகத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக அவருக்கு விளக்கிக் கூறப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகப் பாவனைக்கு வேண்டிய உபகரணங்கள், புத்தகங்கள், போன்றவற்றை வழங்கும் படியும்—

பல்கலைக்கழக ஊழியர்களும், மாணவர்களும் பயணம் செய்வதற்கான பஸ் ஒன்றையும், சமஸ்கிருதத்தில் அமைந்த தட்டச்சு இயந்திரம் ஒன்றையும் வழங்கும்படியும்—

விரிவுரையாளர்கள் இந்தியா சென்று மேற்படிப்பை மேற்கொள்ள உதவும்படியும் பல்கலைக்கழகம் சார்பாகக் கேட்டுக் கொள்ளப்பட்டபோது இவற்றை வழங்க தன்னால் இயன்ற முயற்சிகளை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார் என துணைவேந்தர் தெரிவித்தார். (இ-9)

## தப்பி ஓடிய படையினரில் 283 பேர் கைதாகினர்

கொழும்பு, மே 16

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களில் 283 பேர் கடந்த 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப்பொலீஸ் மாஅதிபர் காமினி குணரத்தின நேற்று முன்தினம்தெரிவித்தார்.

கண்டியில் 57 பேரும், குருநாகலில் 31 பேரும், அநுராதபுரத்தில் 27 பேரும், மாத்தறையில் 21 பேரும் கைதானவர்களில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தப்பிஓடிய படையினர் குறித்துத் தகவல் கொடுப்பவர்களுக்கு 250 ரூபாயும், கைது செய்யும் பொலீஸாருக்கு 500 ரூபாவும் சன்மானம் வழங்கப்படுகிறது.

அதேநேரம் — தப்பிஓடிய படையினருக்கு புகலிடம் வழங்கிய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-10-21)

## சைவசித்தாந்த கருத்தரங்கு

கொழும்புத்துறை, மே 16

கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சைவசித்தாந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினராக இணுவில் மகாவித்தியாலய அதிபர் சைவப்புலவர் எஸ். திருஞானசம்பந்தபிள்ளையும் கலந்துகொள்வார். (ஐ-30)

## சுகாதாரக்குழு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாநகரசபை சுகாதாரக்குழுவினர் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். வர்த்தக சங்க நிர்வாகிகளையும், 25 ஆம் திகதி யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

யாழ். மாநகர சபை சுகாதாரக்குழுத் தலைவர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடல் யாழ். மாநகர சபையில் நடைபெறவுள்ளது. (ஐ-5)

# செய்திக் கொத்து

### ஒலி பெருக்கி அனுமதி

நெல்லியடி, மே 16

வடமராட்சிப் பகுதியில் பொது வைபவங்களுக்கு ஒலி பெருக்கியைப் பயன்படுத்த விரும்புவோர் அதற்கான பொலீஸ் அனுமதிப்பத்திரத்தை பத்து நாள்களுக்கு முன் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-109)

### சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

சுன்னாகம், மே 16

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் சைக்கிள்கள் ஒழுங்கின்றி பல இடங்களிலும் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-27)

### ஊர்காவற்றுறை பிரதேச விளையாட்டு விழா

நெடுந்தீவு, மே 16

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் பிரதேச செயலக விளையாட்டரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களானடக்ளஸ்தேவானந்தா, எஸ். சிவதாசன், கமநல சேவை உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-111)

### சுன்னாகத்தில் வெசாக் வைபவம்

சுன்னாகம், மே 16

வெசாக் தினத்தன்றும் மறுநாளும் சுன்னாகம் பஸ் நிலையத்திலுள்ள அரச மரத்தின் கீழ் இராணுவத்தினர் மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டனர்.

வெளிச்ச வீடுகள், வர்ண விளக்குகள் ஒளிரத் தொங்கவிடப்பட்டன.

இரவு 7 மணி முதல் நடைபெற்ற இந் நிகழ்ச்சிகளைப் அப்பகுதி மக்களும் பார்வையிட்டனர்.

மருதனார்மடம், கோண்டாவில் பகுதிகளில் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டு, வெளிச்சக்கூடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஐ-27)

### சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 16

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் விழிப்புலனற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதியத்திற்காக இன்று நடத்த இருந்த அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி சீட்டிழுப்பு அடுத்த மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்று யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஐ-4)

### நாடகப் போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், மே 16

குரும்பசிட்டி சன்மார்க்க சபை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் நாடக வளர்ச்சி நிதியத்தின் ஆதரவில் நடத்திய தனி நடிப்புப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் அரியாலை பொ. விஜயரட்ணமும், கனிஷ்ட பிரிவில் எஸ்- தீபனும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். (ஐ-8-9)

## தென்மராட்சியில் புதிய பங்கீட்டு அட்டைகள்

தென்மராட்சி, மே 16

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சகல குடியிருப்பாளர்களுக்கும் புதிய பங்கீட்டு அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

குடியிருப்பாளர்கள் தற்போது பாவனையில் உள்ள பங்கீட்டு அட்டையை ஒப்படைத்து புதிய பங்கீட்டு அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# ஒற்றுமையை விரும்பாத சக்திகளே தாக்குதலை நடத்தி இருக்கலாம்

## அஞ்சலிக் கூட்டத்தில் மாணிக்கதாசன் உரை

வவுனியா, மே 16

தமிழ் சக்திகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பதை நாம் அண்மைக் காலமாகபலமாக வலியுறுத்தி வந்தோம். அந்த ஒற்றுமையை விரும்பாத சில சக்திகளே இந்த தாக்குதலை செய்திருக்கின்றன. இதனை செய்த சக்தி எதுவென அறிந்து பதிலடி கொடுப்போம்.

இவ்வாறு கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய புளொட் இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளரும் உபதலைவருமான மாணிக்கதாசன் தெரிவித்தார்.

[illegible] 10-00 மணியளவில் வவுனியா கோவில் குளத்திலுள்ள உமாமகேஸ்வரனின் சமாதி மைதானத்தி வைத்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு வவுனியா நகர சபைத் தலைவர் ஜி.ரி. லிங்கநாதன் தலைமை வகித்தார்.

தமிழ்க் கட்சிகள் இடையிலான ஒற்றுமையைக் குழப்பும் நடவடிக்கைகளை மக்கள் எதிர்க்கவேண்டும். தொடர்ந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தலைவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

வன்னி நாடாளுமன்றஉறுப்பினர் சண்முகநாதன் பேசுகையில்: இந்த தாக்குதலால் தமிழ் மக்களுக்கு ஒரு நன்மை கிடைக்குமென்றால் அதை நாம் ஏற்றுக் கொள்வோம். ஆனால் இது தனிப்பட்ட ரீதியில் — குரோதத்தில் செய்யப்பட்டது. இதை எவர் செய்திருந்தாலும் எமது கட்சி சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறோம் —என்றார்.

கூட்டத்தில் வர்த்தகர் சங்கத் தலைவர் அப்துல்லா, மூஸ்லிம் மக்கள் சார்பாக நகர சபை உறுப்பினர் ஆரிப் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன் ஆகியோரும் உரையாற்றினர்

கூட்டத்தை தொடர்ந்து சடலங்கள் கோயில் குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டன.

இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து வவுனியாவில் சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. வாகனங்கள் எதுவும் ஓடவில்லை. நகரெங்கும் கறுப்புக் கொடிகளும் வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன. (இ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினி ஒழிப்புக்கான நிறுவனம் பழமரம் செய்கையை ஊக்குவிக்கும்

யாழ்ப்பாணம், மே 16

பழ மரச் செய்கையை ஊக்குவிக்கும்நோக்குடன்பட்டினிஒழிப்புக்கான நிறுவனம் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக ஐயாயிரம் பயனாளிகளுக்கு உதவும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள 44 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பயனாளிக்கும் மாங்கன்று, தேசிமரம், கமுகு, பழமரம் பெறும் பயனாளிகள் தெரிவு ஜூன் மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளதுடன் பயனாளிகளுக்கு பழமரச் செய்கை சம்பந்தமான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படும்.

தோடை, கொய்யா என்று 5 பழமரங்களும் ஒரு மண்வெட்டியும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 3 ஆயிரத்து 200 மாமரங்களுக்கு மாவிலை தத்தியைக் கட்டுப்படுத்த இலவசமாக மருந்து விசிறப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# சகலருக்கும் கல்வி வசதி செய்த பெருமை யாழ்ப்பாணக் கல்லூரிக்கே

யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறினோர் வெறும் மாணவர்களாக வெளியேறவில்லை. அவர்கள் தலைசிறந்த. ஆழ்ந்த புலமைமிக்க மாணவர்களாகவும் பல கண்டுபிடிப்புக்களை செய்த விஞ்ஞானிகளாகவுமே வெளியேறியுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இன்று நூற்றி எழுபத்தைந்தாம் ஆண்டின் சிகரத்தை நோக்கிய விழாவிற்குத் தயாராகின்றது. கல்லூரியின் பாரம்பரியங்களையும் கற்பித்த ஆசான்களையும் சமூகம் நன்றியறிதலோடு ஏற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணக்கல்லூரியின் அதிபர் திரு. ஜி. இராஜநாயகம் ''ஒட்லி'' மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து வெளியேறியவர்கள் இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் பெருமளவு வருமானம் பெறத்தக்க தொழில்களில், பதவிகளில் ஈடுபட்டுள்ளனர். —

சாதி வேற்றுமை காட்டாது, குறைந்தவர்கள் என கூறப்படுவோருக்கும் கல்வி கற்க வசதிசெய்து கொடுத்த பெருமை முதலில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கே உண்டு, இலங்கையில் இருந்து மட்டுமல்ல சாம்பியா, நோர்வே, இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்தும் பட்டதாரி கல்விபெற மாணவர்கள் இக்கல்லூரிக்கு படையெடுத்த காலமும் உண்டு — என்று அதிபர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

நூற்றி எழுபத்தைந்தாம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரி காலடி எடுத்து வைக்கும் வேளையில் கல்லூரி மிகப் பெரிய கல்விக் கண்காட்சிகளையும், போட்டிகளையும் நடத்தவுள்ளது என்றும் அவர் சொன்னார். (அ-185)

# பெரும் போக நெல் விளைவு ஒரு மாதத் தேவைக்கே போதும்!

யாழ்ப்பாணம், மே 16

1997-98 பெரும் போக நெற் செய்கையில் 13, 300 மெற்றிக் தொன் விளைவு கிடைத்துள்ளதாக யாழ். விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த போகத்தை விட இம் முறை விளைவு அதிகரித்துள்ள போதிலும் இவ் விளைவினால் யாழ். மாவட்டத்தின் ஒருமாத தேவையை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும் என்று உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் (1998 – 99) பெரும் போகத்திற்கான நல்ல விதை நெல்லை விவசாயிகள் இப்போதே கொள்வனவு செய்து பாதுகாத்து வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

கடந்த போகம் நல்ல விளைவுகிடைத் திருப்பதால் தரமான நெல்லை வைத்திருப்பவர்களிட மிருந்து விதைக்கான நெல்லைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர் வரும் பெரும் போகத்திற்காக 4 ஆயிரம் புசல் நெல்லை விவசாய திணைக்களத்திலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார், (அ-5)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை

**M. A. தம்பிரட்ணம்**

09-05-98 இல் கொழும்பில் காலமானார்.
அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

56041)



## அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச செயலக
விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான
விளையாட்டுப் போட்டி – 1998

**1998-05-15** வெள்ளிக்கிழமை, **1998-05-16** சனிக்கிழமை நடைபெற இருந்த மேற்படி விளையாட்டுப் போட்டி தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்,
ஊர்காவற்றுறை.

(56040)


## இராணுவ...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வரப்பட்டு — அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டது தெரிந்ததே—

இதே போன்ற நெருக்கடி நிலையை இராணுவத் தளபதி லெப்டினன்ட ஜெனரல் ரோஹான் தலுவத்தையும் எதிர்நோக்க வேண்டி வரலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மைக் காலமாக இராணுவத் தளபதி வெளியிட்டு வரும் கருத்துக்கள், அரசியல் ரீதியானவை என்றும் —

அக்கருத்துகள் அரசுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்திவருகின்றன என்றும்—

அரச உயர் மட்டத்தில் புகைச்சல்கிளம்பியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் —

இராணுவ சேவைக்கு பாடசாலை மாணவர்களைத் திரட்டுவதற்கான பிரசார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் —

இராணுவத் தளபதி அண்மையில் பகிரங்கமாக வெளியிட்ட கருத்துக்கள் அரச உயர்பீடத்தை சினக்கவைத்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசியல்வாதிகள் போன்று இராணுவத் தளபதி, வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு கருத்து வெளியிடுவதை அரச உயர்பீடம் விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

கடந்த செவ்வாயன்று தமது அலரிமாளிகை வாசஸ்தலத்தில், அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களுடன் இந்த விடயம் குறித்து ஜனாதிபதி குமாரதுங்க விரிவாக ஆலோசனை நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்தே —

தற்போதைய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தலுவத்தவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு —

தற்போது சிரேஷ்ட இராணுவ அதிகாரியாகப் பணிபுரியும் மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவை லெப்டினன்ட் ஜெனரல் பதவி உயர்வுடன் இராணுவத் தளபதியாக நியமிப்பது குறித்து உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில்—

இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸை மிரட்டிய சம்பவம் தொடர்பாக இரு விமானப்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருப்பதை அடுத்து, தற்போது ஓய்வு பெற்றுச் சென்றிருக்கும் முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவும் இந்த விடயம் தொடர்பாகக் கைது செய்யப்படுவார் என்ற பேச்சு சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் அடிபடத் தொடங்கியுள்ளது.

விமானப் படையினருக்கு விமானங்கள், ஹெலிகள் கொள்வனவு செய்வதில் பெரும் ஊழல்கள் இடம் பெற்றதாகத் தெரிவித்து அவற்றை அவ்வப்போது இக்பால் அத்தாஸ் அம்பலப் படுத்தி வந்ததும்—

அதனால் அத்தாஸ் மீது அப்போதைய விமானப் படைத் தளபதி கடுஞ் சீற்ற முற்றிருந்தார் என்பதும்—

இதன் விளைவாக அத்தாஸ் வீட்டுக்குள் குண்டர் படை புகுந்து அவரை மிரட்டியது என அப்போது செய்திகள் வெளியாகியிருந்ததும் —தெரிந்தவையே.


நன்கு இயங்கும்

**பேக்கரி**

கமிஷனுக்கு
கொடுக்கப்படும்.

தொடர்பு:-

**ராம்**

இல. 39, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.

(56032)


# அதிரடி அரங்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் 108 பேருக்கு வீடுகட்டுவதற்கு கடன் வழங்கவென வந்த பெருந்தொகைப் பணம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் — கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் வீடுகட்ட முடியாது என்ற காரணத்தைக் காட்டி — கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியான பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குத் திருப்பப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது.

பளைப் பிரதேச செயலர் பிரிவு தற்காலிகமாக யாழ். மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு, யாழ். அரச அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது. அதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் வசதிகளை யாழ். அரச அதிபரே செய்து வருகின்றார்

அப்படியிருக்க, கிளிநொச்சிக்குரிய — வீடு கட்டுவதற்கான கடன் வசதி — ஏன் அவசரமாக பளைக்குத் திருப்பப்படுகின்றது? இப்போது வீடில்லாமல் அவதிப்படுகின்ற — அவலப்படுகின்ற — மக்கள் கிளிநொச்சியின் வன்னிப்பகுதியில் உள்ள நம்மவர்கள் தான். கஷ்டப்படும் நமது மக்களின் பணத்தைச் சுரண்டி, இங்குள்ள மக்களுக்கு வழங்குவதற்கு, நமது அதிகாரிகளே முயலலாமா? இது என்ன நீதி?

★ ★ ★ ★ ★

தென்மராட்சி அம்பாள் ஆலயம் ஒன்றில் நடந்த சம்பவம் இது. எந்தப் பக்கம் சரி, எந்தப் பக்கம் பிழை என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

அந்த ஆலயத்தின் பூசகர் பூசை வேளைகளில் அருள் பெற்று — கலை ஆடி — வாக்குச் சொல்வதாகக் கூறப்படுகின்றது.

பாலஸ்தாபனம் செய்யப்பட்ட ஆலயத்தில் படிக்கல் வைப்பதற்கு பரிபாலன சபையினர் நாள் குறித்தனர். அந்த நாளில் மக்களும் கூடியிருந்தனர். அன்றைய தினத்தில் படிக்கல் வைக்க வேண்டாம் என அம்பாள் தனது கனவில் வந்து கூறியதாக பூசகர் கூறினார். ஆனால் மக்கள் அதை ஏற்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

அதன் பின் பூசகருக்கு கலை வந்தது. அப்போது, அம்பாள் உக்கிர நிலையில் உள்ளதாகவும், படிக்கல் வைக்க வேண்டாம் எனவும் கலையில் கூறப்பட்டதாம். ஆனால் அந்த வாக்கையும் மக்கள் ஏற்றுக் கொள்ளாததால் கோபமுற்ற பூசகர் அம்பாளின் எழுந்தருளி விக்கிரகத்தைத் தூக்கிச் சென்று ஆலயக் கிணற்றில் போட்டுவிட்டாராம்.

இச் சம்பவம் தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பூசகர் ஆலயக் கிணற்றிலிருந்து சிலையை மீட்டு ஆலய நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தார்

இச் சம்பவத்தையடுத்து பூசகர் ஆலய நிர்வாகத்தினரால் பூசை செய்வதிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

★ ★ ★ ★ ★

''டைட்டானிக்'' — சமுத்திரத்தில் மூழ்கிய பிரமாண்டமான ஒரு கப்பல் பற்றிய திரைப்படம். மிகப்பரபரப்புடன் அது அண்மையில் வெளியானது தெரிந்ததே. சற்று நீண்ட — ஆரம்பம் முதல் விறுவிறுப்பான— இந்தத் திரைப்படத்தை திரையிட்டு லாபம் சம்பாதிக்க முயன்ற நமது உள்ளூர் மினிசினிமாக்கள் அதிலும் 'குசும்பு' பண்ணத் தவறவில்லை.

நீண்ட படமாதலால் ஒரே திரைப்படத்தை இரண்டு பிரிவுகளாக்கி 'டபிள்' வருமானத்துக்கு வழி பண்ணிக்கொண்டார்கள் மினிசினிமா பிரகிருதிகள்.

முழுப்படத்தையும் பார்க்கச் சென்றவர்கள் ''முதலாம் பாகம் முடிந்தது'' என்ற அறிவிப்பை வாசித்துக்கொண்டு அரைவாசியில் வெளியேற வேண்டியதாயிற்று.

எஞ்சிய படத்தைப் பார்ப்பதற்கு இன்னொரு தடவை டிக்கெட் எடுத்து பார்க்க வேண்டிய பரிதாபம் அவர்களுக்கு!

★ ★ ★ ★ ★

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் உப அதிபர் ஒருவர் மிரட்டப்பட்டு இன்னொரு பாடசாலைக்கு முறையற்றவிதத்தில் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக புகார் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட உப அதிபர் ஞாயிற்றுக்கிழமையன்று தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் நின்ற சமயம் சம்பந்தப்பட்ட கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சாரத்துடன் அங்கு சென்று பலபேர் முன்னிலையில் கடுமையான தொனியில் அந்த உப அதிபரைப் பேசி, மிரட்டியதுடன் இடமாற்றத்துக்கான சம்மதத்தைத் தெரிவித்து ஒப்பம் போடாமல் விட்டால் பழிவாங்கப்படுவீர் என எச்சரித்து ஒருவாறு தாம் கொண்டு வந்த கடிதத்தில் அந்த உப அதிபரின் கையொப்பத்தையும் பெற்றுச் சென்றதாகத் தகவல்.

பின்னர் ஒரு நாள் உப அதிபரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிள் அனுப்பி கூப்பிட்டு இடமாற்றக் கடிதத்தைக் கொடுத்து உடனடியாக பதவியை ஏற்குமாறு கட்டாயப்படுத்தினாராம். சம்பந்தப்பட்ட உப அதிபர் அவ்வாறு செய்யாது தாமதிக்கவே இன்னொரு பாடசாலை அதிபர் மூலமாக பதவியேற்காவிடில் சம்பளத்தை நிறுத்துவதாகவும் வடமராட்சி கிழக்குக்கு இடமாற்றம் செய்யப் போவதாகவும் எச்சரித்தாராம் அதிகாரி.

கட்டாயத்தின் பேரில் சம்பந்தப்பட்ட உப அதிபர் பதவியேற்ற பாடசாலை அந்த அதிகாரத்தனம் மிக்கவரின் சொந்த ஊரில் உள்ளது. புதிய வலயம் பிரிக்கப்படுவதற்கு முன்னர் செய்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தக் கட்டாய இடமாற்றம் நடத்தப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது.

இது குறித்து அந்த உப அதிபரின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பல்வேறு கட்சிகளின் பெயர்களுடன் வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்து விட்டு பதிலுக்குக் காத்திருப்பதாகத் தெரிகின்றது.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சிவாசிகள் ஆறு பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

கடந்த ஆறாம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த 6 பேர் விசாரணைகளின் பின்னர் நேற்று யாழ். அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வருமானம் இல்லாத நிலையில் கிளிநொச்சி முன்னணிக் காவலரண் பகுதிகளில் தேங்காய் பிடுங்குவதற்காகச் சென்ற சமயம் இராணுவத்தினர் இவர்களைக் கைது செய்துஆனையிறவுஇராணுவ முகாமிற்குக் கொண்டு சென்றதாகத்தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் திருப்பி தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-6)

# படையினர் - பொதுமக்கள் நல்லுறவு தொடர்ந்து சீராகப் பேணப்படும்!

## புதிய வடமராட்சித் தளபதி தெரிவிப்பு

பருத்தித்துறை, மே 16

வடமராட்சிப் பகுதியின் புதிய கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள கேணல் சனத் கருணாரத்ன நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணிகள், வர்த்தகர்கள், கிராம சேவையாளர்கள் போன்ற உள்ளூர் பிரமுகர்களை அழைத்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் பிரிகேடியர் லறி விஜேரத்னா கொல்லப்பட்டதன் பின்னர் முன்னிரவில் இச்கூட்டத்தை அவர் கூட்டினார்.

இது போன்ற குண்டு வெடிப்புச்சம்பவங்கள் நடைபெறுவது பற்றி அதிகம் கவலைப்படக் கூடாது எனவும்—

படையினர் — பொதுமக்கள் உறவு முன்னர் போல் தொடர்ந்து பேணப்படும் எனவும்—

பொதுமக்கள் அமைதியுடனும், மகிழ்வுடனும் வாழ்வதற்குதன்னாலானமுயற்சிகள் அனைத்தையும் தாம் எடுக்கப் போவதாகவும்—

மக்கள் கலக்கமடையாமல் பொறுமையாக இருக்க வேண்டும் எனவும்—

அக் கூட்டத்தில் புதிய கட்டளைத் தளபதி தெரிவித்ததாக அறியவந்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து அப் பகுதிகளில் நேற்றுப் பாடசாலைகள் நடைபெறவில்லை; அனேகமாக கடைகள் பூட்டப்பட்டிருந்தன. திறந்திருந்த சில கடைகளிலும் வெள்ளைக் கொடிகள், கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்தும் குறைவாகவே காணப்பட்டன.

(உ-109-173-139-9-118)

# வடமராட்சி இளைஞர் கொழும்பில் பலி!

யாழ்ப்பாணம், மே 16

கொழும்பு கல்கிசைக் கடலுக்கு நீந்தச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் காலிப் பகுதிக் கடலில் சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்தநான்கு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த ஸ்ரீஸ்காந்தராசா ஸ்ரீகஜேந்திரன் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் கொழும்பில் தனியார் கல்வி நிறுவனமொன்றில் கணக்காளர் நெறிக்கு கல்வி பயின்று கொண்டிருந்தவராவார். (உ-15)

# உதைபந்தாட்ட போட்டிகள்

வலிகாமம் தெற்கு, மே 16

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முதல் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன்'பி'பிரிவு அணியினரை எதிர்த்து சுன்னாகம் தெற்கு காந்திருபன் (நியூஸ்ரார்) அணியினரும்—

இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் 'ஏ' அணியினரை எதிர்த்து மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் அணியினரும் — மோதுவர். (உ-152)

# இன்று பரீட்சை

யாழ்ப்பாணம், மே 16

மதுவரி பயிலுநர் பாதுகாவலர் நுண்ணறிவுபரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர்மங்கையர்க்கரசிவித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் பாதுகாவலர் மட்டுமே தோற்றுவார்கள் என்று மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் வீ. துரைராஜா தெரிவித்தார்.

# பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 16

கூட்டிச் சென்ற மாடு திடீரென வெருண்டு ஓடத் தொடங்கியதால் மாட்டின் கயிற்றைப் பிடித்துச்சென்ற பெண் கயிற்றைப் பிடித்த பிடியில் மாட்டுடன் இழுபட்டு விழுந்து உடல் பூராவும் காயமடைந்தார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவஞானம் புனிதவதி (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாட்டுடன் நீண்டதூரம் இழுபட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ)

# தொகுப்புரை வானொலியில்

யாழ்ப்பாணம், மே. 16

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பங்குனித் திங்கள் மஹோற்சவ நிகழ்ச்சியின் வானொலித் தொகுப்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணி முதல் 6.30 மணி வரை ஒலிபரப்பப்படவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியை அறிவிப்பாளர் ரீ. உருத்திராபதி தொகுத்து வழங்குகிறார். (உ-10-3)

# தொழில்நுட்ப கல்வி வலயம் உருவாகிறது

யாழ்ப்பாணம், மே 16

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் இயங்கும் தொழில் நுட்பக்கல்லூரிகளை நிர்வாக ரீதியாக ஒன்றிணைத்து — வடக்கு, கிழக்குக்கு என புதிதாக உருவாக்கப்படும் நான்காவது தொழில் நுட்பக் கல்வி வலயத்தின் பணிப்பாளராக யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கே. ஜெயரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள மூன்று வலயங்களுக்கு மேலதிகமாக உருவாக்கப்படும் இந்தப் புதிய வலயத்துக்கு கே. ஜெயரத்தினத்தைப் பணிப்பாளராக நியமிக்கும் கடிதம் கடந்த 13ஆம் திகதி அனுப்பப் பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, சம்மாந்துறை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் அமைக்கப்படவிருக்கும் தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கு பொறுப்பாக இந்தப் புதிய வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. (உ-3-9)

# யெகோவா மாநாடு

யாழ்ப்பாணம், மே 16

யெகோவாவின் சாட்சிகளது வட்டார மாநாடு இன்றும், நாளையும் காலை 9.00 மணிமுதல் நல்லூரில் உள்ள இளங் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

''யெகோவாவின் நாளை மனதில் இடைவிடாது வைத்தல்'' என்ற தலைப்பில் நடைபெறும் இந்த மாநாட்டில் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு ''யெகோவாவுடைய நாள் நெருங்கி வருகையில் ஞானமாக நடந்துகொள்ளுங்கள்'' என்னும் தலைப்பில் விசேட உரை இடம் பெறவிருக்கிறது. (உ-3)


**ராஜா** யாழ்ப்பாணம்

2 ஆவது வாரமாக

மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடித்த

**ஒளிவிளக்கு**

தினசரி பிற்பகல் 1-00, 4-00 மணி (புதிய நேரம்)

சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்

காலை 10-00, 1-00, 4-30 மணிக்கும் காட்சிகள் காண்பிக்கப்படும். (சி/3756)


## 'எயிட்ஸ்' பீதி பரவியுள்ள இவ்வேளையில்

# யாழ். போதனா ஆஸ்பத்திரியில் 'சிறிஞ்சு'களுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 16

யாழ். போதனா வைத்தியசாலையில் ஊசி மருந்து போடுவதற்கான 'சிறிஞ்ச்' வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

'எயிட்ஸ்' பீதி உருவாகியுள்ள இவ்வேளையில் ஆஸ்பத்திரியில் மிக அவதானத்துடனேயே ஊசி மருந்துகள் கையாளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்சமயம் ஒருதடவை பாவித்துவிட்டு எறியும் 'டிஸ்போஸல்' வகை சிறிஞ்சே பாவனையில் இருந்து வருகிறது. பற்றாக்குறையை அடுத்து இத்தகைய ஊசிகளை அவித்துத் தொற்று நீக்கிப் பாவிக்கும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

கொழும்பில் இருந்து குறைந்தளவு சிறிஞ்ச்சுகள் அனுப்பப்படுவதே பற்றாக்குறைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் யாழ். ஆஸ்பத்திரி மிகச்சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர் அதிகரித்துள்ள இக் காலவேளையில் சுமார் 50 ஆயிரம் சிறிஞ்சுகள் தேவைப்படும் இடத்தில் அதில் எட்டில் ஒரு பங்கு தானும் அனுப்பிவைக்கப்படுவதில்லை என நிர்வாக மட்டத்தில் குறை கூறப்பட்டது.

இவ்வாண்டு முதற்காலாண்டுக்குத் தேவையான சுமார் 50 ஆயிரம் சிறிஞ்சுகளை அனுப்பும்படி கேட்டபோதும் அதற்குப் பதிலாக 6 ஆயிரம் சிறிஞ்சுகள் மாத்திரமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி ந. கனகரத்தினம் தெரிவித்தார். (உ-15)

# 'எக்ஸ்றே' பிரிவும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். போதனா வைத்தியசாலை ''எக்ஸ்றே'' பிரிவு நேற்று முதல் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

'எக்ஸ்றே' பிரிவில் பாவனைக்குரியமருந்து வகைகள், 'பிலிம்' வகைகள் முற்றாக முடிவடைந்துள்ளதை அடுத்தே இப்பிரிவு செயலிழந்துள்ளது.

இம்முறை மருந்து வகைகளுடன் வந்தசெஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினரின் கப்பலில் பிலிம் மற்றும் மருந்து வகைகள் வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவை கப்பலில் எடுத்து வரப்படவில்லை.

கொழும்பு தலைமைப் பீடத்துடன் எத்தனை முறை தொடர்புகொண்ட போதிலும் பலன் எதுவுமற்ற நிலையில் எக்ஸ்றே பிரிவு இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி நிர்வாகமட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி தற்போது யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்துள்ள சுகாதார அமைச்சின் பிரதிச்செயலாளரிடம்நேற்று நேரடியாகவே முறைப்பாடு செய்யப்பட்டபோது அவர் அதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

'எக்ஸ்றே' பிரிவு இயங்காத நிலையில் இருப்பதால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் மற்றும் அவசர அனுமதி நோயாளர்களின்வைத்தியசேவைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியவட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

யாழ் மாவட்டத்திலுள்ள-மாகாணசபையின் கீழ் இயங்கும் — ஏனைய வைத்தியசாலைகளின் 'எக்ஸ்றே' தேவைகளையும், யாழ். போதனாவைத்தியசாலையே நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-15-139)

# பணிப்பாளர் வருகை

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வைத்தியசாலைகளின் தாதிகள் பொறுப்புப் பணிப்பாளர் திருமதி குசும் விதானகே யாழ். ஆஸ்பத்திரி வார்ட்டுகளுக்கு நேற்றுச் சென்று தாதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தார்.

வார்ட்டுகளில் நோயாளர்களுடன் இருக்கவேண்டிய உறவுகள், பராமரிப்பு போன்றவை தொடர்பாக அவர் தாதிய உத்தியோகத்தர்களுக்கு விளக்கமும் அளித்தார்.

பிரதம தாதிகள் அலுவலகத்தில் நடந்த விருந்துபசாரத்திலும் அவர் கலந்து கொண்டார். (உ-139)

# திருட்டு வழக்கில் விளக்க மறியல்!

யாழ்ப்பாணம், மே 16

பொன்னாலையில் ஆலயம் ஒன்றில் மணியை திருடியதாகக்குற்றம் சாட்டப்பட்ட இளைஞர் ஒருவர் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இளவாலைப் பொலீஸாரினால் ஆஜர் செய்யப்பட்டார்.

இவ்வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் க. அரிய நாயகம் குற்றம் சாட்டப்பட்ட கந்தசாமி தயாளன் என்ற இளைஞரை இம்மாதம்26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-5)

# பாடசாலை உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 16

இன்றும் நாளையும் யாழ். மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவிருந்த உபமாகாண மட்டத்திலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி [illegible] ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



**அருண்**

புளொக் தயாரிப்பாளர்

அத்துடன்

குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்

O போட்டோ பிரதிகள்

O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க அனைத்துத் தமிழ் எம். பிக்களையும் கொண்ட குழு ஒன்றை அமைக்குக!

### யாழ். மாநகர சபைக்கு பிரேரணை

யாழ்ப்பாணம், மே 16

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை அமைக்கவேண்டும்.

அந்தக்குழு மூலமாக குறிப்பிட்டகால எல்லைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதும், விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான திட்டமொன்றை நடைமுறைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனதிபதியைக்கோரும் தீர்மானம் ஒன்றுக்கு யாழ் மாநகரசபை உறுப்பினர் வ. பரமசிவம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவிருக்கும் யாழ். மாநகரசபையின் கூட்டத்தில் விவாதிக்க முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ள ஏனைய பிரேரணைகள் வருமாறு:-

★ தந்தை செல்வா நினைவாக நினைவு மலர் ஒன்றை யாழ். மாநகரசபை வெளியிடவேண்டும். அத்துடன் அவரின் உருவப்படமொன்றையும் மாநகரசபை சபா மண்டபத்தில் திறந்துவைக்க வேண்டும்.

★ யாழ். கரையோரப் பகுதியில் உள்ள மீனவர்கள் பிற்பகல் 4.00 மணி தொடக்கம் மறுநாள் காலை 6 00 மணி வரை ஆழ்கடலில்மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும். மாநகர முதல்வர் இராணுவ அதிகாரியை அழைதது நேரடியாகக் கலந்துரையாடி விரைவில் இந்த நடைமுறை அமுலுக்குவர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் தங்கியிருக்கும் படையினர் மாற்று ஏற்பாடு செய்து, அந்த வீடுகளை உரிமையாளருக்கு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

★ யாழ். மாவட்ட மக்கள் வெளியிடங்களுக்குத் தமது பயணத்தை மேற்கொள்ள வசதியாக வாரம் ஒருதடவையாவது ஆயிரம் பேர் செல்லக் கூடிய கப்பல் ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

★ கட்டடப் பொருள்களை மக்கள் நியாயமான விலையில் பெறக்கூடிய வகையில் கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(உ-3)

## இந்தோனேஷியாவில் நெருக்கடி தீவிரமாகிறது

லண்டன், மே 16

இந்தோனேஷியாவில் ஆட்சிக்கு எதிரான கலகக்காரர்களுக்கும், அரசாங்கப் படைகளுக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் இருநூறுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஜகார்த்தாவின் மையப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றைத் தீயிட முயன்ற கலகக்காரர்களில் இருநூறு பேர் கடையில் திடீரெனத் தோன்றிய தீயில் சிக்குண்டு உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

சோலோ, பதாம் ஆகிய இரண்டு நகரங்களிலேயே கலவரம் பெரியளவில் இடம் பெற்றது.

பதாம் நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் கலகக்காரர்களின் ஆக்கிரமிப்பிற்கு பெரிதும் உட்பட்டன. இவ் வர்த்தக நிலையங்களில் இருந்து பொருட்களை பலரும் அள்ளிச் சென்றனர்.

ஜனாதிபதி சுஹார்ட்டோ மேற்படி கலவரத்தைத் தொடர்ந்து முக்கிய அமைச்சர்களையும், இராணுவத் தளபதிகளையும் சந்தித்து நேற்று அவசரமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

கலகக்காரர்களின் கலக முயற்சிக்குக் காரணமாக அமைந்த எரிபொருள் விலையேற்றத்தை நிறுத்தி விலையைக் குறைக்கப் போவதாக ஜனாதிபதி சுஹார்ட்டோ நேற்று அறிவித்தார். [உ-7]

## திருத்தப்படாத வீதிகள்

சுன்னாகம், வே 16

சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் நீண்ட நாள்களாக கற்கள் குவிக்கப்பட்டுள்ள போதும், இதுவரை வீதி திருத்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

திருத்த வேலைக்காகக் கொண்டுவந்து போடப்பட்டுள்ள கற்களால் தமது போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்படுவதாக மக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

இதேவேளை —

பஸ் நிலையத்துக்கு அருகாகச் செல்லும் கழிவு வாய்க்காலின் மதகு சேதமடைந்திருப்பதால் ஒருவழியாகவே பஸ்கள் செல்ல வேண்டி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ-27)

## போட்டிகள்

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் சுவரொட்டி, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை கல்விக் கோட்டப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-6)

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாநகர எல்லைக்குள் உள்ள வீதிகளை திருத்துவதற்கு 400 பரல் தார் உடனடியாக கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன் இவ் வீதிகளைத் திருத்தம் செய்வதற்கான நடவடிக்கையை யாழ். மாநகரசபை மேற்கொள்ள உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## இந்தியா ஓர் அணு ஆயுத நாடு

## பிரதமர் வாஜ்பாய் பெருமிதம்

புதுடில்லி, மே 16

இந்தியா மிகப்பெரிய அணு ஆயுத நாடாக உருவாகி வருகிறது. இதனை அடுத்தடுத்து இடம்பெற்ற அணு ஆயுத சோதனைகளும், இந்தியாவிடம் உள்ள மிகப் பெரிய அணு குண்டும் புலப்படுத்துகிறது.

—இவ்வாறு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் நேற்றுஆங்கில நாளேடு ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

அணு ஆயுத பரிசோதனைகளை இந்தியா நடத்தியதை அடுத்து பல வேறு நாடுகளும் இந்தியா மீது தடைகளை விதித்திருக்கின்றன. இதற்கு இந்தியா ஒரு போதும் அஞ்சப் போவதில்லை.

இந்தியா மேற் கொள்ளும் சகல அணுஆயுத பரிசோதனைகளும், அதன் தற்பாதுகாப்புக்கருதியநடவடிக்கைகளே. உலகின் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் இந்தியா வளர்ந்திருக்கின்றதா? என்பதை அறியவே இந்த அணுஆயுதப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தஅணு ஆயுதப்பரிசோதனைகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது.

இந்தியாவிடம் மிகப்பெரிய அணுகுண்டுஉள்ளது. அதனை வெடிக்கச் செய்யும் திறனும், கட்டுப்பாட்டு முறையும் இந்தியாவிற்கு நன்கு தெரியும்.

இந்தியாவின் சகல வகையான அணுகுண்டுப் பரிசோதனைகளுக்கும்இந்தியஎதிர்க்கட்சிகள் யாவும் எனக்கு ஒத்துழைக்கவேண்டும்-இவ்வாறு பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்தார். (உ-7)

### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

ணுவ அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டிருந்தபோது படைச் சிப்பாய் ஒருவரால் கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்டது குறித்தும் 'றோ' அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது என்று கூறப்படுகின்றது.

உயிராபத்து நிறைந்த உலகத் தலைவர்களுள் அடல் பிஹாரி வாஜ்பாயும் ஒருவராதலால், அவர் இந்த விஜயம் குறித்து சிந்தித்துச் செயல்பட வேண்டுமெனவும் 'றோ' அமைப்பு மேலும் வற்புறுத்தியுள்ளதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது. (உ-7)

## உள்ளூராட்சி ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் மே மாதத்துக்குரிய ஒய்வூதியக் கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கை வங்கியில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### சாவகச்சேரியில்...

[முதலாம் பக்கத் தொடர்]

சிப்பாய் உயிரிழந்தார். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட குண்டு ஒன்றே வெடித்ததாக பலாலி தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது, [உ-3-117]

### ஐ. நா.

(முதலாம் பக்கத் தொடர்)

என்பதாகும்.

ஐ. நாவின் இத்தகைய திட்டங்களில் சேரும் எண்ணம் ஏதும் அரசுக்கு அறவே கிடையாது. — என்றார். (உ-21-7)

### முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மருது, கல்முனை, கல்முனைக்குடி, ஒலுவில், மாவடிப்பள்ளி ஆகிய கிராமங்களிலேயே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்தும் ஸ்தம்பித்திருந்தது. எங்கும் வெள்ளைக் கொடி கட்டப்பட்டிருந்தது.

பதற்ற நிலை ஏற்படலாம் என்பதால் அங்கு பொலீஸ் காவல் போடப்பட்டிருந்தது.

புலிகளுக்கு எதிராக அப்பகுதி மக்கள் இந்த ஹர்த்தாலை அனுஷ்டித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3-7-14-21)

### பள்ளிவாசலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டது.

துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்கள் முஸ்லிம்கள் போல் வேடமணிந்து வந்ததாகவும் கூறப்பட்டது.

துப்பாக்கிப்பிரயோகம் செய்தவர்களை மடக்கிப் பிடிக்க முயன்றவர்கள் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும் —

இதில் 4 முஸ்லிம் பொது மக்கள் காயமடைந்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ14-21-3)

யாழ். மக்களின் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றும் சேவையாக

தரமான பளிச்சிடும் வண்ணப் படங்களை நவீன கொம்பியூட்டர் மூலம் உடனுக்குடன் கழுவி வழங்கும் சேவையாக கொழும்பில் 'பிரிண்ட்' செய்யப்படும் அதே தரத்தில் வழங்கும் உன்னத பணியாக

"சுப்ப ஸோ" கலர் படச் சேவை

மிளிர்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பதினைந்து நிமிட நேரத்தில் உங்கள் கலர் படச்சுருள்களை நவீன கொம்பியூட்டர் மூலம் கழுவிப்பெற்றிட இன்றே நாடுங்கள்

"சுப்ப ஸோ", கலர் படச் சேவை

இல. 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: சுப்ப ஸோ வீடியோ

ரவி ஒளி கானம்

இல. 100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3757)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி சஞ்சிகை

16 — 05 — 1998 சஞ்சீவி


றெனி மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களைச் சரியாக பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கண்டிவீதி, (பிரதேச செயலகம் முன்பாக ) சாவகச்சேரி.

(சி/3644)


## கருத்துக் கலசம்

மயூரா

### பொறுமை பேண்!

பொறுத்தார் அரசாள்வார்; பொங்கினார் காடாள்வார் என்பது முதுமொழி. பொறுமை என்ற நற்குணத்தைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் சிறப்படையலாம் என்பதனை உணர்த்த இது போன்ற பல நீதிமொழிகள் உண்டு.

பொறுமையைக் கைக்கொள்வதால், அதனை எமது குணங்களில் ஒன்றாகக் கொள்வதால், நற்பலன் கிடைக்கும் என்பதனை சிறுவர் உள்ளங்களில் பதிக்க எழுந்தது தான் கிரிசாம்பாள் கதை.

ஆலயத்தில் பிரசாதமாக வழங்கப்படும் மோதகத்தைப் பெறுவதற்கு எல்லோரும் முண்டியடித்த வேளை, கிரிசாம்பாள் மட்டும் பொறுமையாக இருந்தாள். அந்தச் சிறுமியின் பொறுமைக்குப் பரிசாக சிறிய மோதகத்திற்குள் தங்க மோதிரம் கிடைத்தது!

பொறுமை என்ற நல்ல குணாம்சத்தின், பண்பின் சிறப்புக் குறித்து இப்போது எவருமே பொருட்படுத்துவதில்லை. எந்த விடயத்திலும் மற்றவர்களை முந்திக்கொண்டு தமது கருமத்தை முடித்துவிட வேண்டும் என்று அவசரப்படுவோரே அனேகர்.

வரிசையில் நின்று பொருள்களை வாங்க நேரும் போது, அங்கு வகுக்கப்பட்ட ஒழுங்கு முறையை மீறித் தாம் முந்திக் கொள்ள முனைவோரே நூறில் தொண்ணூற்றொன்பது பேரும்!

பேருந்து வண்டியில் ஏறும் போது, தாம் இடம்பிடித்துக் கொண்டு பயணம் செய்தாற் போதும்; அடுத்தவர் முதியவரோ, நோயாளியோ, நிறைமாதக் கர்ப்பிணியோ எப்பாடு பட்டாலும் எனக்கென்ன என்ற சுயநலப் போக்கே மேலோங்கி நிற்கிறது. சுயநலம் உள்ளவனிடம் பொறுமையை எதிர்பார்க்க ஒண்ணாது.

சுயநலத்துடன் முகமன் அல்லது செல்வாக்கும் தமிழர்களின் புதிய ''பண்பு'' ஆக மாறி வருகிறது. ஆகையால் பொறுத்திருத்தலை, பொறுமையை, சமூகத்தில் எதிர்பார்க்க முடியவில்லை.

மேலும் —

வாழ்க்கையில் சோதனை மேல் சோதனை வந்தாலும் எதையும் தாங்கும் இதயமாகப் பொறுத்துக் கொள்வது ஒரு வகைப் பொறுமையே.

சமூக நீதியையும், வாழ்க்கையின் தர்மங்களையும் பேணும் வகையில், தொல்லைகளும் தொந்தரவுகளும் வருங்காலையும் பொறுமையைக் கைக்கொள்பவனே போற்றுதற்குரியவன்.

ஒருவன் பொறுமையைக் கடைப்பிடிக்கிறான் என்பதற்காக தீய ஒழுக்கமுள்ளவர்கள் அவனை அயோக்கியன் என்பார்கள்; கேவலமாகப் பேசுவார்கள். அப்போதும் சகித்துக் கொள்பவன் உண்மையான பொறுமைசாலியே.

ஒவ்வொருவரும் தம்மைப் பொறுமைசாலிகளாக ஆக்கிக் கொள்ளப் பழக வேண்டும். பண்டைய ஒழுக்க நெறிகளில் அது முதன்மைக்குரியது.

# விடுதலைக்கு ஏங்கும் மக்களின் விடிவெள்ளி கார்ல் மார்க்ஸ்!

உலக வரலாற்றில் நீங்காத இடத்தைப் பிடித்த பல பெரியோர்களில் குறிப்பிடத்தக்கவர் கார்ல்மார்க்ஸ்.

1818 ஆம் வருடம் மே மாதம் ஐந்தாம் தேதி ஜேர்மனியில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்த இவர், பின்னாளில் தனது கொள்கைகளுக்காக தாய்நாட்டை விட்டே வெளியேற்றப்பட்டார். பல நாடுகளிலும் சுற்றித் திரிந்து இறுதியாக இங்கிலாந்தில் குடியேறி அங்கேயே இறுதிக் காலம் வரை வாழ்ந்தார்.

இவரைப் பல கோணங்களிலிருந்து எண்ணற்ற வரலாற்று இயலாளர்கள் மதிப்பீடு செய்திருக்கின்றனர். ஆனால் எல்லோரும் மார்க்ஸ் ஒரு தலைசிறந்த தத்துவ ஞானி, சிந்தனாவாதி என்பதை முழு மனதுடன் ஒப்புக் கொண்டனர். இவருக்கு முன்பு பல சிறந்த அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இவருக்கும் மற்றெல்லாத் தத்துவஞானிகளுக்கும் ஒரே ஒரு அம்சத்தில் வித்தியாசம் இருந்தது. மற்ற அறிஞர்களெல்லாம் இந்தப் பிரபஞ்சத்தை வெறும் வியாக்கியானம் செய்ததோடு நின்று விட்டனர். மார்க்ஸ் ஒருவர் மட்டும்தான் பிரபஞ்சத்தை ஏன் மாற்ற வேண்டும், எப்படி மாற்ற வேண்டும் என்று சிந்தித்து வழி காட்டினார். அதுவரை எழுதப்பட்ட உலகத்தின் வரலாறு என்பது உண்மையில் உலக அளவில் நடந்தேறிய வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்று மார்க்ஸ் வரலாற்றுச் சான்றுகளுடன் நிரூபித்துக் காட்டினார்.

கார்ல் மார்க்ஸ் பலருக்கு கம்யூனிஸ்ட் பிதாமகன். சிலருக்கோ அவர் மாமேதை. இன்னும் சிலருக்கோ அவர் ஒரு மாமுனி. ஆனால் உண்மையில் அவர் மிகச் சிறந்த மனிதாபிமானி. மனிதனை மனிதன் எதன் பெயராலும் சுரண்டும் கொடுமைக்கு முடிவுகட்ட மார்க்ஸ் தர்மாவேசத்துடன் செயல்பட்டது— சதாசர்வ காலம் மனிதகுல மேம்பாட்டிற்காகச் சிந்தித்தது — இவை எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் அவர் மனிதனை நேசித்தார்; மனித நேயத்தை சுவாசித்தார் என்பது தான்.

இங்கிலாந்தில் நீராவி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தொழில் புரட்சித் துவங்கிய காலத்தில் நசிந்துபோன கைத்தொழிலையே நம்பி வாழ்க்கையை நடத்தி வந்த கைவினைஞர்கள் தவறுதலாக இயந்திரங்களைத் தமது எதிரியாக நினைத்துக்கொண்டு அவற்றை உடைத்து நொறுக்கத் துவங்கினர். ஆனால் அந்தத் துயரமான சூழலிலும் கூட மார்க்ஸ் நிலைகுலையாது ''நம்பிக்கையின் ஊற்றாக விளங்கி...

ணாய்'' மாறி ''நிலப் பிரபுத்துவ சமூகத்தின் அழிவிலிருந்து எழுந்திருக்கும் புதிய முதலாளித்துவ சமுதாயம் தனக்கு சவக்குழியை வெட்டக்கூடிய தொழிலாளி வர்க்கத்தையும் கூடவே பிரசவித்திருக்கிறது'' என்று நம்பிக்கையுடன் சொன்னார். அது வீண்போகவில்லை. 1917 இல் ருஷ்ய நாட்டில்

> சிந்தனா வாதி கார்ல் மார்க்ஸின் நூற்றெண்பதாவது பிறந்த தினம் பத்து நாள்களுக்கு முன்னர் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. அதை ஒட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

ஏற்பட்ட புரட்சியைத் தொடர்ந்து உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில் மார்க்ஸின் கொள்கைகள் ஆட்சி அதிகாரம் செய்தன.

கிறிஸ்தவ மதத்தின் வேத நூலான ''பைபிளை'' விட அதிகமான எண்ணிக்கையில்



விற்றவை — படிக்கப் பட்டவை — கார்ல் மார்க்ஸின் புத்தகங்கள் என்று புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. ஆனால் இந்தத் தகுதியை அடைய அவர் உழைத்த கடுமையும், செய்திட்ட தியாகமும் கணக்கிலடங்கா. லண்டன் மாநகர மைய நூலகத்திற்குள் காலையில் நுழைந்துவிட்டால் காவல்காரர் நூலகத்தைப் பூட்டுவதற்காக இவரை எழுப்பி வெளியேற்றும்வரை ஓயாமல் மார்க்ஸ் படித்த புத்தகங்கள் தான் எத்தனை? இப்படிப் பல வருடங்கள் தீவிர ஆய்வு செய்த பிறகுதான் இவரது 'மூலதனம்' நூல் வெளிவந்தது. உலகத்தாரின் கவனத்தை ஈர்த்த மூலதனம் ...

வத்தில் மார்க்ஸின் அரிய கண்டுபிடிப்பான ''உபரி மதிப்பு'' (Surplus Value) இன்றும் போற்றிப் பாராட்டப்படுகிறது.

கார்ல் மார்க்ஸ் இந்தியாவிலிருந்து பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு — ஒருதடவை கூட இந்தியாவுக்குப் பயணம் செய்யாமல் — இந்திய நாட்டைப் பற்றி, அதன் மக்கள் குறித்து, சமுதாய வாழ்வியல் பற்றியெல்லாம் மிகவும் துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்தார் என்பதை அறியும்பொழுது வியக்காதவர் எவரும் இருக்க மாட்டார். 1857 இல் பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக இந்திய சிப்பாய்கள் நடத்திய 'சிப்பாய்க் கலகத்தை' மிகச் சரியாகப் புரிந்துகொண்டு அதை இந்திய விடுதலைப்போரின் தொடக்கம் என அப்போதே கணித்தவர் கார்ல் மார்க்ஸ் ஒருவர் மட்டுமே.

கார்ல் மார்க்ஸ் ஒரு தீர்க்கதரிசி என்பது வெறும் வார்த்தை ஜாலமல்ல.

ஆருயிர்த் தோழன் ஃபிரெடரிக் ஏங்கெல்ஸுடன் இணைந்து தனது முப்பதாவது வயதில் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' (Cemmunist Manifesto) என்றதொரு சிறு பிரசுரத்தை 1848 இல் மார்க்ஸ் வெளியிட்டார். இந்தச் சிறு பிரசுரம்தான் 150 ஆண்டுகள் கழிந்த பின்பு இன்றும் கூட விடுதலைக்காக ஏங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு விடிவெள்ளியாக விளங்குகிறது. தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வு

சி. கே. மதிவாணன்

டன்மார்க்ஸ் ''ஐரோப்பாவை கம்யூனிஸ்ட் என்கிற பேய் பிடித்துக்கொண்டு ஆட்டுகிறது'' எனக் கம்யூனிஸ்ட் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பட்டினிப் பேய், மதவெறிப் பேய், மொழிவெறிப் பேய், கல்லாமைப் பேய், சாதிவெறிப்பேய், லஞ்ச லாவண்யப் பேய்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற மார்க்ஸ் போன்ற ஞானிகள் தோன்றமாட்டார்களா என்ற ஏக்கம் எழத்தானே செய்கிறது? ★

நன்றி:- தினமணி

# மனிதனுக்கு பன்றி இருதயம்!

விலங்குகளின் இருதயத்தை மனிதர்களுக்கு பொருத்துவதற்காக மருத்துவ விஞ்ஞானிகள் எவ்வளவோ முயன்று வருகின்றனர். குறிப்பாக குரங்கின் இருதயத்தை மனிதர்களுக்கு வெற்றிகரமாகப் பொருத்துவது இன்னும் முழு அளவில் வெற்றி பெறவில்லை.

இப்போது பன்றியின் இருதயத்தை மனிதனுக்கு பொருத்தும் ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது. இஸ்ரேல் நாட்டின் டெல் அவிவ் நகரைச் சேர்ந்த யோரன் நோபர் என்பவர் கடந்த 6 ஆண்டுகளாக இதற்காகப் போராடி வருகிறார். இருதயம் பாதிக்கப்பட்டவரான யோரன், ''என் உயிரை பணயம் வைக்கிறேன். தயவு செய்து எனக்கு ஒரு பன்றியின் இருதயத்தைப் பொருத்துங்கள்'' என்று கோரி வருகிறார்.

ஆனால் இவரது வேண்டுகோள் முன்பு நிராகரிக்கப் பட்டது. இப்போது சரியென்று ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

மனித இருதய வால்வுக்கு பன்றியின் இருதயவால்வுகளை பயன்படுத்துவது 1980 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேலில் உள்ளது. அப்படியிருக்கும் போது எனக்குப் பன்றியின் இருதயத்தைப் பொருத்தக் கூடாதா? என்று யோரன் எழுப்பிய குரல் இஸ்ரேலின் மருத்துவ அதிகாரிகளின் இதயத்தைத் தொட்டு விட்டது!

சரி என ஒப்புக்கொண்டு விட்டனர்.

யோரன் அத்தோடு நிற்கவில்லை. தனக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவரே பன்றியின் இருதயத்தை பொருத்த வேண்டும் என்று கோரிக்கைவைத்திருக்கிறார்.

ஐயோ! பன்றியின் இருதயமா? என்று பல டாக்டர்கள் புருவத்தை உயர்த்திய போது ஜாக்கப்லாவி என்பவர் மட்டும் நான் தயார் என்று கூறியுள்ளார். விரைவில் யோரனின் மனித இருதயத்தை 'ஒபரேஷன்' செய்து எடுத்துவிட்டுபன்றியின்இருதயத்தைப் பொருத்தப் போகிறார்கள்.

பன்றியின் இருதயம் மனிதனுக்கு பொருத்தமாக இருக்குமா? இது பற்றி மருத்துவ விஞ்ஞானிகள் என்ன கூறுகின்றனர்?

''பன்றியின் இருதய வால்வு என்பது ஒரு சிறு பகுதிதான். அதை மனிதனுக்குப் பொருத்தும்போது ஏற்படும் நோயை எப்படியும் குணப்படுத்தி விடலாம். ஆனால் ஒரு பன்றியின் இருதயத்தை மனிதனுக்கு பொருத்துவதால் பல சிக்கல்கள் எழக்கூடும். அது ஒரு விஷப்பரீட்சை போன்றதாகும்'' என்கிறார் ராய் கல்னே என்ற டாக்டர்.

''இந்த முயற்சி வெற்றி பெற்றுவிட்டால் மனித குலத்திற்கே ஒரு விடிவு காலம் பிறந்து விடும்'' என்று வேறு சில மருத்துவ ஆராய்ச்சி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுக்கான அறிகுறிகள் அருகுவதால் நம்பிக்கை தளர்கிறது!

உள்ளும் புறமும்

குறுமுனி

சித்திரை மாரி சிறு மாரி என்பார்கள் முந்தியகாலத்தில். அது எல்லாம் அந்தக் காலம். இது கால நிலை மாறியுள்ள காலம். கடும் வெப்பத்தின் சூட்டைத் தணித்ததுபோல தொடர்ந்து சில நாள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நல்ல மழை பெய்தது. சித்திரையில் வரும் இருபத்தெட்டுக் குழப்பத்தின் சிறு கோலம் போலும்?

மழை பெய்து என்ன. பெய்யாமல் இருந்தென்ன? பயிர்பச்சைகளை வளர்த்து— தோட்டம் செய்து — வயிற்றுப் பசி போக்கும் விவசாயிகளின் வாழ்க்கை இன்னும் சுமாராகவேனும் நகரவில்லை.

அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்குப் போதிய சந்தை வாய்ப்பு இல்லாததால் கை நட்டம் ஏற்பட்டு, குடிக்கக் கஞ்சிக்கும் வழியில்லாமல் கஷ்டப் படுகிறார்கள்.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுகிறது; மக்கள் கஷ்டமில்லாமல் வாழ்கிறார்கள்; அவர்களின் வாழ்க்கைத் தேவைகள் அனேகமாக நிறைவேற்றப் படுகின்றன என்று மேலோட்டமான — எழுந்தமானமான — கருத்து ஒன்று வெளியே பரவி வருகிறது.

தென்னிலங்கையிலிருந்து நல்லெண்ணக் குழுக்கள், விளையாட்டுக் குழுக்கள், இசைக் குழுக்கள் வந்து போவதை வைத்துக் கொண்டு, இங்கு இயல்பு நிலை திரும்புவதாகவும், மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கை கிடைத்துவிட்டதாகவும் நம்பவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆனால் உண்மை நிலை— தள நிலைமை — நேர்மாறானதாகவே இருக்கிறது.

கொழும்புப் பயணம் செய்வதற்கு அனுமதி பெறுவது முதற்கொண்டு ஏனைய நாளாந்த வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அலுவல் வரை அரசாங்க அலுவலகங்களில் கைவைக்கும் கதிரைகளில் அமர்ந்திருக்கும் ''நம்ம ஆள்''கள் பலரும் மக்களுடன்வேண்டாத—ஒவ்வாத— விதத்தில் அதிகாரத்தனம் செய்வதாக மக்கள் குறைபடுகிறார்கள்.

ஒரு நாளில் செய்யக்கூடிய கருமத்தை, ஒன்பது நாள்களுக்கு அலைக்கழித்த பின்னர், அதைக் கொண்டு வா, இதைக் கொண்டு வா என்று கீழ்மட்டம் மாறி மேல் மட்டம், மேல்மட்டம் மாறிக் கீழ் மட்டம் என்று துரும்பாய் இளைக்க வைத்த பின்னர், தான் செய்து கொடுக்கிறார்களாம்! சில சந்தர்ப்பங்களில் வேண்டாத நோண்டுதல்கள் எல்லாம் செய்து குறிப்பிட்ட கருமத்தைச் செய்ய முடியாது என்று கை விரித்து விடுவதும் உண்டாம்!

அரச அதிகாரிகளின் அதிகாரத் தனம் மிதமிஞ்சிப் போனது மட்டுமே கண்டமிச்சம்; மக்களின் நலன்களைக் கருதிய செயற்பாடுகளும் அவர்களுக்கு உதவும் செயற்பாடுகளும் மிகவும் குறைவே.

உதாரணத்துக்கு விவசாயிகளின் விளைபொருள்களுக்கும், மீனவ மக்களின் உற்பத்திகளுக்கும் வெளிச்சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதில் உள்ளூர் அரசாங்கஅதிகாரிகளால் எதுவும் செய்ய இயலவில்லை. 1998 ஏப்ரல் மாதத்தில் வலிகாமம் மக்கள் மீளக்குடியமர்ந்த நாள் முதல் உள்ளூர் உற்பத்திகளுக்கு வெளிமாவட்ட, குறிப்பாக கொழும்புச் சந்தை வாய்ப்பை உண்டாக்க எடுக்கப்படும் முயற்சிகள், திட்டங்கள். பெரிதாக வெற்றி அளிக்கவில்லை.

மேலே குறிப்பிட்ட காலம் தொட்டு குடாநாட்டில் விளைவிக்கப்படும் வெங்காயத்துக்கு கொழும்பில் சந்தை வாய்ப்பு உண்டு என்ற உறுதியான நிலைப்பாடு உருவாகவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் வெளியே போகும்; இல்லை என்றால் நாம் என்ன செய்ய முடியும் என்ற கையறு நிலையிலேயே உள்ளூர் அதிகாரிகள் இருக்கிறார்கள்.

வெங்காயத்தின் அளவுக்கு ஏற்ப கிலோ 22 ரூபாவும், 16 ரூபாவும் என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்க ஒரு கிலோ வெங்காயத்தை 8 ரூபாவுக்குத் தரகர்களுக்கு விற்று விவசாயிகள் கைநட்டம் அடைகிறார்கள் என்றால் —

அது ஏன்? எதற்காக?

அந்த விளைபொருள் அழுகி வழு நட்டம் போகாமல் தவிர்ப்பதற்காகத்தான்! வெளிச்சந்தை வாய்ப்பு நிச்சயமானது —நிரந்தரமானது — உறுதியானது எனின் விவசாயிகள் இவ்வாறு நட்டப் பட வேண்டியதில்லையே!

## அர்த்தமற்ற உள்ளூராட்சித் தேர்தல்; இப்போது உண்மையாகிவிட்டது

குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களுக்கு கொழும்பில் சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசாங்கத்துக்கும் பெரிதாக அக்கறை இல்லை. அவ்வாறு உண்மையான விருப்பம் இருந்திருப்பின்' ''லயன் எயர்'' சரக்கு விமானம் மூலம் குடாநாட்டு உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்லும் திட்டம் தடங்கல் கண்டிருக்காது.

பொதிகளைச் சோதிக்கும் கருவியை ஆறு மாதங்களாகியும் பாதுகாப்பு அமைச்சு தருவிக்கவில்லை. அதனால் சரக்கு விமான சேவை மேல் எழும்ப முடியாது நிலத்தில் படுத்திருக்கிறது.

வன்னிப் போரில், காட்டுக் களத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் ஏவு நிலைகளைத் துல்லியமாகக் கண்டறிவதற்கான நவீன கருவிகளை ஒரு சில நாள்களில், பெருவிலை கொடுத்துத் தருவிக்க முடியுமானால் —

சரக்கு விமானச்சேவையை ஆரம்பிப்பதற்குத் தேவையான சோதனைக் கருவியை ஒரு மாதத்தில் கொண்டு வந்திருக்க முடியாதா?

போருக்குக் கொடுக்கும் முன்னுரிமையை, குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்துக்கும் கொடுக்க முடியாது என்பதனை அரசாங்கம் நிரூபித்திருக்கிறதா?

உள்ளூர் சிவில் அதிகாரிகளுக்கு அரசாங்கத்தை, தட்டிக் கேட்கப் பலம் ஏது? அவர்கள், உத்தரவுகளை சிர மேற்கொண்டு நிறைவேற்றுபவர்களே அன்றித் தட்டிக் கேட்க முடியாதவர்கள் என்பது வாஸ்தவமே.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அரசியல் நடத்தும் — அதற்காகத் தமக்குள் கோழிச் சண்டை பிடிக்கும் அரசியல் கட்சிகள் — இது போன்ற விடயங்களில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம் அல்லவா? இவர்களிடமும் அரசியல் அதிகாரம் இல்லை என்பது உண்மைதான். ஆனால் குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நெருக்குதல் கொடுக்கக் கூடிய பலம் உண்டு. அந்தப் பலத்தை இது போன்ற மக்கள் நலன் துறைகளுக்கு பயன்படுத்தாவிடில் இவர்களின் அரசியல் குறைந்த ஆயுள் கொண்டது ஆகிவிடும்!

★ ★ ★

எங்கள் அரசியல் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமைக்குப் பெரும் பஞ்சம் உண்டு என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

எந்தச் சிறு விடயத்திலும் குழம்பம் காய்ச்சுவதும், கௌரவப் பிரச்சினைகளை எழுப்புவதும், வேற்றுமை கொள்வதும் தமிழனின் சிறப்பான குணாம்சங்களில் சில. ஒரு கிராமத்து அல்லது குறிச்சியின் கிராம முன்னேற்றச் சங்க அல்லது சனசமூக நிலையத்தில் ஏகப்பட்ட ''பிய்ச்சுப் பிடுங்கல்கள்'' இருக்கும். எந்தச் சிறு வேலையைச் செய்வதிலும் பிளவுகள், பிரிவுகள் முட்டி மோதிக் கொள்ளும்.

தமிழனின் இந்தத் தனித்துவ உடைமைகளைப் பார்த்து வெளியார் கெக்கெட்டம் போட்டுச் சிரிப்பதை விட என்ன செய்ய முடியும்?

இந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த அரசியல்துறைச் செயலர் சச்தேவ ராஜேஸ்குமார் தமிழர்களின் தனிக் குணத்தைக் கண்டு சிரித்து விட்டுப் போனார்!

சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் இந்தியநாட்டு அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கடந்த புதன்கிழமை வந்திருந்தார். இப்பிரதேசமக்களுக்கு என்ன வகையான உதவிகள் தேவைப்படுகின்றன; இந்திய அரசால் செய்யக்கூடிய உதவிகள்என்ன: ஏற்கனவே இனங்காணப்பட்ட— இணங்கப்பட்ட—திட்டங்கள் என்பனவற்றை நேரில் கண்டு, கணக்கெழுதுவதே அவரது விஜயத்தின் வெளிப்படையான நோக்கம்.

எனினும் யாழ்ப்பாணத்தின்—இப் பிரதேச மக்களின் — அரசியல் நாடியைப் பிடித்துப்பார்த்துச் செல்வதும் அவரின் சொல்லப்படாத கடமைகளில் ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை

வருட முற்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் தெரிவான உறுப்பினர்களைச் சந்திக்க திரு. சச்தேவ விரும்பினார். அரசாங்க அதிபர் மூலம் எல்லோரையும் அழைத்து, நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலையில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது ரெலோவைச் சேர்ந்தவர்கள் மட்டும் சமூகமளிக்கவில்லை. [illegible] நாள்களுக்குப் பகிஷ்கரிப்பு, பதவி ஏற்பை ஒத்தி வைப்பது என்ற தமது நிலைப்பாட்டுக்கு ஏற்ப — அவர்கள் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. எனினும் அந்தக் கட்சியின் முதல்வர் எம். சிவாஜிலிங்கமும் பிரமுகர்களும் சந்திப்பு நடைபெற்ற இடத்துக்குச் சென்று திரு. சச்தேவவுக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு தமது நிலையை விளக்கியும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு உண்டாக இந்தியா உதவ வேண்டும் எனக் கேட்டும் மகஜர் ஒன்றைக் கையளித்து வந்தனர்.

ஏனைய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் உறுப்பினர்களில் சிலர் பட்டுப் பீதாம்பரம் அணிந்து, தமிழர் தேசிய உடையில் சந்திப்பில் கலந்து கொண்டனர். தேசிய உடையில் வந்திருந்தவர்களையும் பார்க்க மனதுக்குச் சந்தோஷமாக இருந்தது.

யாழ். மாநகர மேயரும் வந்திருந்தார். உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மேடையிலும், உறுப்பினர்கள் மண்டபத்திலுமாக அமர்ந்து கொள்வதா, எல்லோருமே மேடையில் அமர்வதா என்பதில் ஒரு சிறிய சண்டை நடைபெற்றது. அவர்கள் பெரியவர்கள், நாங்கள் சிறியவர்களா என்ற வாக்குவாதங்கள்கூட ஒலித்தன. எனினும் அரசாங்க அதிகாரி ஒருவர் நிலைமையைச் சமாளித்துச் சமரசம் செய்து வைத்தார்.

இதனை அவதானித்த இந்திய அதிகாரி தமக்குள் பெரிதாகச் சிரித்திருப்பார். வெளியே என்ன பிரச்சினை என்று கேட்டுச் சிறிதாகச் சிரித்துவிட்டு விடயத்துக்கு வந்தார்!

எங்கள் பல்லைக்குத்தி பிறரிடம் மணக்கக் கொடுப்பதா என்று ''சண்டை'' பிடிக்க எவரும் நினைத்ததாக இல்லை. வெட்கக் கேடு!

எங்கே அமர்வது என்பது குறித்து மோதிக் கொண்டவர்கள், இந்திய அதிகாரியிடம் ஒரே குரலில் ஒலிப்போம் என்று நினைத்திருந்தால், அவ்வாறே செய்திருந்தால் நல்லாக இருந்திருக்கும் அல்லவா?

குடாநாட்டு மக்களின் தேவைகள் பிரச்சினைகள் என்ன? அவர்களின் இன்றைய நிலை என்ன? அவர்களின் அரசியல் அபிலாசைகள் எவை? இந்தியாவிடம் எத்தகைய பங்களிப்பை எதிர்பார்க்கிறார்கள் — இவற்றை ஒரே குரலில் முன் வைத்திருந்தால் அது எவ்வளவு கனதியானதாக அமைந்திருக்கும். அது குறித்து எவரும் சிந்தித்ததாகஇல்லை. ஒவ்வொரு தரப்பினரும் தாங்கள் தாங்கள் கூற எண்ணியதை ''முணுமுணுத்து'' விட்டு இருந்து விட்டார்கள்.

''யாழ்ப்பாண மக்களின் நிலைமையை, அவர்களின் கஷ்டங்களை, அவர்களின் அரசியல் சிந்தனைகளை அரசாங்க அதிகாரிகளிடம் கேட்டறிந்தேன். எனினும் மக்கள் பிரதிநிதிகளான உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்கும்; அவர்களின் நாடியை நன்றாக அறிந்திருப்பீர்கள் என்பதாலேயே உங்களைச் சந்திக்க விரும்பினேன்'' — என்று கூட்டத்தின் ஆரம்பத்திலேயே திரு சச்தேவ தெரிவித்திருந்தார். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எல்லோரும் ஒரே குரலில் கருத்துக் கூறியிருந்தால் அதன் மதிப்பு என்ன? மக்கள் கருத்தாக அமைந்திருக்கும் அல்லவா?

மேலும் —

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தவர்களில், பருத்தித்துறை நகர சபைத் தலைவரின் உண்மையைத் திறந்து பேசிய தன்மை வரவேற்கப் பட வேண்டியதாகும்.

தேவையற்ற தேர்தலில் போட்டியிட்டு, மக்களுக்கு எந்தவித சேவையையும் செய்ய முடியாமல் இருக்கிறது. தேர்தல் அரசின் வெறும் கண்துடைப்பு — என்ற தொனியில் அவரது கருத்துக்கள் அமைந்திருந்தன.

கொழும்புக்குப் போனோம் அமைச்சர் அலவி மௌலானாவைச் சந்தித்தோம்; மற்றும் பல அரசாங்கப் பிரமுகர்களைச் சந்தித்தோம். குடாநாட்டின் உள்ளூராட்சி சபைகள் உதவுவதாக எல்லோரும் கூறினார்கள். ஒரு ''வெள்ளச் சல்லியும்'' இது வரை கைக்கு வரவில்லை —

உள்ளூராட்சி சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் (துறைமுகம் உட்பட) எல்லாம் இராணுவத்திடமே உண்டு; எம்மிடம் எதுவும் இல்லை. இன்றைய நிலை அர்த்தமற்ற ஒன்று. இந்த நிலை நீடித்தால், எங்களைத் தெரிவு செய்த மக்களிடம் கூறிவிட்டு நாம் இதிலிருந்து விலகிக் கொள்வோம்.—என்றவாறாக அவரது பேச்சு அமைந்திருந்தது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஒற்றைக்காலில் நின்ற வேளை—

தேர்தல் நடத்தக்கூடிய நேரம் அல்ல இது. மக்கள் மீது அவர்கள் வேண்டாத விரும்பாத, ஒரு தேர்தல் திணிக்கப்படவுள்ளது. இதனைத்தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து பகிஷ்கரிக்க வேண்டும்; போட்டியிடக் கூடாது — என்பதே மக்களின் கருத்தாக இருந்தது.

ஆனால் அரசியல் கட்சிகளோ, தேர்தலுக்குப் பொருத்தமான காலம் அல்ல என்பதனை ஒப்புக்கொண்ட போதிலும் —

ஏதோ ஒரு காரணத்தைக் கூறி தேர்தலில் போட்டியிடவே விரும்பின; போட்டியிட்டன. ஒரே அணியில் சேர்ந்தோம் என வெளியே கூறிக்கொண்டு தனித் தனியாகப்போட்டியிடத் தயாராகிக் கொண்டிருந்தன.

இந்தத் தில்லுமுல்லுகள், நடிப்புகள் எல்லாம் மக்களுக்குத் தெரியாது என்று அரசியல் தலைவர்கள் எண்ணுவார்களே ஆனால் அவர்கள் ஏமாந்தார்கள்!

ஐந்து மாதங்களுக்கு முன்னர் மக்கள் சொன்னது இப்போது நடைபெறுகிறது. அரசு இவர்களை நன்றாக ஏய்க்காட்டிவிட்டது.

★ ★ ★

கொழும்பில் இருந்து வந்த முக்கிய பிரமுகர் ஒருவரை இவ்வாரம் அவரது இல்லத்தில் சந்திக்க நேர்ந்தது. பலதும் பத்துமாகச் சென்ற உரையாடல் அரசியல் பக்கத்தையும் சேர்த்துக் கொண்டது.

அரசியல் நிலைமை எப்படி? இனி என்னாகும்? என்று அறிவதில் ஆர்வம் காட்டினோம்,

''எங்கள் பிரச்சினைக்கு ஏதோ ஒரு தீர்வு, அரை குறைத் தீர்வாவது கிடைக்கும் என்று அம்மையார் பதவிக்கு வந்த ஆரம்பத்தில் மெத்த நம்பிக்கை வைத்த பெரிய ஆசாமிகள் எல்லாம்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(II)

# குடாநாட்டில் எய்ட்ஸ்

## பதுங்கி இருக்கும் ஆபத்து!

**நல்லூர் தாஸ்**

தானங்களிலே சிறந்தது, உயர்ந்தது, இரத்ததானம். போர் மற்றும் உள்நாட்டு யுத்தம் நடைபெறும் நாடுகளில் அதன் மகோன்னதம் மதிப்பிட முடியாதது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக மானிட இரத்தத்துக்குள் எச். ஐ. வி. புகுந்து கொண்டதால் இரத்ததானம் செய்ய முன்வரும் ஒருவர் தார்மீகப் பொறுப்புணர்வுடன் சிலவற்றைச் சிந்திக்கவேண்டியுள்ளது.

இரத்ததானம் செய்பவருக்கு 'எய்ட்ஸ்' வரலாம் என்ற கருத்து முற்றிலும் தவறானது. ஆனால் இரத்ததானம் செய்பவர் தன்னிடமுள்ள எச். ஐ. வியை தாராளமாகப் பலருக்கும் விநியோகித்து விடமுடியும். எனவே இரத்ததானம் செய்ய முன்னர் ஒருவர் பின்வரும் கேள்விகளுக்கு ஒளிவு மறைவின்றி மனம் திறந்து பதில் அளிக்க வேண்டியது மிகமிக அத்தியாவசியமான தார்மீகக்கடமை ஆகும்.

இதன் மூலம் தன்னையும் தனது சமூகத்தையும் பேரழிவில் இருந்து ஒருவர் காப்பாற்றி விடலாம்.

நீங்கள்—

★ 1978 ஆம் ஆண்டின் பின் (10 ஆண்டுகளுக்குள்) தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டவரா?

★ போதைப் பொருள் பாவிக்கும் பழக்கத்துக்கு அடிமையானவரா?

★ வெளிநாடுகளில் அறிமுகமில்லாத எவருடனாவது பாலியல் உறவு வைத்திருந்தவரா?

★ வெளிநாட்டில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவரா அல்லது இரத்தம் ஏற்றிக்கொண்டவரா?

★ நீர் பாலியல்உறவுவைத்திருக்கும் ஒருவர் மேலே கூறப்பட்ட காரணிகளில் ஏதேனும் ஒன்றுடன் தொடர்புடையவரா?

அவ்வாறாயின் இரத்ததானம் செய்வதை நீங்கள் கண்டிப்பாகத் தவிர்க வேண்டும்.

ஆனால் பணத்துக்காக இரத்ததானம் செய்வோர் கூறும் பொய்கள் இதுவிடயத்தில் பேராபத்தை உண்டு பண்ணிவிடலாம் என்கிறார் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமகள் சிவசங்கர். எய்ட்ஸ் தொடர்பான விவரங்களைச் சேகரிப்பதற்காக ஆஸ்பத்திரிக்குள் பலருடன் பேசிய போது உற்சாகம் தரும்விதமாகத் தாமாகவே முன்வந்து ஆர்வத்துடன் கருத்து வெளியிட்ட மிகச்சிலரில் இவரும் ஒருவர்.

யாழ்.ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு தானம் செய்யும் ஒருவருடைய இரத்தம் எத்தகைய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றது என்பது பற்றி அவர் விளக்கினார்.

தானமாகப் பெறப்படும் இரத்தம் எச். ஐ. வி. பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டு 24 மணிநேரத்தில் அதன் பெறுபேறு பெறப்படுகிறது. எச். ஐ. வி. பரிசோதனைக்கு ''HIV SPOT TEST'' என்னும் முறையே யாழ்.ஆஸ்பத்திரியில் நடைமுறையில் உள்ளது. இது நவீன ஆய்வுமுறை அல்ல. எனினும் திருப்திகரமான பெறுபேற்றை இதன் மூலம் பெறமுடியும்.

எச். ஐ. வி. பரிசோதனை செய்து கொள்ள எவராவது விரும்பினால் ''அறை இலக்கம் 33'' இல் (Room No 33) உள்ள பாலியல் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைப் பிரிவுடன் தொடர்பு கொண்டால் அதற்கு உரிய ஏற்பாடு செய்யப்படுவதுடன் அவர் தொடர்பான விடயங்களில் இரகசியமும் பேணப்படும் என்று யாழ்.ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போரினால் நலிவுற்றிருந்த பொதுச் சேவைகள் ஓரளவு வழமை நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்ற போதும் சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை மாறுதல்கள் ஆமை வேகத்தில் கூட நடப்பதாகத் தெரியவில்லை.

சிவில் அலுவலகங்களை, வர்த்தக நோக்கிலான நிலையங்களை, திரை அரங்குகளைத் திறப்பதில் காட்டப்பட்ட அவசரமும், வேகமும் சுகாதாரத் துறையின் பக்கம் அறவே காட்டப்படவில்லை என்றே கூறலாம். அந்தளவுக்கு ஆஸ்பத்திரிகளில் வசதியீனங்கள் மலிந்து கிடக்கின்றன.

குடாநாட்டு மக்களின் பிரதான சுகாதாரசேவை நிலையமாக விளங்கும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மற்றும் பிராந்திய ஆஸ்பத்திரிகளிலும், உள் நோயாளரினதும் வெளி நோயாளரினதும் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது. நோயாளர்களைக் கையாள்வதில் நாளாந்தம் திண்டாட்டம் தான்.

யாழ். ஆஸ்பத்திரி மெடிக்கல் கிளினிக் அறையில் நோயாளர்களை எச்சரிக்கும் வகையில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஓர் அறிவித்தலை படத்தில் காண்கிறீர்கள்.

சாதாரண நோயுடன் அனுமதிக்கப்பட்ட ஒருவர் 'எய்ட்ஸ்' நோயாளி என இனங்காணப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து ஆஸ்பத்திரி நிர்வாகம் அவசர அவசரமாக எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

ஆஸ்பத்திரியில் உள்ளவசதியீனங்கள் காரணமாக ஒரு நோயாளிக்கு மட்டும் ஒரு தடவை பயன்படுத்த வேண்டிய சிறிஞ்சுகள் (Disposable Syrings) மற்றும் ஊசிகள் (Needles) சுத்திகரிக்கப்பட்டு (Sterilization) மீண்டும் மீண்டும் பலருக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

உரிய முறையில் சுத்திகரிக்கப்படாத ஊசிகள், சிறிஞ்சுகளை உடலில் செலுத்துவதன் மூலம் எய்ட்ஸ் வைரஸ் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு இலகுவாகத் தொற்ற வாய்ப்புண்டு. போதை மருந்துகளை ஊசி மூலம் உடலில் செலுத்துவோரிடையே எச். ஐ. வி. வேகமாகப் பரவியுள்ளது இதற்கு எடுத்துக்காட்டு.

யாழ். ஆஸ்பத்திரியில் இத்தகைய சிறிஞ்சுகளுக்கும், ஊசிகளுக்கும் நீண்டகாலமாகத் தட்டுப்பாடு நீடிக்கிறது. இதனால் சிகிச்சைக்கு வரும்போது சிறிஞ்சுகளை வாங்கிக் கொண்டுவருமாறு நோயாளர்களிடம் கேட்கப்படுகிறது. 'எய்ட்ஸ்' பற்றிய பீதி கிளம்பியிருப்பதை அடுத்து தற்போது சிலர் வெளிச்சந்தையில் சிறிஞ்சுகளை வாங்கிக் கொண்டு சிகிச்சைக்கு வருகிறார்கள். இதன் மூலம் எய்ட்ஸில் இருந்து மட்டுமல்ல தொற்று நோய்கள் பலவற்றில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால் இது விடயத்தில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தாங்கள் வாங்கி வரும் ''சிறிஞ்'' தங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை நோயாளி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தகைய சிறிஞ் அல்லது ஊசி அடுத்தவருக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க பாவித்த பின்னர் டாக்டரிடம் இருந்து அல்லது தாதியிடம் இருந்து அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

தனியார் பார்மசிகளில் 'சிறிஞ்' வகைகள் ஒன்று 10 ரூபா வரை விற்கப்படுகின்றன. ஆனால் எல்லா நோயாளர்களாலும் அவற்றைவிலை கொடுத்து வாங்க முடியாதிருக்கும்.

தங்களுடன் கூட இருந்து சிகிச்சை பெற்ற ஒருவர் பின்னர் எய்ட்ஸ் நோயாளி என இனங்காணப்படும் போது ஏனையோரிடையே பயமும் பீதியும் கிளம்புகிறது. நோயாளிகளிடையே மட்டுமல்ல; அவரைப் பராமரித்த தாதியர்களும் கூட பீதியடைகின்றனர். இத்தகைய ஒரு நிலையை யாழ். ஆஸ்பத்திரி அண்மையில் அனுபவ ரீதியாகக் கண்டது. எனவே நம்பிக்கை தரும் விதமான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு உண்டு.

யாழ். ஆஸ்பத்திரியில் உள்ள தொற்று நீக்கும் கருவிகள் நவீனமயப்படுத்தப்படுவது அவசியமாகின்றது.

ஒரே சமயத்தில் பல எய்ட்ஸ் நோயாளர்களைப் பராமரிக்கும் நிலை எதிர்காலத்தில் வரலாம். எனவே அதற்குத் தனியான சிகிச்சைப் பிரிவு அவசியம்.

முன்னெப்போதும் இருந்திராத வகையில் எச். ஐ. வி. காவிகள் குடாநாட்டுக்குள் உட்பிரவேசிக்கக் கூடிய காலகட்டமாக தற்போதைய சூழ்நிலையை சில ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

போக்குவரத்துத் தொடர்புகளைப் பொறுத்தவரை 1980 களின் பிற்பகுதியிலும், 1990 களின் நடுப்பகுதியிலும் குடாநாடு ஒரு முற்றுகை நிலைமைக்குள் இருந்தது. போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்ததால் குடாநாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் புலம்பெயர்வோரின் எண்ணிக்கை இந்தக் காலப்பகுதியில் அதிகரித்தது. ஆனால் வெளிநாடுகளில் இருந்து திரும்பி வருவோரின் எண்ணிக்கை மிக மிக அரிதாகவே காணப்பட்டது.

மேற்கு நாடு ஒன்றில் இருந்து அல்லது மத்திய கிழக்கில் இருந்து திரும்பிய தனது கணவரைச் சந்திப்பதற்காக குடாநாட்டில் உள்ள அவரது மனைவி பல கட்டுப்பாடுகளைத் தாண்டி சிரமங்களைக் கடந்து கொழும்பு செல்லும் நிலை அன்று இருந்தது.


ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. நீண்டகாலம் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றிருந்த பலரும் தற்போது குடாநாட்டு சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை அடுத்து ஒரு தரம் ஊருக்கு வந்து செல்ல ஆரம்பித்துள்ளனர்.

நீண்டகாலப் பிரிவின் துயரைத் தாண்டிப் பல குடும்பங்கள் ஒன்றிணைகின்றன. ஆனால் இதற்குப் பின்னால் உள்ள ஆபத்தை யார் அறிவார்?

'எய்ட்ஸ்' பரம்பலைப்

(X ஆம் பக்கம் பார்க்க)

> ...வெளிநாடுகளில் இருந்து ஊருக்கு வந்து திரும்புவர்களுடன் எச். ஐ. வி. காவிகளும் பெருமளவில் குடாநாட்டுக்குள் பிரவேசிக்க வாய்ப்பான சூழ்நிலை தற்போது நிலவுவதால் வெளிநாடுகளில் இருந்து வரும்அனைவரையும் கண்டிப்பாக எச்.ஐ வி. பரிசோதனைக்குட்படுத்த வேண்டியது அவசியம் என்ற கருத்து மருத்துவ வட்டாரங்களில் வலியுறுத்தப் படுகிறது...



யாழ். ஆஸ்பத்திரி மெடிக்கல் கிளினிக் அறையில் தொங்கவிடப்பட்டுள்ள எச்சரிக்கை அறிவிப்பு இது. (படம் கே. சுதா)

> யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் பேணப்படும் பதிவேடுகளின்படி 1990 ஆம் ஆண்டு முதல் இதுவரை நால்வர் மட்டுமே எச். ஐ. வி. தொற்றியவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர். (கடைசியாக இனங்காணப்பட்ட கணவன், மனைவியைத் தவிர)
>
> அதன்படி 1990 ஆம் ஆண்டு இருவரும் 95, 96ஆம் ஆண்டுகளில் தலா ஒருவரும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். 1991, 92. 93, 94 மற்றும் 97ஆம் ஆண்டுகளில் எவரும் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பதிவில்லை.
>
> 95 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட நபர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பஸ்த்தர். இவர் வெளிநாட்டில் கப்பலில் பணியாற்றியவர். இவரது மனைவிக்கு எச். ஐ. வி. தொற்றியதாக உறுதிப்படுத்தப்படவில்லை.
>
> 1996ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நோயாளி மானிப்பாயைச் சேர்ந்த குடும்பஸ்த்தர். எச்.ஐ. வி. பரிசோதனைகள் பூர்த்தியாக முன்னரே ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி விட்டார். சிலகாலம் வீட்டில் இருந்து பின் இறந்து போனார். இவரது குடும்பத்தில் வேறு எவருக்கும் எச். ஐ. வி. தொற்றியது கண்டு பிடிக்கப்படவில்லை. இவரும் 10ஆண்டுகளுக்கு மேல் வெளிநாட்டில் வாழ்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமிழ்முனைப் பேனாவே!

எண்ணத்தி லெழுமுணர்வுதனை யெழுதிட வுதவும்
புல்லுக்குள் ளிருந்தாலென்ன? பூசாரிகையிலிருந்தாலென்ன?
வலிமையுடன் ஜனாதிபதியிடமிருக்கும் எதிர்ரணியிடமுமிருக்கும்
பொத்தகப் பையிலுமுறைவாய் பொக்கற்றிலுமிருப்பாய்.

உள்ளத்தி லூற்றெடுக்கு முவகையை யுலகிற் குணர்த்தவும்
அடிமனத் திலாழப் பதிந்த வடுவை யரங்கேற்றவும்
குப்புற வீழ்ந்த போதும் குளிர்காலத்திலும் கழுத்தறுக்கும்
விரல்களில் கட்டுண்டு காகிதத்தை முத்தமிடும்
—குமிழ் முனைப் பேனாவே!

குற்றங் காணும் குங்குமச்சிவப்பழகி
கட்டழகிகள் கரம்பிடிக்கும் கறுப்பழகி
பால் நிலவில் படர்ந்து காணும் நீலவானம்
சொன்னதைச் சொல்லும் பச்சைக் கிளி—எனப்
பல நிறங்களில் பவனி வரும்—குமிழ் முனைப்பேனா!

*ச. க. சுதர்தனக்குரு*

# கல்விப் பெண்ணே! காத்தருள் செய்வாய்!!

(இன்னும் 80 நாட்களில் பரீட்சையில் குதிக்கின்ற மாணவரின் பரிதவிப் பு)

கல்வித் தாயே, நின்நினைவால் தவிக்கிறது என்மனது
நோயாகிப் போயிடுமோ? நோக்கங்கள் மாறிடுமோ?
காயாகிக் கனியாகி, கடைசியிலே பெயிலாகி
தோயாத சோகத்தில் தூக்கங்கெடும் நாள்வருமோ?

அக்கா, அடிக்காதே, அறிவுதடு மாறுகுது,
வெட்கத்தை விட்டென் விருப்பத்தைச் சொல்கின்றேன்
எக்காலமும் வேண்டுமுந்தன் இதமான பக்கத்துணை
அத்தானும் என்பக்கம் ஆகிடவே வழிசெய்வாய்!

தங்காய், உன்அண்ணன் தடையின்றி முன்னேற
பங்காய் நீயெனக்குப் பலவுதவி செய்துவிடு
வெங்காயம் உரித்திடவோ, வேலையெல்லாம் செய்திடவோ,
நுங்காய் இனிக்கின்ற நூற்கல்வி தந்துவிடு!

மச்சாள், நானுன்வீடு மறந்துமினி வரமாட்டேன்,
பட்சணமாய் உனைக்காணின் பசிக்கிறது எந்தனுக்கு
பொச்சந்தான் தீர்ந்திடுமோ? போதுமெனும் மனம்வருமோ?!
எச்சமாய் நிற்கின்ற என்படிப்பை முடிக்கவிடு!

காதலியே, காத்திருப்பாய் கடைசிவரை நானுனக்கே
மோதலிட்டு இப்போதே முகம்வாடல் முறைதானோ?
சோதனை எழுதுவது சோகமெனத் துடிக்கின்ற
வேதனையை தவிர்த்துவிடு, வெறுப்பின்றிப் படித்துவிடு!

அம்மம்மா, படிப்பதற்கு ஆயிரமாய்ப் புத்தகங்கள்
பம்மாத்தாய்ப் படித்தாலும் பாரதமாய் நீள்கிறது
சும்மாநாம் வாசிப்பின் சுற்றுகின்ற தலைகளிடம்
எம்மானம் காத்திடவே எழுச்சியுடன் எழுதச்சொல்லு!

*— கி. வாயுபுத்திரன் —*

# அழகிப் போட்டி பார்த்த தமிழ்ப் பண்டிதரின் ஆதங்கம்

அனுங்குகின்ற இசைலயத்தில் அடியெடுத்து வந்தமாதர்
ஆபரணம் போல் ஆடை பூட்டி
மினுங்கி மாறும் ஒளிகள்பாயும் மேடையிலே வந்துநின்றார்
மேடுபள்ளத் தோரணைகள் காட்டி.

சலங்கைகட்டி வந்தநாம்பன் கன்றுபோலப் பெண்மை இன்றி
சாடைகாட்டி நின்றதொரு பெட்டை
அலங்கரிப்பு என்று எண்ணி ஆடைஅலங் கோலமாக்கி
ஆறுபொத்தல் ஓடுஒரு கட்டை.

கரிபூசி உடலெங்கும் கலர்பூசிப் பம்பாயின்
''கலர்க்கன்னி'' என்றொருத்தி வந்தாள் — சாயம்
நரிபூசி வந்தகதை ஞாபகத்தில் வந்ததுபார்
நாய்குரைக்கும் பார்த்திருந்தால் அந்நாள்.

பந்தற்கால் முள்முருக்குப் பாவனையாய் ஓர் ஒடிசல்
பாவைவந்து ராஜநடை போட்டாள் — ஐயோ
அந்தக்காலத்து ''கொமிக்'' நாகேசைப் போலிருப்பாள்
அழகிமுடி தனைப்பறித்துப் போட்டாள்.

உலகத்தில் அழகியெவள் என்று உரசிப் பார்ப்பதற்காய்
ஒருகூட்டம் ஜட்ஜ்ஆக நிற்க — சுற்றிப்
பலகூட்டம் தம்வீட்டு பசிநிலைமை தான்மறந்து
படையெடுக்கும் வக்கிரங்கள் விற்க.

அழகென்ற கலைதன்னை அளவுகளால் முடிவுசெய்ய
அடசிரிப்பு வருகிறதே எனக்கு — உங்கள்
முழஞ்சாணால் அளவெடுத்து முடிசூட்ட அழகொன்றும்
முப்பரிமா ணம்இல்லாக் கணக்கு.

கர்ப்பிணியின் பூரிப்பும் கம்பீரம் தருநரையும்
கல்வியினால் உட்குழிந்த கண்ணும் — மாதர்
சொற்கோர்வை நாநயமும் சோம்பாது பணிபுரிந்து
சோர்கையிலும் அழகிருக்கு எண்ணும்.

மயிலழகு காண்பதற்கோ மழைபெய்யப் பொறுத்திடனும்
மயில்தோகை உரிப்பதுவோ கோரம் — பெண்ணில்
பயில்கின்ற மெய்யழகு படைத்தவனுக்கடுத்துக்கை
பற்றியவன் இடமே போய்ச் சேரும்.

பூக்களதன் அழகுதேரப் புடுங்கியவை இதழ்பறித்துப்
பூதக்கண் ணாடிகீழா வைப்பீர் — ஓய்
பாக்குவெட்டி கொண்டுகாஞ்சிப் பட்டு வெட்ட வந்தவரே
பட்டினைச் சாக் கூசிகொண்டா தைப்பீர்?

புதுமைப் பெண்களுக் கர்த்தம் புட்டிகட்டும் புகையிலைக்கும்
போஸ்கொடுத்தல் அல்லமாதர் குலமே — உம்
மெதுமைப் பண்பிழந்து நீங்கள் மேற்குமயமாகிவிடில்
மிளிராது தாய்மையென்ற பலமே.

*— ச. முகுந்தன் —*

# சாதி

சாதி சாதி
என்று
எம்மக்கள்
எதை
சாதித்தார்?
தீண்டினால்
தீட்டுவரும்
என்றார்.
தொட்டால்
துடக்குவரும்
என்றார்.
வேலிதாண்டி
தாலி
கட்டினால்
கத்தி
என்றார்.
ஆனால்
நாமெல்லாம்
செத்தபின்
சுடலையில்
சாம்பல்கள்
சங்கமிக்குதே!
சாதிக்கும்
சுடலைதானே
கொள்ளி
வைக்குதே!

*— கரவை துரைசீலன் —*

# உனக்காக ஒரு ஜீவன்

என் மௌனத்தை
சம்மதத்தின்
சாட்சிகள் என்று
காதலிச்சவள் நீ!

உன் பார்வைகள்
என் விழிகளில்
பட்டபோதெல்லாம்
என் இதயத்தில்
ஆனந்த கவிதைகளை
எழுத வைத்தவள் நீ!

உன் பார்வைகள்
என் கண்ணிலே
படாதபோதெல்லாம்
என் இதயம் உடைந்து
சோகக் கவிதைகளை
எழுதவைத்தவளும் நீ!

இன்று —
என்னை ஊமை என்று
தெரியாமல்
காதலித்தவளும் நீ!

நாளை
என்னை ஊமை என்று
அறிந்தால்
என்னை மறக்கப்
போகிறவளும் நீ!

அப்போது
என் மௌனத்தை
எல்லாம்
ஊமையின் சாட்சிகள்
என்று
அறியப் போகுபவளும் நீ!

*— உயிரோவியன் —*

# ஏன் தூங்கினாய்?

சித்திரை
பிறந்ததென்று
புதுச்
சித்திரம்
வரையப்
புறப்பட்டவள்...
நித்திரை
காண்பதில்
நித்தமும்
சுகமில்லை.
முத்திரை
பதித்திட
விழித்தெழுக
தோழியரே!
என்றெல்லாம்
சூளுரைத்தவள்...
இன்று...
அன்பெனும்
விலங்கினால்
கைதாகிவிட்டாள்...
காளையவன்
நெஞ்சணையில்
இனிய
கனவுகளோடு
தூங்கிவிட்டாள்...
தூங்கியது
அவளல்ல
கொள்கைதான்.

*-ச. தியானேஸ்வரசர்மா-*

# என் பிரிய ஆலமரம்

விந்தைகள் சூழ விழுதுகள் ஆட
நிதம் விதம் பூக்களைப் பூக்கும்.
வெக்கையைப் போக்கி வியர்வையை ஆற்றி
வேனிலாய் நிழல்நிலை நாட்டும்
தந்தையின் தந்தை தவழ்ந்திடும் போதே
தலைவிரித் தாடிய ஆலாம்!
சமயத்தில் நானும் தலையணை ஆக்கி
சரிந்திட வைத்ததிவ் வேராம்.

சடைத்துமே காய்த்து தளதள வென்று
சிவந்த பழந்தரும் நூறாய்.
தலமெனப் புட்கள் தங்க இடம்தரும்;
தடவிக் கொடுத்தும் சீராய்
துடக்குடனேதும் வருகிற காற்றை
தூய்மையாய் மாற்றும்... ஓர் ஆறாய்!
சலசப்பின்றி சுகம் இதழ் அள்ளிச்
சொரிந்து அணைத்திடும் தாயாய்.

இலையுதிர் காலம் எனில்நரைத் தாற்போல்
இலையெலாம் மஞ்சளைப் பூசி
இருப்பதைப் பார்த்தால்... விழி துளிர்த்தோடும்
இரைந்தழுவேன்... சில நாழி!
இலையெல்லாம் பச்சை எனப்புது வாசம்
கமழ்ந்திட.. ஜொலிப்பதை நோக்கி,
எனதுயிர்க் குஞ்சு மகிழ்ந்திடும்; றெக்கை
விரித்தெழும் கவிதையால் வாழ்த்தி!

மரததுக்கும் எந்தன் மனதுக்கும்.. மர்மமக்
காதல் வளர்ந்தது நேற்று!
வாழ்லில் நான் நொந்து... வர: வரவேற்று
விழிதுடைத்ததுவுமிக் கீற்று!
உரிமையாம் நான் என் கவிகளைச் சொல்வேன்!
ரசித்தெனை உறவென ஏற்று
உருகிய அன்புக்கு உதவிட இன்று
முடியலை! அடைத்ததென் ஊற்று!

அட இதைக்கூட 'விறகுக்கு' வாங்கி...
தறிக்கவே வந்தன தலைகள்.
அதையறியாமல் வழமைபோல் என்னை
அழைத்துச் சிரித்தன இலைகள்.
தடுக்கவே முடியலை; தறித்தனர்! ''தடு'' என
கதறிற்று... கிழிந்ததென் செவிகள்
துடித்தழும் நெஞ்சில் வலியெழுப் பார்த்தேன்.
தொடர்ந்துமே வீழ்ந்தன கிளைகள்.

*— த. ஜெயசீலன் —*

# ஊரில் எய்ட்ஸாம்: உணர்

வெளிநாடு சென்றோரோ வேலை எடுத்து
பிழைத்தபலன் இன்றோ பெருத்து—குலைநடுங்க
வைக்கும்; எய்ட்ஸென்ற வம்பெம் மடியினிலும்
கைவத்த தையோ களித்து!

ஆழந் தெரியாமல் ஆடியவர்... ஊர்திரும்பி
வாழவந்து எங்கள் வரலாற்றின்—சூலினுக்கும்
HIV தந்தார்; எழில் மிகுநம் இல்லறமும்
மூச்சையற்றுப் போமோ முடிந்து?

கட்டுப்பா டாகக் கலந்து உறவாடி
மட்டுப்பட டில்லா மகிழ்ச்சிகளை—பெற்ற எங்கள்
சீர்... இறந்து போக வெளிநாட்டில் பெற்ற 'சீர்கள்'
சீரழிக்குது ஊரைச் சிதைத்து.

தான்பெற்ற இன்பம் தனது மனைவிமக்கள்
யாவரும் பெறச்செய்து... அப்பாவிச்—சேய்களையும்
மண்ணில் நடைப்பிணமாய் மாற்றியபின் வேறெவர்க்கு
அன்னார்தந் தாரோ அமுது?

ராமனென நின்றதனால் தான்நேற்று வாழ்ந்து வென்றோம்!
ராவணனாய் மாறுமெண்ணம் பூண்டதனால்—காலமின்று
நோயாகித் தண்டிக்கும் நுட்பமறி... தம்பி; நூறை
மேயாமல் ஒன்றை விரும்பு.

ஷேவெடுத்தல், ரத்தம் ''சிரிஞ்''சூடு [ஏற்றி மாற்றல்,
கூடல், குலவல்,... கவனம்... உந்தன்—பார்வைக்குள்
சிக்காமல் மெல்லப் பரவிச் 'சபலத்துள்'
உட்காரும் இந்நோய் உணர்.

தமிழின் விழுமியத்தால் 'தன்கற்பு' காத்த
எமதூரில் கூட எயிட்ஸாம்—அமிழ்தில்
ஒருதுளி நஞ்சுவீழ்ந்தது; ''ஓமென்'' றேற்பாயோ
வருமுன்னே காக்க இனி வா!

போரால் நசிந்து புதைகுழிக்குள் போமினத்தின்
வேரில் எயிட்ஸென்றால் மிஞ்சியிங்கே—ஆர்நிலைப்பார்
வைரஸ் பரப்புவோரை ஊர்விட்ட கற்றினால்தான்
வையத்தில் வாழுமெங்கள் மண்.

''ஆடிய ஆட்டமென்ன''? என்றுநோய்க் காவிகளைப்
பாடிப் பரிகசித்தல் விட்டுவிட்டு—ஊடுருவி
இன்னும் கிருமி எமை ஏய்த்துப் பரவாமல்
சென்றியிடல் தாண்டா சிறப்பு.

கேட்பதற்கு ஆளில்லை! கீழ்ச்செயல்கள் மீண்டும் 'வால்
ஆட்ட' விடாமல் அவதானம்—காட்டுதம்பி
கட்டுப்பா டொன்றே தமிழ் காக்கும்! —இன்றிதற்குத்
தட்டுப்பா டில்லையெனச் சாற்று!

*— அருணன் —*

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி

அந்தச் சாமியாரின் ஆச்சிரமத்தைத் தேடிப்பிடிப்பதற்குள் சிவபாதத்துக்குப் போதும் என்றாகிவிட்டது. அத்தனை 'சென்றி'களையும் இறங்கி ஏறிக்கடந்ததுகாணாதென்று, மோட்டார் சைக்கிள் வேறு தொந்தரவு கொடுத்தது. தனிப்பெற்றோலில் ஓடுவதென்றால் இப்போதைய விலைக்குக் கட்டாது. மண்ணெய் கலந்து ஓடுவதென்றாலும் சிக்கனமாகச் செலவழித்த பழக்கம் விடுவதில்லை. எனவே தனி மண்ணெயிலேயே ஓடித்திரிகிறார்.

சிவபாதம் உரும்பராய் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர். சங்க அலுவலாகச் சாமியாரைச் சந்திக்க வேண்டும் என்று பக்கத்து வீட்டுக் கதிரமலையையும் இழுத்துக் கொண்டு புறப்பட்டவர், ஒருவாறு சாமியாரின் ஆச்சிரமத்தைக் கண்டு பிடித்துவிட்டார். வாசலில் நின்று ஆச்சிரமத்தை உற்றுப் பார்த்தார். உள்ளே ஆள்கள் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. அத்துடன் புனிதமான இடமாக அவருக்குத் தோன்றவில்லை. ஒரே பற்றைக் காடாகக் காட்சியளித்தது.

திரும்பிக் கதிரமலையைப் பார்த்தார்.

''கதிரமலை. ஆக்கள் இல்லையோ? கதவும் பூட்டிக் கிடக்கு!''

''சிலவேளை பின்னுக்கு நிப்பினம்.எதுக்கும் கோணை ஒருக்கா அமர்த்திப் பாருமி கோவன்.''

கதிரமலை மதிலுக்கு மேலால் எட்டிப்பார்த்துவிட்டுச் சொன்னான். சிவபாதம் ''ஹோணை'' ஒலிக்கச் செய்தார். சற்றுநேரத்தின் பின் ஆச்சிரமத்தின் கதவு திறக்கப்பட்டது. பெண்மணி ஒருவர் வெளியே வந்தார். சுமார் நாற்பது வயதிருக்கும். நெற்றியிலே குங்குமப் பொட்டு இருந்தது. விலையுயர்ந்த சேலை அணிந்திருந்தார்.

''ஆரைத் தேடுறியள்?''

கிட்ட நெருங்கி வந்ததும் கேட்டார்.

''சாமியாரிட்டை வந்தனாங்கள்'' சிவபாதம் குரலில் மிகுந்த பணிவை வரவழைத்துக் கொண்டு சொன்னார்.

''அவர் இல்லையே''

''அவர்'' என்றதும் சிவபாதம் திகைத்துப் போய்க் கதிரைமலையைத் திரும்பிப் பார்த்தார். கதிரமலையின் முகத்திலே சிரிப்பு அப்பட்டமாகத் தெரிந்தது.

''நாங்கள் சாமியாரைச் சந்திக்கவேணும் அம்மா. ஒரு முக்கிய அலுவல். உரும்பிராயிலை இருந்து வாறம்''

''இப்ப வாறநேரம்தான். உள்ளுக்கவந்து இருங்கோ. வந்திடுவார்'' என்று கூறிக்கொண்டு அந்தப் பெண்மணி கேற்றை நன்றாகத் திறந்து விட்டார்.

சிவபாதம் மோட்டார் சைக்கிளை உள்ளே உருட்டினார். கதிரமலை பின்தொடர்ந்தான்.

ஆச்சிரமத்தின் படிகளிலே ஏறி உள்ளே நுழைந்தார்கள். கோயில் போன்ற புனிதமான இடங்களிலே காணப்படும் தனித்துவமான நறுமணம் அங்கு வீசவில்லை. அந்த நீண்ட மண்டபம்



நிறைய சுவாமிப்படங்கள் காட்சியளித்தன. எல்லாப் படங்களிலும் தூசி படிந்திருந்தது.

அந்தப் பெண்மணிஇரண்டு பாய்களைக் கொண்டு வந்து விரித்து விட்டுப் போனார். இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

கதிரமலை சிவபாதத்தை மெல்லச் சுரண்டினான்.

''உது சாமியாரின்ர மனிசியோ? இல்லாட்டி...''

சிவபாதம் கதிரமலையின் தலையிலே ஓங்கித்தட்டினார்.

''எட விசார! மெல்லமாக் கதையடா. அவர் முற்றும் துறந்த பெரியமகானடா. உந்த எளியவேலை செய்யார்.''

''இல்லையண்ணை. இந்த ஆச்சிரமத்திலை வேறை ஆக்கள் இருக்கிறதாத் தெரியேல்லை. அதோட இந்த மனிசி 'அவர் இவர்' எண்டு கதைக்குது.''

''உனக்கு எல்லாத்திலையும் சந்தேகம்தான். ஒரு வேளை நந்தவனத்தைப் பராமரிக்கிற ஆளா இருக்கும்'' சிவபாதம் சமாதானம் சொன்னார்.

''நந்தவனமோ? ஒரே பத்தைக் காடாக்கிடக்கு. அண்ணை! நான் இயமனுக்கு இடியப்பம் தீத்தினனான். என்னைப் பேக்காட்டேலாது.''

திடீரென கேற்றடியில் ஆரவாரம் கேட்க எட்டிப்பார்த்தார்கள். சாமியார் உதவியாளருடன் வந்து கொண்டிருந்தார்.

''டேய்! டேய்! எழும்படா. சாமியார் வாறார்.''

சிவபாதம் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்தார். கதிரமலை சாவதானமாக எழுந்து நின்றான்.

சாமியார் வாயிற்படியிலேறியதும் சிவபாதம் அட்டாகமாக விழுந்து வணங்கினார். கதிரமலை பேசாமல் நின்றான்.

''மங்களம் உண்டாகட்டும்.''

சாமியார் கையைத் தூக்கி ஆசீர்வதித்து விட்டுக் கதிரமலையை ஒரு பார்வை பார்த்தார். சிவபாதம் கைகளைக் குறுக்கே கட்டிக் கொண்டு குறுகி நின்றார்.

''ரமணி!''

உள்ளே திரும்பிக் கூப்பிட்டார் சாமியார்.

''ஓமோம். வாறன்'' உள்ளிருந்து பதில் வந்தது.

கதிரமலை சிவபாதத்தை ஏளனமாகப் பார்த்துப் புன்னகைத்தான். ரமணி எனப்படுகின்ற அந்தப் பெண்மணி வெளியே வந்தார்.

''நல்லாக் களைச்சுப் போனன். நாலுபேருக்குத் தண்ணி கொண்டா'' சாமியார் சொல்லிவிட்டுச் சிவபாதத்தைத் திரும்பிப் பார்த்து, ''அமருங்கள்'' என்றார்.

சாமியார் அமர்ந்தபின் இவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள்

சாமியார் கொஞ்ச நேரம் இருவரையும் பார்வையால் அளந்தார். பிறகு கேட்டார்,

''என்ன அலுவலாக வந்தீர்கள்?''

''அது ஐயா. நாங்கள் உரும்பிராய் கிராம முன்னேற்றச்சங்கத்திலை இருந்து வாறம்'' சிவபாதம் பணிவுடன் பதிலளித்தார்.

''உரும்பிராய் கிராம முன்னேற்றச் சங்கம்... ஓமாம் கேள்விப்பட்டிருக்கிறன். நல்லநல்ல பணிகள் செய்கிறீர்கள்.''

''ஓம் ஐயா. எல்லாம் உங்கட அருள்தான். ஒரு பாலர் பாடசாலை நடத்துறம். ஐம்பது பிள்ளையள் படிக்குதுகள். கலை வகுப்புக்களும் நடத்துறம்''

''எனக்கு எல்லாம் தெரியும் அப்பனே! நீ வந்த வியமும் அறிவோம். இருப்பினும் விவரமாகக் கூறு''

சாமியார் கண்களை மூடிக் கொண்டு சொன்னார்.

''பாத்தியே?'' என்பது போல் சிவபாதம் கதிரமலையை ஏளனமாகப் பார்த்தார். கதிரமலை அப்போதும் தனது சிரிப்பை விடவில்லை.

''ஐயா. எங்கட சங்கத்தின்ர மூண்டாம் ஆண்டு விழா வறமாதம் வருகுது. அதிலை இந்தப் பிள்ளையள் எல்லாத்துக்கும் குடுக்கிறதுக்கு ஏதாவது புத்தகங்கள் தந்து உதவினியளெண்டா.''

சிவபாதம் இழுத்தார்.

''புத்தகம்... இப்பதரக் கூடியதாக ஒன்றுமில்லையே. ம்... ஒரு நூறு புத்தகமெண்டாலும் வேணும் என்ன?''

சாமியார் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு யோசித்தார்.

அப்போது ரமணி வந்து எல்லோருக்கும் தேநீர் கொடுத்து விட்டுத் திரும்பிப் போனார்.

''ஐயா! இந்த அம்மா ஆரையா?'' கதிரமலை இவ்வாறு கேட்டவிதம் பிடிக்கவில்லையோ என்னவோ சாமியார் ஒரு மாதிரிப் பார்த்தார். பிறகு சமாளித்துக் கொண்டு சொன்னார்.

சஞ்சீவி சிறுகதை

''இது என்னுடைய சீடப் பெண். என்னில் மிகுந்த பக்தி உடையவள்.''

''பெரிய பக்தி இருக்கிற மாதிரித் தெரியேல்லையே! உங்களோடை கதைக்கிற முறை ஒரு மாதிரிக்கிடக்கு?''

சாமியார் தேநீர்க் கோப்பையைப் பட்டென்று வைத்தார். அதில் அவருடைய கோபம் வெளிப்படையாகத் தெரிந்தது.

சிவபாதம் அவசரமாகக் குறுக்கிட்டார்

''ஐயா இவனின்ர கதையளை ஒரு பொருட்டா எடுக்காதையுங்கோ. இவன் சரியான பனித்தண்ணி உப்பிடித்தான் விசர்க்கேள்விகள் கேட்பான்.''

உடுவில்
## அரவிந்தன்

''அப்பனே இவ்வளவு புனிதமான இடத்துக்கு இவனைப் போன்றவர்களை அழைத்து வரக்கூடாது''

''ஓம் ஐயா. பிழைதான். மன்னிச்சுக்கொள்ளுங்கோ''

''சரி. அந்தக்கதையைவிடு. உன்ர சங்க ஆண்டுவிழாவை எப்படி... பெரிசாச் செய்வியோ?'' சாமியார் கண்களை மூடிக்கொண்டு கேட்டார்.

''நல்ல பெரிசாய்ச் செய்வம் ஐயா. பேப்பரிலை போட்டு... நோட்டீஸ் அடிச்சு...''

''ஆ! அதுதான் நல்லது. பெரிய பெரிய ஆக்களுக்கெல்லாம் சொல்லுவியோ?''

''கட்டாயம் சொல்லுவம் ஐயா. நீங்கள் புத்தகம் தருவீங்கள் தானே?''

சிவபாதம் மிகுந்த ஆவலுடன் கேட்டார்.

''பின்னைத் தராமல்...? இப்படியான பொதுப்பணிகளுக்கு உதவத்தானே நாங்கள் இருக்கிறம். வாற புதன் கிழமை காலமை வந்து

(X ஆம் பக்கம் பார்க்க)

# மந்திரக்காளி

## சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை


### ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

அழகான நகரத்தின் சற்று ஒதுக்குப் புறமான பகுதி. இருள் அடர்ந்த ஒரு இரவுப் பொழுது. நள்ளிரவுக்கு இன்னும் ஐந்து நிமிடங்களே இருந்தன. செல்வச் செழிப்பு மிக்க அம் மாளிகையில் மூவர் மட்டும் விழித்திருந்தனர். அவர்களில் இருவர் ஓர் அறையைத் திறக்கப் பெரிதும் முயற்சித்துக் கொண்டிருந்தனர், ஒருவன் சுடர்கின்ற விழிகளையுடைய ஒரு சிறுவன். பெயர் ஆதித்தன். வயது பதின் நான்கு. அருகே ஒரு சிறு பெண். அவனது தங்கை. அவளுக்கு நிலா என்று பெயர். நான்கு வயது இளையவள்; நிலவு அவள்முகம் கண்டால் நின்று திரும்பிப் பார்த்துப் பெருமூச்சு விட்டுப் போகும். அவ்வளவு அழகு. அவர்களின் முகத்தில் பெருஞ் சோகம் கவிந்திருந்தது.

அந்த அறை — ஒரு மர்ம அறை. ஒரு வருடத்திற்கு ஒருமுறை, ஜூன் மாதத்தின் பதின்நான்காம் திகதி மட்டும் அவ்வறை திறக்கப்படும். அது கடந்த ஆறுவருடமாகக் கடைப் பிடிக்கப் பட்டுவரும் மீற முடியாத நடைமுறையாக இருந்துவந்தது. நள்ளிரவு வேளையில் திறக்கப்படும் அறை காலை நான்கு மணியின்முன் பூட்டப்பட்டுவிட வேண்டும். இல்லாது போனால் விளைவுகள் பயங்கரமானதாக இருக்கும். மாளிகையின் நாலா புறமும் பேய்க்கூச்சல்கள் கிளம்பும்; அட்டகாசமான சிரிப்பொலிகள் இதயத்தை அதிரவைக்கும். இதை அனுபவபூர்வமாக ஒருமுறை அறிந்த பாட்டிதான் கண்டிப்பாக அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தாள். ''குறிப்பிட்ட நாள் தவிர மற்றைய நாள்களில் அவ் அறையினுள் நுழையக்கூடாது''என்று.

மௌனமான இரவு நகர்ந்து கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ ஒரு ஆந்தை அலறிற்று. அப்போது ''கிளிக்'' என்றொரு சத்தம் கேட்டது. பூட்டுத் திறந்து கொண்டது. இருவரும் உள்ளே பிரவேசித்தார்கள் அங்கே......

தூசிபடிந்திருந்த அறையின் குறுக்கே வௌவால்கள் சிறகடித்துப் பறந்தன.



நிலா அண்ணனின்கையை இறுகப் பற்றிக் கொண்டாள். அவளது கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. ஆதித்தன் மின்விளக்கைப் போட்டான். அறையினுள் சடுதியாகப் பரவிய வெளிச்சத்துக்கு இன்னுஞ் சில ஜந்துக்கள் ஓடிமறைந்தன. அறை நடுவே—ஆணும் பெண்ணுமாக ஆளுயரமெழுகுப் பொம்மைகள் இரண்டு நின்று கொண்டிருந்தன. பொம்மைகளின் [illegible] அன்னையும் தந்தையும் என்பது [illegible] ஆதித்தன் தூசியை நன்கு துடைத்து அகற்றினான். நிலா தன் கையில் வைத்திருந்த வெண்மலர்களைப் பொம்மைகளின் பாதங்களில் வைத்தாள். அவர்கள் இருவரினதும் கண்கள் கலங்கியிருந்தன.

ஆதித்தன் தனது வலது கையைப் பெற்றோரின் பாதங்களில் வைத்தான். சத்தியம் செய்வது போல. அதே பாணியில் அவனது கரங்களின் மீது நிலாவின் பிஞ்சுக்கரங்களும் படிந்தன.

''இறைவனைத் தவிர வேறு எந்த சக்திகளுக்கும் நாம் பணிய மாட்டோம். கொண்ட இலட்சியத்தை அடையும்வரை ஓயமாட்டோம். இது சத்தியம்'' உறுதி எடுத்துக்கொண்டார்கள். இந்தச் சத்தியம் இவர்களுக்கு எப்படியெல்லாம் கஷ்டம் கொடுக்கப் போகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதே வேளையில்...

## ச. சாரங்கா

கொல்லிமலைக் கிராமத்து மயானத்தில் மந்திரவாதி ''சாம்பவா'' அமர்ந்திருந்தான். அவனது சிவந்த விழிகளும், முதுகில் புரளும் முடியும், மண்டையோட்டு மாலையும் பயந்தருவதாக இருந்தன. வாயினுள் பயங்கரமான மந்திரங்கள்! ''வருகிறீர்களா? வாருங்கள். சிங்கத்தின் குகைக்குள் சிறுமுயற்குட்டிகளா?'' உறுமிய அவனது உள்ளங்கையில் இருந்த பச்சை இலை மீது தடவப்பட்டிருந்த மைமீது... ஆதித்தனும் நிலாவும் தெரிந்து கொண்டிருந்தார்கள். பொம்மைகளின் முன் சத்தியம் செய்யும் நிலையில்...

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பியத் தலைவியின் வழக்குரை வன்மை!

புலவர் ம. பார்வதிநாதசிவம்

'குடும்பமே கோவில்; கொழுநனே தெய்வம்.!' — என்று வாழ்ந்த குலமகள் ஒருத்தி தன் கணவன் கள்வன் என்று பழிசுமத்தப்பட்டுக் கொல்லப்பட்டான் என்பதை அறிந்ததும் பொங்கி எழுந்து ஆன்றோரும் அமைச்சரும் நிறைந்த அவையில் தோன்றி நீதிகேட்டு வழக்குரைத்து வீரமும் தர்மமும் தழைக்கச் செய்தாள்.

கடவுளையே பாடும் துறவியாகிய இளங்கோ அடிகள் அப்பெண்ணின் கற்பு, பண்பு, வீரம், நீதி இவைகளை வியந்து அவளைக் கண்கண்ட தெய்வம் என்று கருதிக் காப்பியத் தலைவியாக்கி உலகுதொழச் செய்தார்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்ற கேள்விக்கு பெண்ணிற் பெருந்தக்க பெண்ணே தான்! என்று தானே பதில் ஆனாள்.

'சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்றார் வள்ளுவர். சொல் என்பதற்குப் புகழ் என்று பொருளுரைத்தார் பரிமேலழகர்.

கண்ணகி, அரசன் முன் தோன்றி வழக்குரைத்துத் தன் புகழையும் கணவனின் புகழையும் குடும்பத்தின் புகழையும் காத்தாள்.

கண்ணகியை "விளங்கிய பெருங்குணத்துக் காதலாள்' என்று போற்றிய இளங்கோ அடிகள் அந்த விளங்கிய பெருங் குணங்களைக் காப்பியம் முழுதும் காட்டினார்.

கண்ணகியின் சொல்வன்மை— வழக்குரை திறனை —வழக்குரை காதையில் காட்டினார்.

இப்போது வழக்காடுதல் என்ற சொல் வழக்கில் உள்ளது. இளங்கோ அடிகள் வழக்குரைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். வழக்குரைக்கும் காதைக்கு இளங்கோ அடிகள் வழக்குரை காதை என்று பெயரிட்டுள்ளார்.

## "கள்வனோ என்கணவன்"?

அரசனிடம் சென்று வாதாடுவதற்கு முன்னரே தன் கணவன் குற்றமற்றவன் என்பதையும் அரசன் தவறு செய்து விட்டான் என்பதையும் மதுரை மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்பிய கண்ணகி கண்கண்ட தெய்வமாகிய சூரியனை நோக்கி "காய்கின்ற கதிரையுடையவனே! கதிரவனாகிய செல்வனே! நீ பரந்த அலைகளையுடைய கடலை வேலியாகக் கொண்ட இந்த நிலவுலகில் தோன்றும் பொருள் எல்லாவற்றையும் அறிவாய்! என் கணவன் கள்வனா? இதனை உலகறியச் சொல்" என்றாள்.

"உன் கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்ற இவ்வூரை தீ எரிக்கும்" என்றான் சூரியன்.

"பாய்திரை வேலிப்
படுபொருள் நீ அறிதி
காய்கதிர்ச் செல்வனே!
கள்வனோ என் கணவன்
கள்வனோ அல்லன்
கருங்கயற் கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்
என்றது ஒரு குரல்."

முதலில் சூரியனைச் சாட்சியாக வைத்து மதுரை மக்களுக்கு கோவலன் கள்வன் அல்லன் என்பதை நிருபித்த கண்ணகி, மன்னன் அவையிலும் நிருபிக்க அரண்மனைக்குச் சென்றாள். மதுரை மக்களுக்கு நிருபிக்கச் சூரியனைச் சாட்சியாகக் கொண்ட கண்ணகி மன்னனுக்கு நிருபிப்பதற்குச் சிலம்பை ஆதாரமாகக் கொண்டு செல்கிறாள்.

## "தேராமன்னா செப்புவதுடையேன்"

கண்ணகியைக் கண்ட அரசன் "நீர் சொரியும் கண்ணுடன் எம் முன் வந்து நிற்கும் நீ யார்?" என்றான்.

அதற்குக் கண்ணகி "தேராமன்னா செப்புவதுடையேன்" என்கிறாள்.

மன்னனிடம் பேசும் முதல் வாக்கியத்திலேயே பொருளாழம் தெரிகிறது. அரசர்களுக்குச் சிறப்புச் செய்யும் அறிவு ஆராய்ச்சி அறிவு. நீ அந்த அறிவைப் புலப்படுத்த வில்லை என்கிறாள்.

உன்னிடம் சிறந்த அமைச்சர்கள் இருக்கிறார்கள். சட்டம் தெரிந்த சட்டவல்லுநர்கள் இருக்கிறார்கள். அறம் தெரிந்த ஆன்றோர்கள் இருக்கிறார்கள் ஆனால் இவர்கள் எல்லோரும் இருந்தும் இவர்களோடு ஆராயாது—தீரவிசாரியாது— என் கணவனைக் கள்வன் என்று கொன்றுவிட்டாய் என்பதை உரைக்க 'தேராமன்னா' என்ற அடியைக் கூறுகிறாள்.

"செப்புவதுடையேன்" என்பதன் மூலம், ஒரு குற்றமும் அறியாத எனது கணவனை அழைத்து அவன் செப்புவதை சொல்லுவதை நீ கேட்டிருக்கலாம். ஆனால் தவறிவிட்டாய் 'நான் சொல்லுவதை இப்போது கேள்' என்கிறார். தொடர்ந்து தன்னை அறிமுகம் செய்கிறாள்.

## அறிமுகச் சிறப்பு

"நீயார்?" என்ற அரசனின் கேள்விக்குப் பதிலாக முதலில் தனது ஊரைச் சொல்லிப் பின்னர் தனது கணவனின் தந்தை யார் என்பதைச் சொல்லி பின்னர் தன் கணவரின் பெயரைச் சொல்லுகிறாள்.

தன்னை அறிமுகம் செய்யும் அறிமுக உரையிலேயே இளங்கோ அடிகள் கண்ணகியின் வழக்குரை வன்மையை அழகுறக் காட்டுகிறாள்.

"பருந்து ஒன்று துரத்தி வரப் புறா ஒன்று அடைக்கலம் என்று சிபிச்சக்கரவர்த்தியை வந்தடைந்தது. சிபிச்சக்கரவர்த்தி 'என்னை அடைக்கலமென்று வந்த புறாவை நான் காப்பாற்றியாக வேண்டும். அதன் இறைச்சிக்குப் பதிலாக என் உடம்பின் இறைச்சியைத் தருகிறேன்' — என்று பருந்துக்குத்தன் இறைச்சியை வெட்டிக் கொடுத்தான். அப்படிப் பட்ட சிபி ஆண்ட புகார் எனது ஊர்" என்றாள் கண்ணகி.

புகார் என்னும் கண்ணகியின் ஊருக்கு இதுமட்டும் தான் பெருமையா? இன்னும் உண்டு.

"ஆராய்ச்சி மணியை அடித்த பசுவுக்கு நீதி வழங்குவதற்காகத் தன் மகனையே தேர்ச்சில்லில் இட்டுக் கொன்றானே மனுநீதி கண்ட சோழன்! அவன் ஆண்ட ஊராகிய புகார் என்பதே எனது ஊர்!" என்கிறாள்.

"புள்ளுறு புன்கண்
தீர்த்தோன் அன்றியும்
வாயிற்கடை மணி
நடுநா நடுங்க
ஆவின் கடைமணி
உகுநீர் நெஞ்சுசுடத்தான்தன்
அரும் பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப்
புகாரென் பதியே"

ஊரை அறிமுகம் செய்வதிலேயே கண்ணகியின்வாக்கு வன்மையைக் காட்டுகிறார் இளங்கோ.

"எனது அரசன், அஃறிணை உயிராகிய புறாவுக்கு இரங்கினான்! நீ இவ்வுலகப் பிறவிகளில் சிறந்ததாகிய மனிதப் பிறவிக்கு — என் கணவனுக்கு இரங்கத் தவறி விட்டாய்!".

"எனது அரசன் பசுவுக்கும் நீதி வழங்கித் தன் மகனைத் தேர்ச்சில்லில் இட்டான். நீயா மனிதனுக்கு நீதி வழங்காது கொன்று விட்டாய்!" என்கிறாள்.

தன் ஊர்ச்சிறப்பை வழக்கில் முதலில் எடுத்துரைத்த கண்ணகி தன் கணவன் யார் என்பதைச் சுருக்கமாக வழக்குக்கு வேண்டிய முறையில் எடுத்துக் கூறுகிறாள்.

## புகழ் மிகுந்த குடியில் வந்த கோவலன்

"ஏசாச்சிறப்பின்
இசைவிளங்குபெருங்குடி
மாசாத்துவணிகன் மகன்"
என்கிறாள்.

என்றுமே எவராலுமே பழிக்கப் பெறாத சிறப்பினை உடைய 'பெரும் குடும்பம் கோவலனின் குடும்பம் என்றும், பலராலும் போற்றப் படும் குடும்பம் என்பதனைப் புகழ்விளங்கும் குடும்பம் என்றும் செல்வம், கல்வி, பண்பாடு, நீதி, நேர்மை அனைத்திலும் பெரிய குடி என்பதை விளக்கப் பெருங்குடி என்றும் அத்தகைய பெருங் குடியில் வந்தவன் கோவலன் என்றும் கோவலனது பரம்பரைச் சிறப்பைக் கூறிப் பரம்பரை மூலம் கோவலன் குற்றவாளி அல்லன் என்று வழக்குரைஞர் கண்ணகி முதலில் நிருபித்தாள். அவன் தந்தை மாசாத்துவான் என்ற வணிகன் என்பதையும் கூறினாள்.

தான் யார் என்பதைக் கூறும்போதும் கண்ணகி வழக்கை மனத்தில் வைத்துக் கொண்டு வழக்கிற்கு ஆதாரமாகவே கூறுகின்றாள்

"என்காற் சிலம்பு
பகர்தல் வேன்டி நிற்பாற்
கொலைக் களப்பட்ட
கோவலன் மனைவி"

இத்தொடரில் "என்காற் சிலம்பு" என்றது வழக்கிற்கு மிக அவசியமான தொடர்.

## என்காற் சிலம்பு

"உனது மனையின் சிலம்பு என்று நினைத்து எனது கணவனைக் கொன்று எடுத்து வைத்திருக்கிறாயே ஒரு சிலம்பு அது என்காற் சிலம்பு!" என்கிறாள்.

"என்னுடைய சிலம்பை விற்க வந்து உன்னாற் கொல்லப்பட்ட கோவலனின் மனைவி நான்!" என்கிறாள்.

நீ வழங்கியது மரணதண்டனை அல்ல. நீ புரிந்தது படுகொலை என்கிறாள்.

## கண்டளவே தோற்றான்

கண்ணகியைக் கண்டதும் கண்ணகியின் வார்த்தைகளைக் கேட்டதும் தான் தவறு செய்துவிட்டதைப் பாண்டியன் உணர்கிறான். இதனை இளங்கோ அடிகள் "கண்டளவே தோற்றான்" என்கிறார்.

எனினும் அரசன் வாதாடுகிறான். "கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று" என்கிறான்.

கள்வனைக் கொல்வது கொடுங்கோல் இல்லை என்கிறான்.

அப்படியானால் கோவலன் கள்வன் தான் என்பதை நிரூபிக்க வேண்டியபொறுப்பு அரசனைச் சேர்கிறது.

கோவலன் கள்வன் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கண்ணகியைச் சேருகிறது.

எப்படி இந்த வழக்கைத் தீர்க்கலாம் என்ற சட்ட நுணுக்கம் அரசனுக்குத் தான் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசன் எதுவும் தோன்றாமல் தடுமாறுகின்றான்.

தடுமாறுகின்ற அரசனை நோக்கிக் கண்ணகி உன்னால் கோவலன் கள்வன் என்று நிரூபிக்க முடியாது. ஏன் என்றால் அவன் கள்வன் அல்லன் என்று கூறுபவள் போல அரசனை ஒரு முறை பார்க்கிறாள்.

பின்பு கோவலன் கள்வன் இல்லை என்பதை நிரூபிக்கும் வேலையை—அதாவது அரசனே வழக்குத் தீர்க்க வேண்டிய வழிமுறையைக் கண்ணகியே சொல்லுகிறாள்.

"இந்த வழக்கைச் சிலம்பில் உள்ள பரலைக் கொண்டே தீர்த்துவிட முடியும். எனது சிலம்பில் உள்ள பரல் மாணிக்கம்" என்கிறாள். "என் காற் பொற்சிலம்பு மணிஉடை அரியே" என்கிறாள்.

அப்பொழுதுதான் பரலைக் கொண்டு சிலம்பு யாருடையது என அடையாளம் காணும் முறை அரசனுக்குப் புலப்பட்டது. அதுவே சட்டரீதியாகச் சரியெனவும் பட்டது. "தேராமன்னா செப்புவதுடையேன்" என்ற கண்ணகியைப் பார்த்து "தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி" என்கிறான்.

"தேன்போலும்மொழியை உடைய கண்ணகி வழக்கைத் தீர்ப்பதற்குச் சொன்ன வழி—சொன்ன மொழி—நீதியானது" என்கிறான். கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவா என்ற மன்னன் கண்ணகியைக் கண்டபோதே—கண்ணகியின் தோற்றத்தைக் கண்டபோதே— கண்ணகியின் வார்த்தையில் உறுதி இருப்பதைக் கண்டபோதே—கண்ணகியுடன் தர்மம் நிற்பதைக் கண்டபோதே— தோற்றுவிட்டான். சிங்கமாய் இருந்த பாண்டியன் நெடுஞ்செழியன் அறம் பிழைத்த காரணத்தால் சிறுமுயல் ஆகிவிட்டான்.

"ஆராய்ச்சிஅறிவில்லா மன்னவனே!" என்று கண்ணகி விளிக்கும் அளவுக்கு நிலை தாழ்ந்துவிட்டான்.

தர்மத்துக்கும் உண்மைக்கும் பக்கத்தில் நின்ற கண்ணகியைப் பார்த்து அவன் "தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி" என்றது தன் செயல் செவ்வையற்றது—நீதி அற்றது—என்பதை ஒப்புக்கொண்டதாகவே முடிந்தது.

கண்ணகி தன் சிலம்பின் பரல் மாணிக்கம் என்றதும் அரசன் "எம்முடைய சிலம்பின் பரல் முத்து" என்றான். சிலம்பினைக்கொண்டு வருமாறு பணியாட்களுக்கு உத்தரவிட்டான். சிலம்பைக் கண்ணகிமுன் வைத்தான். கண்ணகி சிலம்பை உடைத்தாள். உள்ளிருந்த மாணிக்கப் பரல் தெறித்தது'

கோவலன் கள்வன் இல்லை என்பதைக் கண்ணகி நிரூபித்தாள்.

"யானோ? அரசன் யானே கள்வன்" என்றான் அரசன். கோவலன் கள்வன் இல்லை.

(XI ஆம் பக்கம் பார்க்க)

# கைக்கு

"பிளாஸ்டிக் சேர்ஜரி" —
முகத்தில் மூக்கு போன்ற
படும் வெறும் அறுவைச் சிகிச்சை



எடுத்துப் பொருத்திவிட முடியும்.
இத்தகைய விரல் அறுவை
விரல்களுக்கு இடையே
தலைமுடியை விட மிக மெலிதாக
துண்டான கைப்பெருவிரல்

# மிர் விண்வெ… தோன்றிய

விண்ணில் அந்தரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் ரஷ்யாவின் "மிர்" ஆய்வு நிலையத்தில் இருந்து வெளியே வந்து விண்ணில் ஆறு மணி நேரம் நடந்து கொண்டிருந்த இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்கள் 'மிர்' நிலையத்துக்கு வெளியே நுரை ஒன்றை கண்டு வியப் படைந்தனர்.

அந்த நுரை இன்னதென்று தெரியவில்லை.

'மிர்' மேடையில் பழுது பார்ப்பு வேலையை இருவரும் செய்து கொண்டிருந்தனர். ஒரு வால்வைப் பொருத்திக் கொண்டிருந்த போது வெள்ளை நிறப் பொருளை அவ்விருவரும் பார்த்ததாகவும் —

அந்தப் பொருள் நுரை போல் இருந்தது என்றும் —

ஆனால் கடுமையான பொருள் போல தெரிந்தது என்றும் —

மொஸ்கோவில் ரஷ்ய விண்வெளி நிலையத்தின் பேச்சாளர் சொன்னார்.

தால்காட் முசாபாயோவ், நிகோலாய் புடோரின் என்ற அந்த இரண்டு வீரர்களும் உடனடியாக மொஸ்கோ நிலையத்துடன் தொடர்பு கொண்டு பேசினர். அதனைத் தொடர்ந்து வால்வு மாற்றும் வேலையை விட்டு விட்டு அந்த இருவரும் "மர்ம நுரை"யை ஆராய்ந்தனர்.

இப்போதைக்கு அந்த நுரை என்ன என்பதை யாராலும் கூற முடியாது ஹைட்ரஜன் வாயுவுடன் தூசி துகள்கள் கலந்து அப்படியே இறுகிப் போயிருக்கும் நுரை போன்ற பொருளைப் போல அது தெரிகிறது என்று பேச்சாளர் சொன்னார்.

விண்வெளி வீரர்கள் நுரையில் கொஞ்சம் எடுத்து வைத்திருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

அந்தரத்தில் நடந்த இரு வீரர்களும் 'மிர்' நிலையத்தின் மோட்டார் ஒன்றை கழற்றினர். ஆகாயத்தில் அப்படியே அந்த மோட்டாரை விட்டு விட்டனர்; அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கை' கொடுக்கும் கால்!

உடல் உறுப்பை மாற்றி அமைத்தல், வெட்டுக் காயத்தழும்புகளை மறைத்தல் போன்றவற்றுக்காகச் செய்யப்
யே இது என்று மட்டும் நீங்கள் கருதினால் அது தவறாகும்.



விபத்துக்களால் உடல் உறுப்புகள் சேதமடைந்தாலோ அல்லது துண்டாகிப் போனாலோ அவற்றை இணைப்பதற்குக் கூட இந்த மருத்துவ சிகிச்சை உதவுகின்றது.

சேதமடைந்த உறுப்புக்காக உடலின் வேறு ஒரு பகுதியில்இருந்தும் கூட உடல் உறுப்பை எடுத்து இந்த சிகிச்சையின் மூலம் பொருத்தலாம்.

'பிளாஸ்டிக் சேர்ஜரி'யின் புதிய உத்தியான 'மைக்ரோ சேர்ஜரி' நன்கு விருத்தியடைந்து பல ஆச்சாரியங்களை நமக்குஏற்படுத்தி வருகின்றது.

துண்டான ஓர் உறுப்பின் ரத்தநாடி நாளங்களை நுணுக்குக் காட்டிகள் ('மைக்ரோஸ்கோப்') வழியாகப் பார்த்தபடி உடலின் ரத்த நாடி, நாளங்களுடன் இணைத்துத் தைப்பதே 'மைக்ரோ சேர்ஜரி' ஆகும். இந்த அறுவை சிகிச்சை மூலம் துண்டான உறுப்புக்கு உயிர் கொடுத்து மீண்டும் அதனை உடல் உறுப்பாகத் தொடர்ந்து செயற்பட வைத்து உயிர்வாழ வைக்கலாம்.

விபத்துக்களில் கை அல்லது கால் விரல் துண்டாக்கப்பட்டால் இந்த சிகிச்சை முறையின்படி மீண்டும் பொருத்திவிடும் வாய்ப்பு மேலைநாடுகளில் பெரும்பாலும் உறுதிப் படுத்தப்பட்டு வருகின்றது.

கைப் பெருவிரல் துண்டாகும் போது அந்த நபரின் காலின் பெரு விரலையோ அல்லது அதற்கு அடுத்துள்ள இரண்டாவது விரலையோ 'மைக்கிரோ சேர்ஜரி' மூலம்



சிகிச்சைக்கு ஆறு மணித்தியாலங்கள் முதல் எட்டு மணித்தியாலங்கள் வரை எடுக்கலாம்.
துண்டிக்கப்பட்டுள்ள ரத்த நாளங்கள், தசை நார்கள் போன்றவற்றை 'மைக்ரோஸ் கோப்' மூலம் பார்த்து,
உள்ள நூல் இழை மூலம் தைத்து இணைப்பதே இச்சிகிச்சை முறை.
ஒன்றையும் மைக்ரோ சேர்ஜரி மூலம் பொருத்தப்பட்ட அக்கையையும் படத்தில் காணலாம். ★

# 6, 000 ஆண்டுகளுக்கு முன் விழுந்த விண்கல்!

நீங்கள் கீழே பார்ப்பது "சாக்கோ" என்ற விண்கல். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமி மீது வீழ்ந்த விண்கல் இது. மொத்த எடை 37 தொன்.

கேம்போ டெல்சிஸ்லோ என்ற ஆர்ஜென்ரீன நிறுவனம் ஒன்று இக்கல்லை விற்பனை செய்யப்போவதாக "இன்டர்நெற்" மூலம் அறிவித்துள்ளது.

விண்கல் விலை என்ன என்பதை அந்த நிறுவனம் தெரிவிக்கவில்லை இருந்தாலும் கனேடியர் ஒருவர் 22. 2 மில்லியன் டொலருக்கு விலை கேட்டதாக தாலெம் என்ற செய்தி நிறுவனம் கூறுகிறது.

இந்தக் கல்லை அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி வில்லியம்ஸ் காசிடி 1972 இல் கண்டு பிடித்தார்.

எல் சாக்கோ கல், கலாசார அறிவியல் வாய்ப்புகளை வழங்குகிறது. அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கலாம். ஆராய்ச்சிகளையும் நடத்தலாம் என்கிறது 'இன்டர்நெற்' விளம்பரம். காதலுக்கும் ராசியானதாம் இது!

விண்கல் விழுந்து கிடக்கும் நிலம் தன்னுடையது எனபதால் அந்தக் கல்லும் தன்னுடையதே என்கிறது அந்த நிறுவனம்.

ஆர்ஜென்ரீனாவில் இந்தக் கல் கிடக்கின்ற மாநிலத்தின் பெயரே இந்தக் கல்லுக்கும் சூட்டப்பட்டது. சாக்கோ மாநிலச் சட்டத்தின்படி விண்கல்கள் பாதுகாக்கப்பட்ட பொருள். அது அரசாங்கச் சொத்து. விற்க முடியாது.




சாக்கோ மாகாணத் தலைநகர் ரெசிஸ்டென் சியாவுக்கு தெற்கே 350 கிலோ மீற்றர் தொலைவில் இந்தக் கல் கிடக்கிறது. விஞ்ஞானிகள், மாணவர்கள் சுற்றுப் பயணிகள், வர்த்தகத் துறையினர் பலரும் வந்து பார்த்து பார்த்து செல்கிறார்கள். ★

# வெளி ஓடத்தில் ...ள்ள மர்மநுரை

...ட்டார் உலகத்தை ...ண்டு காலத்துக்குச் சுற்றி ...து பிறகு அது எரிந்து ...ற்று மண்டலத்தில் ...ர்த்தி அதிகமான படல ...கிப் போய்விடும்.

நிலையத்துக்குவெளியே இருந்தனர்.

விண்வெளி வீரர் தால்காட் முசாபாயோவ்வின்விண்வெளி கவச உடை கீழே தரைநிலையத்துக்கு வழக்கமாக அனுப்



...ஷ்ய விண்வெளி வீரர்களான தால் காட் ... (வயது 47), புடாரின்னும் (வயது 44) 'மிர்' ...வு கலத்துடன் இணைந்திருக்கும் ஒரு மோட் ...ரை கழற்றிவிட முயல்கிறார்கள். இந்த நேரத் ... தான் "மர்ம நுரையை" அவர்கள் கண்டார்கள்.

...மிர்' நிலையத்தில் 1992 ... ஆண்டு அந்த மோட் ... பொருத்தப்பட்டது. ...பொருள் இல்லாததால் ...து நாள்களுக்கு முன் அது ...லை செய்யாமல் நின்று ...டது.

...ண்ணில் சுற்றிக்கொண்டி ...ரும் 'மிர்' ஆய்வு நிலை ...தின் வழியைச் சரிசெய் ... அந்த மோட்டாரின் ....

...ரு வீரர்களும் மொத்தம் ... மணி நேரம் 25 நிமிடம்

பும் தகவல்கள் அவர் அந்தரத்தில் நடந்தபோது வந்து சேராமல் தடைப்பட்டன.

விண்வெளிவீரரின் உடல் வெப்ப நிலை, இதயத் துடிப்பு, சுவாசம் உடையின் உள்ளே அழுத்தம், வெப்ப நிலைபோன்ற அனைத்துவிவரங்களையும் அந்த உடுப்பு பூமிக்கு அனுப்பியபடியே இருக்கும்.

பூமிக்குத் தகவல்வரவில்லை என்றாலும் அந்த

(XI ஆம் பக்கம் பார்க்க)

# உலக சாதனை படைத்த இறைச்சிப் பணியாரம்

நாலரைத் தொன் மாட்டிறைச்சி, 17 தொன் வெங்காயம், ஒன்றரைத்தொன் பருப்பு வகைகள். இவற்றைச் சமைக்க 17 சமையல்காரர்கள்.

இறுதியில் தயாரானது மூன்று யானைகளின் எடைக்குச் சமமான 10.25 தொன் இறைச்சி பணியாரம் (Meat Pie)

கடந்த மாதம் இங்கிலாந்தின் பிரிஸ்டால் நகரில் சமைக்கப்பட்ட உலகின் ஆகப் பெரிய இறைச்சிப் பணியாரம், கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறும் முன்னைய சாதனையை முறியடித்துவிட்டது. இதற்கு முன்பு அமெரிக்க குழுவினர் தயாரித்த 10 தொன் எடையுள்ள கோழி பணியாரம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது.

உலகில் ஆகப்பெரிய இறைச்சிப் பணியாரத்தை தயாரிக்கும் முயற்கியில் பல இடர்களை எதிர் நோக்கியதாக குழுவின் பேச்சாளர் டேவிஸ் கூறினார். பணியாரம் தயாரான பிறகு, அவற்றை பொதுமக்களிடம் துண்டு துண்டாக விற்று அறப் பணிக்கு நிதி திரட்ட முதலில் திட்டமிடப்பட்டது. ஆனால் பணியாரம் தயாரவதற்குள் இருட்டி விட்டது.

இதனால் பணியாரத்தை விற்க முடியவில்லை. அரும்பாடுபட்டு பணியாரத்தை தயாரித்த சமையல்காரர்களுக்கும் சாப்பிடும் ஆசை இல்லை. இதனால் உலக சாதனை படைத்த பணியாரம் குப்பையில் எறியப்படும் நிலை எழுந்தது. ★

# ஒரு லட்சம் கோழிகள் கடும் வெயிலால் சாவு!

தமிழ்நாடு நாமக்கல் பகுதியில் மட்டும் கடும் வெப்பம், வெயில் காரணமாக கடந்த பதினைந்து நாள்களில் ஒரு லட்சம் கோழிகள் உயிரிழந்திருப்பதாகத் தமிழக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாமக்கல் கோழி மண்டலத்தில் ஒரு கோடி 61 லட்சம் முட்டைக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. கடந்த 15 நாள்களாக வெயில் தீவிரமடைந்ததை அடுத்து ஒரு லட்சம் கோழிகள் சுருண்டு விழுந்து இறந்துள்ளன.

பெரும்பாலும் முட்டையிடும் கோழிகளே வெயிலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாதிப்படைவதால் நாமக்கல்லில் முட்டை உற்பத்தி பத்து வீதம் வீழ்ச்சியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ★

# பூனை கண்ணை மூடியதால் பூலோகமே இருண்டது!


"பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால் பூலோகமே இருண்டு விட்டது என நினைக்குமாம்" என்று பொதுவாகக் கூறுவர்.

ஆனால் நிஜத்தில் பூனை ஒன்று கண்ணைமூடிக்கொண்டதால்ஒரு தலைநகரமே இருளில் மூழ்கியது. இது இங்கல்ல; பங்களாதேஷில் நடந்தது.

கடந்த மாதம் டாக்காவில் உள்ள பிரதான மின் நிலையத்துக்குள் நுழைந்த பூனை ஒன்று அங்கும் இங்கும் சுற்றியது. இறுதியில் மின்சார நிலையத்தின் கட்டுப்பாட்டு அறைக்குள் புகுந்தது. அங்கே முக்கியமான ஒரு மின் விநியோகக்கம்பி மீதுமிதித்து விட்டது. அவ்வளவுதான் பூனையின் உடலில் மின்சாரம் பாய்ந்து அது அந்த இடத்திலேயே செத்தது. ஆனால் பூனை இறந்தவுடன் மட்டும் விடயம் முடிந்துவிடவில்லை. நகரின் பல பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டு இருளில் மூழ்கின.

மின்சாரம் பாய்ந்து எரிந்து சாம்பலாகிய பூனையின் உடலை அகற்றிவிட்டு, மின்சாரக் கம்பிகளைச் சுத்தம் செய்த பிறகுதான் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியது. ★

# குள்ள மாப்பிள்ளைக்கு குள்ளமான மணப்பெண்!




மூன்றே முக்கால் அடி உயரமுடைய குள்ள மாப்பிள்ளைக்கும் மூன்றரை அடி உயரமுடைய குள்ளப் பெண்ணுக்கும் திரு

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 50



சொற்சிலம்பம் இல. 50
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 22 — 05 — 1998

**இடமிருந்து வலம்**

1. அரைச் சதம்; இதற்கும் இந்தப் புதிர்ப் போட்டிக்கும் தொடர்புண்டு. 4. ஏதிலி. 7. இரத்தம்; 9. சா. 10. தேவையை நிறைவு செய்யும் வாய்ப்பு. 12. தேவைக்கு அதிகம். 14. நில். 15. நுண்மை அல்லது நுட்பம்; கத்திக்கும் இது தேவை 17. நவக்கிரக நாயகன். 18. ஒரு நதி 20. சம்மதத்தைக் குறிக்கும் சொல். 21. சகோதரனின் மனைவி. 23 பரிகாசம் அல்லது விகடம். 25. பிரி. 27. கேள்வி பதில். 28. இது கொன்றால் உய்வில்லை.

**மேலிருந்து கீழ்**

1. இந்திரனின் யானை. 2. முழுவதில் ஒரு கொஞ்சம். 3. இரும்பைப் பிடிப்பது. 5. நெல் விளையும் கழனி. 6. மூன்று. 8. அகங்காரம். 11. பிழை அல்ல. 13. அண்ணன். 15. இராமாயணத்தில் வில்வி. 16. வீடு. 17. நிகழ். 19. முற்றும் துறந்தவன். 21. தாய் தாங்கி வளர்ப்பது இங்கே. 22. திறப்பு. 24. நிலத்துக்குச் சமாந்தரமானது. 26. அடையாளம் செய்.

### சொற்சிலம்பம் 48 — முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. துர்லபம். 4. ஆதி. 6. வசி. 7. உண்ணி. 8. புதன். 10. சிறு. 11. ஒத்திகை. 13. அமைதி. 15. வரை. 16. கதிரவன். 17. தாமதி. 19. மைதா. 21. திறை 22. சிதைவு

**மேலிருந்து கீழ்**

1. துப்பு. 2. லவன். 3. பசி. 4. ஆண். 5. திணிவு. 7. உறுதி. 9. தண்மை. 10. சித்திரவதை. 12. கைவன்மை. 13. அந்தாதி. 14. திகதி. 18. மறை. 20. தாசி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சிட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** செல்வி யாழினி செல்வலிங்கம்,
இல. 5, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

★ **இரண்டாம் பரிசு:** கு. உமாகாந்த்,
அரசினர் போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

★ **மூன்றாம் பரிசு:** பா. பிரதீப்,
ஆண்டு 5,
ஏழாலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 49 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

பெருமை பிடித்த வாழ்க்கை. எடுப்புச் சாய்ப்புக்குக் குறைவு இருக்காது. ஊரும் உலகமும் பந்தம் பிடிக்க வாழும் வாழ்வு.

ஆனால் மனதுக்குள் அழுத்தும் சுமைகள். என்னதான் வசதிகள் இருந்தாலும் மனதிலே மங்கலம் பிறக்காது. காரணம் மனைமாட்சி இல்லாத மனைவிதான்.

எனவேதான் வாழ்வில் எது இருந்தாலும் எது இல்லாவிட்டாலும் மங்கலம் என்பது மனைமாட்சிதான் என்று விட்டார் வள்ளுவர்.

திருமணம் முடிந்தது—வாழ்க்கை மங்கலமாக — நல்ல மனைவியுடன்தான் — சிறப்பாக ஓடுகிறது — அடுத்தது என்ன வேண்டும்?

குழந்தை வேண்டும். வீட்டில் மழலை மொழி பேசச் செல்வங்கள் வேண்டும். சின்னஞ்சிறு கிளியே செல்வக் களஞ்சியமே என்றார் பாரதியார். அது வாய்க்காதபோது உழைத்த செல்வத்தை வைத்துக்கொண்டு திண்டாடவேண்டும். தட்டிப்போக சுற்றம் சூழ்ந்து நிற்கும்; உருகி நிற்கும்.

குழந்தை பெற்றால் மட்டும் போதுமா? அது ஆணாக வேண்டும்; பெண்ணாக வேண்டும் எனப்பல மனக்குறைகள். அது ஒன்றும் முக்கியம் இல்லை. வளர்ப்பிலேதான் பயனை அடையலாம் என்கிறார் முதற்பாவலர்.

குழந்தைப்பேறு நன்மக்கட் பேறாக வாய்க்காத போது அது ஆண் என்றாலென்ன — பெண் என்றால் என்ன? அதோடு ஆட்டம் போடும்போது அருமை புரியும்.

இதைவிடப் பிள்ளை இல்லாமல் இருந்திருக்கலாம் என நினைக்குமளவுக்கு பிள்ளை பாடுபடுத்தும். எனவே பெற்றதை நன் மக்களாக வளர்த்துவிட இல்வாழும் கணவனும் துணைவியும் துடித்திடல் வேண்டும்.

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு.*

— 0060

(வாழ்க்கைத் துணை நலம்)
—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [16 - 05 - 1998 முதல் 22 - 05 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வெ சனி | புத | *சூ செ | |
| வி கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| சந் | | | |

மாற்றம்:

16 – 05 –1998 இல் தனுசு இராசியில் சந்திரன் — பூராடம் நட்சத்திரம் மாறும்.

22 – 05 – 1998 இல் இடப இராசிக்கு புதன் மாறும்.

இலங்கையின் அரசியல் பிரச்சினையின் முக்கிய கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் தொடரும் ஐ.நா. இந்தியா மிகுந்த கரிசனை கொண்டபடி இருக்கும். திசைதிருப்பங்கள் ஏற்படலாம். யுத்த மோகத்தால் பேச்சு வார்த்தைகளுக்கு மத்தியில் பல இழப்புக்கள் ஏற்படலாம். இந்தியா சில கருத்துக்களைத் தெரிவித்து, எதிர்ப்புணர்வை ஏற்படுத்தலாம். ஆயினும் அடிக்கடி நாட்டில் அரசியல்வாதிகளாலும் — தொழிலாளர்களாலும் மாணவர்களாலும்பதற்ற நிலைகள் ஏற்படலாம். இந்தியாவில் தொடர்ந்து ஆட்சி பீடத்தில் கருத்து வேற்றுமைகள் இருக்கும். அமெரிக்கா கிழக்கு நாடுகளில் செல்வாக்குச் செலுத்தும். கிழக்கு நாடுகளில் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி இருக்கும். மக்கள் தெய்வ வழிபாடு செய்து வரவும்.

**மேடம்:** காணி பூமி சம்பந்தமான பேச்சுக்கள், மாற்றங்கள் நடைபெறும். ''சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'' ஏதாவது இலாபம் இருந்தால்தானே ஆடும். இலாபமற்ற எக்காரியத்தையும் தவிர்த்துக் கொள்ளவும். அடிக்கடி குறை கேட்பீர்கள். செய்யாத குற்றத்திற்கு குற்றவாளி ஆக்கப்படலாம். நண்பர்களின் உதவிகளும் உபத்திரவங்களும் மாறிமாறி ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்படும். கண்ணில் வலி, வாய்வுத் தொல்லை, மனப் போராட்டம், சளியால் தொல்லை, சல எரிவு என்பன கொடுக்க வாய்ப்புகளைக் கொடுக்கவிருப்பினும் தெய்வ வழிபாட்டால் ஓரளவு குறைத்துக் கொள்ளலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**இடபம்:** சடுபுடு என்றபடி இருக்கிறீர்கள். கொஞ்சம் கோபத்தைக் குறைத்து காரியகாரராக இருங்கள். வீட்டில் ஒருகால் நாட்டில் மறுகால் என்றபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஒரே பிஸியாக ஓடியாடித் திரிவீர்கள். கலைத்துறையில் ஆர்வம் அதிகரிக்கும். இருதய நோய்கள், சலவருத்தங்கள் வருத்தலாம். உடல் வருத்தங்களை அலட்சியப்படுத்தாதீர்கள். அல்லது ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி அலைய நேரிடும். எதிர்ப்பாலாருடன் அலட்சியமாக இருக்க வேண்டாம். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். உறவினர்கள். உதவி செய்வார்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

எதிர்ப்பாலாரின் மனப் போக்குகளுக்கு மதிப்புக் கொடுத்து வாருங்கள். முழங்கால் வருத்தம், கர்ப்ப உபாதைகள், உஷ்ணபீடைகள் என்பன இருக்கும். தகுந்த வைத்தியரை நாடுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**சிங்கம்:** எனக்காக எவரும் கவலைப்படக்கூடாது; எத்தகைய துன்பங்களையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியும் எனத் தைரியமாகச் சொல்லுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் — மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். பொருளில் அவதானமாக இருக்கவும். அட்டமத்துச் சனி அலைக்கழித்தபடி இருந்தாலும் நன்மைகளையும் செய்யும். திடீர் உதவிகள் கிடைக்கும். ஆலயத் திருப்பணிகளில் சேவை செய்தபடி இருப்பீர்கள். முதுகு,

# சோதிட சஞ்சீவி

**மிதுனம்:** உங்களை எவரும் கட்டுப்படுத்த முடியாது. அங்கும் இங்குமாக ஓடியாடித் திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகுவீர்கள். பொதுக் காரியங்களில் அதிக நாட்டமாக இக்காலங்களில் இருப்பீர்கள். எதிர்ப்பாலாரின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து வரவும். எந்த விஷயத்தையும் பேசித்தீர்க்க முயலுங்கள். உங்களையே நீங்கள் பிடிகொடுக்காமல் தான் இருப்பீர்கள். ஆயினும் உங்கள் வாயாலேயே அக்குறை குற்றங்களைச் சொல்லி விடுவீர்கள். முதுகு, பாதத்தில் வலி ஏற்படும். நெஞ்சு நோ, மனவருத்தங்கள், பய உணர்வுகளால் அடிக்கடி உங்களை அறியாது பாதிக்கப்படுவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**கடகம்:** நீங்கள் பகுத்தறிவாளர்கள். சோதிடத்தை நம்புகிறீர்களா என்பது பற்றி எனக்குத் தெரியாதா? இரகசியமாகச் சோதிடம் பார்ப்பதில் கெட்டிக்காரர். தொழில் ஸ்தானத்தில் மெல்ல, மெல்ல மாற்றங்கள் திசைமாறிச் சென்றபடி இருக்கும். கலைத்தொடர்புகள் அதிகரிக்கும். மற்றவர்களின் உணர்வுகளை அறிந்து அதற்கேற்ப நடக்க முயலுவீர்கள். பொருளில் கவனமாக இருக்கவும். மூத்த சகோதரங்களால் நன்மைகள் கிடைக்கும். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

தோள் வலி, நோ வரலாம். இருதயப் பலவீனம், உஷ்ண பீடைகள் சிலரை வருத்தலாம். தகுந்த வைத்தியத்தால் சுகம் வரும்.

★ அதிர்ஷ்டநாள்வெள்ளி, சனி.

**கன்னி:** காரியம் ஆக வேண்டுமாயின் புத்திசாதுரியமாகச் செயற்பட வேண்டும். சுறுசுறுப்பாக இருத்தல் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள்

## மகாதேவா ஜோதிடம்

இருக்கும். எதிர்ப்பாலாரின் மனக் கொதிப்புக்கள் தடுமாற்றங்களைக் கொடுக்கும். அலைச்சல் சர்வசாதாரணமாகக் கொடுக்கும். இடமாற்றங்களைச் செய்து அவதிப்படவேண்டாம். தாய்க்கு அல்லது தாய்வழியினருக்கு நன்மையான பலன்களைக் கொடுக்கும். அவர்களுக்கு மட்டும் இடமாற்றங்களால் நன்மையான பலன்கள் கொடுக்கலாம். சளியை நீக்க முயலுங்கள். விறைப்பு கைகாலில் சிலருக்கு ஏற்படலாம். சாப்பாட்டில் நிதானம் தேவையாகும். கிருமித் தாக்கம் சிலரை வருத்தலாம். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

அதிர்ஷ்டநாள்; வெள்ளி.

**துலாம்:** அடிக்கடி தமாஷாகப் பேசுகிறீர்கள். அது சரி ஆயுதங்களுடன் நிதானமாக இருக்கவும். கொஞ்சம் விலகி நடப்பதால் நம்மைச்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடியுங்கள்

| | சீலன் | ராஜீ | சேகர் | குமரன் | வினோ | சபேஸ் | திவா | சுரேஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| எடுத்த ஓட்டங்கள் | | | | 40 | | | | |
| வீழ்த்திய விக்கட்டுகள் | | | | | | | | |

கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் பங்குபற்றிய அணி ஒன்றில் இடம் பெற்றிருந்த பதினொரு வீரர்களில் எண்மரின் பெற்ற பெறுபேறுகள் பற்றிய தரவுகள் கீழே உள்ளன. குமரன் பெற்ற ஓட்டங்கள் 40. கீழ் உள்ள தரவுகளை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வீரரும் அடித்த ஓட்டங்கள், வீழ்த்திய விக்கெட்டுகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்து மேலே உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.

1) ராஜீ அடித்த ஓட்டங்கள, திவா அடித்ததிலும் ஆறு மடங்கு.
2) திவா அடித்த ஓட்டங்களிலும் பார்க்க ஒன்று குறைவாகவே குமரன் விக்கெட் எடுத்தான்.
3) சீலன் அடித்த ஓட்டங்கள் சுரேஷ் அடித்த ஓட்டங்களிலும் 5 குறைய.
4) வினோ, சுரேஷ் அடித்ததிலும் பார்க்க எட்டு ஓட்டங்கள் குறைவாக எடுத்தான்.
5) குமரன், ராஜீ அடித்த ஓட்டங்களின் இரு மடங்கிலும் பார்க்க 4 ஓட்டங்கள் கூடப்பெற்றான்.
6) வினோ விக்கெட் எடுக்காமலில்லை. ஆனால் குமரனிலும் குறைவு,
7) எண்மரும் சேர்ந்து பெற்ற ஓட்டங்கள், குமரன் பெற்ற ஓட்டங்களின் மூன்று மடங்கிலும் ஒன்று கூட.
8) சீலன், திவா, ராஜி ஆகியோர் வினோ எடுத்த அளவு விக்கெட் கூட எடுக்கவில்லை.
9) எட்டுப் பேரும் சேர்ந்து மொத்தம் எட்டு விக்கெட் எடுத்தனர்.
10) வைகுந்தனும் சுரேஷும், குமரன் எடுத்த அளவு விக்கெட்டுகளையே எடுத்தனர்.
11) திவா அடித்த ஓட்டங்களின் நான்கு மடங்கிலும் பார்க்க ஓர் ஓட்டம் சுரேஷ் கூடுதலாக எடுத்தான்.
12) சபேஸ் அடித்த ஓட்டங்கள், சுரேஷ் அடித்த ஓட்டங்களின் இரு மடங்கிலும் நான்கு குறைவாகும்.

— வானம்பாடி யோ. தினேஸ்குமார் —

(விடை XI ஆம் பக்கத்தில்)

# மந்தமாக இயங்கும் ஆமை



மெள்ள நடப்பவனை ஆமைபோல நடக்கிறான் என்பர். ஆமை மிகவும் மந்தமானது இதற்குத் தற்காப்புக்காக வன்மை மிக்க ஓடு ஒன்று அமைந்துள்ளது.

பகைவரைக் கண்டால் ஆமை தன் நான்கு கால்களையும், நீண்ட தலையையும் தற்காப்பு ஓட்டுக்குள் அடக்கி ஒடுங்கி இருக்கும். எனவே, ஆமையைச் சிலர் 'ஐந்துறுப்பு அடக்கி' என்றும் சொல்வதுண்டு.

ஆமையின் ஓடு வழுவழுப்பானது. மலை ஆமையின் ஓடு மட்டும் கரடுமுரடாக இருக்கும்.

ஆமைகள் நீரிலும், நிலத்திலும் வாழும். இவற்றில் மூவகை உண்டு. கடலாமை, நன்னீராமை, நில ஆமை என்பர்.

**பிராணிகள் உலகம்**


கடலாமை மிகவும் பெரியது; வட்டமான ஓடுகளை உடையது. இவை நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழும் இயல்புடையவை.

நன்னீராமை குளம் குட்டைகளில் இருக்கும். பகையைக் கண்டால் சேற்றில் மறைந்து கொள்ளும். இவை உருவத்தில் சிறியவை. ஆனால் நீரில் தாவி ஓடும் ஆற்றலுடையவை. இவை நீர்க்கரையில் குழிதோண்டி முட்டைகள் இடும். இவற்றின் கால்விரல்களில் தோல் இணைந்திருக்கின்றது. எனவே, இவற்றிற்குக் கால்கள் துடுப்புப் போலப் பயன்படுகின்றன.

நில ஆமை நிலத்தில் வசிக்கும். இதன் ஓடு வழவழப்பாக இருக்கும். இவற்றின் கால்விரல்கள் தனித்தனியாக உள்ளன. கற்களுக்கு இடையில் இருக்கும்போது இதற்கும், கற்களுக்கும் வேறுபாடு தெரியாது.

ஆமைக்குப் பகை கழுகு. மக்களுள் சிலரும் ஆமை இறைச்சியைத் தின்பர். ஆமையைத் தலைகீழாக மாற்றிப் போட்டுவிட்டால், திரும்பிக் கொள்ளமுடியாமல் அப்படியே கிடக்கும்.

## தெரிவது என்ன?



மேலேயுள்ள படத்தில் உங்களுக்குத் தெரிவது என்ன? வெறும் பூச்சாடி மாத்திரமா? ஒன்றையொன்று நோக்கும் இரு முகங்கள் தெரியவில்லையா?

## நொடிப் பொழுது

(1) அடியில் உள்ளவன் அடங்கிக் கிடப்பான்; மேலே உள்ளவன் நறுக்கென்று கடிப்பான்; கமுகின் மகனை கண்டதுண்டமாக்குவான். அவன் யார்?

(2) உச்சி மரத்தில் ஒரு கூடு கட்டி, ஒய்யார ராணியை உள்ளேயேவைத்து சிங்காரச் சிப்பாய்கள் தொண்டு செய்கிறார்கள்; தெரிந்தால் சொல்லுங்கள் அவ்வீட்டின் பெயரை?

(3) இரவிலே பிறந்த பையன்; தொப்பியுடன் பிறந்த பையன். அவன் யார்?

(4) அந்தரமான குகைக்குள்ளே அங்கே ஒருத்தி இருக்கின்றாள். முப்பத்திரண்டு காவலர்கள் முன்னே நின்று காக்கிறார்கள் அவள் யார்?

(5) குண்டன் வாயில் குள்ளன் புகுந்தால் குபேர பட்டணத்திற்கு வழி தெரியும். அது என்ன?

(6) அத்திவாரம் இல்லாத கட்டடம்; ஆழ்கடலில் நீந்துகின்ற கட்டடம்; ஆட்களையும் பொருள்களையும் சுமந்து அதிக தூரம் செல்லும் கட்டடம். அது என்ன?

(7) கொம்புக் காளை இறங்கி வருகுது. பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம். அது என்ன?

(8) அந்தரத்தில் தொங்குது அதிசய மாளிகை. மந்திரத்தில் கட்டியவன் மத்தியில் தொங்குகிறான். அவன் யார்?

(9) உடல் சிவப்பு; வாய் சிவப்பு. உணவோ காகிதம். அது என்ன?

(10) அம்மா கொடுத்த தட்டிலே நீர்விட்டால் நிற்காது. அது என்ன?

### விடைகள்

(1) பாக்குவெட்டி.
(2) தேன்கூடு.
(3) காளான்.
(4) நாக்கு.
(5) பூட்டு, திறப்பு.
(6) கப்பல்.
(7) நத்தை.
(8) சிலந்தி.
(9) தபாற்பெட்டி.
(10) தாமரை இலை.


— சி. ஜீவிதன் —
(ஆண்டு7, ஹாட்லிக்கல்லூரி)

## வழி கூறுங்கள்!



இந்தப் பாம்பு தலை[illegible] போவதற்கு வழி கூறுங்கள் பார்ப்போம்.

## வித்தியாசம் தெரிகின்றதா?



மேலேயுள்ள படங்களில் குறைந்தது பதினைந்து வேறுபாடுகள் உள்ளன. உங்களுக்கு வித்தியாசங்கள் தெரிகின்றனவா?

# இயலுமா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ழா | ன் | தி | பா | தா | அ |
| த் | அ | பே | ணி | சி | க |
| ட் | த் | ட் | ப் | ம | பா |
| னி | ம | அ | ண் | ர | டி |
| ம் | த் | மா | ன் | பா | தை |
| டா | ன் | அ | ன் | அ | மா |

மேலேயுள்ள அட்டவணையில் 36 எழுத்துக்கள் உள்ளன. அவற்றினிடையே பன்னிரண்டு உறவு முறைகள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம். ஒரெழுத்தை ஒரு முறைதான் பயன்படுத்த முடியும் என்பதைக் கவனிக்குக.

(விடை XI ஆம் பக்கத்தில்)




## பாலகனை வாழவைக்க பாரில் குரு தேவை

பத்து மாதம் சுமந்து பெற்ற அன்னையர்களே!
சொத்து மகன் வித்தகனாய் மிளிரவைப்பீரே
சுத்தியோடு சொத்து சேர்த்த தந்தையர்களே —
உங்கள்!
வித்தை மகன் புத்தி பெற ஒத்துழைப்பீரே.

உத்தமனாய் உத்திகூறும் உறவினர்களே! உங்கள்
புத்திரராம் சித்தி பெற உதவிடுவீரே
கற்ற பெரும் வித்தகராம் எம்சமூகமே — உந்தன்
உற்றவராம் இளஞ்சிறாரை ஊக்குவிப்பீரே.

யார்சிறியார் யார்பெரியார் யாதுபொருள் என்று
ஆசிரியர் நம்சிறுவர் மீது அருள் கொண்டு
நலஒழுக்கம் பலவிளக்கம் கூறி அவன் நெஞ்சில்
குலவிளக்க குணங்களையே கொடுக்கும் குணவிளக்கு.

கஷ்டப்பட்ட மாணவனின் காதைத் திருகாதே மிக
இஷ்டப்பட்ட மாணவனை ஏற்றிப் புகழாதே
துட்டிலாத தூயவனைத் தூக்கியெறியாதே — என
மட்டிலாத ஆசிரியர் வெட்டி முழங்கிடுவார்.

அன்புடனே சிறுவர்களை ஆதரவாய் எண்ணி
தெம்புடனே சில கதைகள் செப்பிடுவார் பாரீர்
பண்புடனும் மாண்புடனும் பாலருக்கு கல்வி தந்த
விண்புகழும் எம்குருவாம் நன்றுயர வாழியவே.

— செல்வி பரீதா தம்பையா —

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

காப்பாற்றிக் கொள்ளலாம் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் மறைமுக எதிரிகளால் மனக்கஷ்டங்கள் ஏற்படும். கைகாலில் தாக்கம், வீக்கம் வரும் பலன்கள் சிலருக்கு நடக்கும். எதிர்ப்பாலாருக்கு உடல் நிலையில் சரியில்லை. எனவே கொஞ்சம் நிதானமாக இருந்து அவர்களின் குறைகளைத் திருங்கள் சகோதரங்களால் அலைச்சல்கள் கொடுக்கலாம். போய் வரும் இடங்களில் பொருள்களில் நிதானமாக இருக்கவும். அல்லது தவறிப் போகலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

விருச்சிகம்: என்ன அடிக்கடி இறங்கி ஏறுவது? மனிதர் படும் கஷ்டத்திற்குள் இதுவும் ஒரு வேதனை என எண்ணி, எண்ணி மனம் புழுங்கி புறுபுறுத்தபடி எதையாவது திட்டித்தீர்த்தபடி இருப்பீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் முட்டி மோதுவீர்கள். இக்காலத்தில் எதிர்பாராத மோதல்கள் வரலாம் மிகவும் அவதானமாக இருக்கவும் இரத்த அழுத்தம், உஷ்ண பீடைகள், சளி கிருமித்தாக்கம், கால் உளைவு என்பன மாறி மாறிக் கொடுக்கும். காலச்சக்கர மாற்றத்ததில் நன்மை, தீமைகள் மாறி மாறி நடக்கும். பொறுமையாக அயலவர்களில் ஒரு கண்ணாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

தனுசு: ''சாம்பல் மேட்டில்தான் சரித்திரம் பிறக்கும்'' என்று ஓர் அறிஞன் சொன்னான். ஆனால் உங்கள் கற்பனைக் கோட்டையில் பல அதிசயமான திட்டங்கள், சரித்திரங்களைப் படைக்க இடம் உண்டு. கற்பனைக்கடல், எண்ணற்ற சிந்தனைகள் தொழில் ஸ்தானத்தில் உருவாகும். புதிய திட்டங்களால் பல நன்மைகள் கிடைக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள்வர இடம் உண்டு. கண்டபடி கதைத்துவிட்டுக் கலங்குவதை விட்டு கொஞ்சம் அமைதியாக இருக்கப் பாருங்கள். கைகாலில் காயம், குடல்வருத்தங்கள் சளி, நெஞ்சு நோ, கிருமித் தாக்கங்களால் வருந்த இடமுண்டு. தகுந்த வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

மகரம்; ஒரு மந்த நிலை எனக் கலங்க வேண்டாம். அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். உங்கள் விடாமுயற்சியால் பலநன்மைகள் ஏற்படும். தோல்வி கண்டாலும், வெற்றிப்பாதையில் வீரநடை போடும் இயல்புள்ளவர்கள் நீங்கள். தொழில் ஸ்தானத்தில் நல்லவரவேற்பு இருக்கும். நண்பர்கள் உதவுவார்கள். ஆனால் அயலவர்களை நம்ப வேண்டாம். அடிக்கடி குடும்ப விஷயங்களைப் பற்றிய யோசனை உடல்நிலையைத் தாக்கும். வயிற்றில் கொஞ்சம் வருத்தம், நரம்பில் சோர்வு, மனதில் குழப்பம் கொடுக்கும்! நிதானமான சாப்பாட்டால் ஓரளவு நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

கும்பம்: ஏழரைச் சனி அடுத்தமாதம் விலகிவிடும். கொஞ்ச நாள்களுக்கு தொல்லைகள் ஓரளவு குறையும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் தோன்றி மறையும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் கொடுக்கும். அயலவர்களுடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். கைகால்வலி, நரம்புச் சோர்வு, இருதயப் பலவீனம், வயிற்று வருத்தங்கள் என்பன அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும். சுதந்திர மனப்போக்குகளால் அடிக்கடி தனிமைப்படும் தன்மைகள் ஏற்பட இடம் உண்டு. குடும்பச் செலவுகளால் அதிக கடன்படும் நிலை சிலருக்குத் தோற்றலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

மீனம்: சோதனை யாருக்குத்தான் இல்லை? ஏழரைச்சனீஸ்வரன் சிலருக்கு பணத்தைக் கொடுப்பான்; பலருக்கு துன்பத்தை, சோதனையைத் தருவான். தொழில் ஸ்தானத்தில் பாரத்தை ஏற்றாமல் விலகி இருப்பது நல்லது. எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்படும். உறவினர், சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். உங்கள் ஊக்கம், முயற்சிகளைப் பொறுத்து வரவுகள் இருக்கும். இடமாற்றங்களைப் கண்டபடி செய்யாதீர்கள். பொருளால் வேதனை இழப்புக்கள் ஏற்படும்! கைகால் தாக்கம், மனப்பயம், நரம்புப்பலவீனம் சளி வருத்தங்கள் என்பன இருக்கும். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

# போலி...

(V ஆம் பக்கத் தொடர்)

புத்தகங்களை வாங்கிக் கொண்டு போ. நான் இல்லாட்டியும் ரமணி தருவாள்''

''அப்ப ஐயா நாங்கள் வரப்போறம். ஆண்டு விழாவுக்குக் கட்டாயம் வரவேணும்.'' சிவபாதம் வணங்கியபடி எழுந்து நின்றார்.

''நான் வராமல் விடமாட்டேன். நீ தாராளமாகப் போட்டுவா. நான் கொஞ்ச நேரம் தியானம் செய்ய வேணும்'' என்றவாறு சாமியார் கண்களை மூடிக் கொண்டார். சிவபாதம் கதிரமலையுடன் வெளியேறினார். கேற்றடிக்கு வந்து மோட்டார்சைக்கிளைஉயிர்ப்பித்துக் கொண்டார்.

''பாத்தியே கதிரமலை. சாமியாரைப்பற்றி என்னவோ கதைச்சாய். இப்ப பார், அந்தாள் எவ்வளவு உதவி செய்யுதெண்டு. உனக்குக் கதைக்கப் பேசத் தெரியாது'' சிவபாதம் போகும்போது சொன்னார்.

''அண்ணை! நான் என்னத்தைச் சொல்லுறது? என்னைப் பனித்தண்ணி எண்டியள். எனக்கு உந்தாளின்ரை பாம்புப்பார்வை பிடிக்கேல்லை அண்ணை. எங்கட முருகன் கோவில் சாமியாரின்ரை செந்தளிப்பான முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம், உந்தாளை மாதிரிக் கள்ளச்சாமிமாரால்லை எங்கட சமயத்துக்கு மதிப்பே இல்லை. அந்த ரமணியோ என்னவோ அதைப் பாத்தாச் சீடப் பெண்மாதிரியே கிடக்கு? சே!''

''உனக்கு உலக அனுபவம் போதாது கதிரமலை'' சிவபாதம் வேகத்தைக் கூட்டிக் கொண்டே சொன்னார்.

''எனக்கோ உலக அனுபவம் போதாது? நான் பழமும் திண்டு கொட்டையும் போட்டனான் அண்ணை. சரி இப்ப என்னத்துக்குத் தேவையில்லாத கதையை? ஒரு காலத்திலை உணருவியள்'' அத்துடன் அவர்களின் பேச்சு திசைமாறியது.

ஆண்டுவிழா முடிந்து ஒரு கிழமையாகிவிட்டது. சிவபாதம் வீட்டிலே ஓய்வாகப் படுத்திருந்தார். ஆண்டுவிழா அலுவல்களில் ஓடித்திருந்து நன்றாகக் களைத்துப்போயிருந்தார்.

இருந்தாற்போல கேற்றடியிலே மோட்டார்சைக்கிள் 'ஹோர்ண்' ஒலித்தது.

''கமலா! ஆரோ வந்திருக்கினம் போலக் கிடக்கு. ஆரெண்டு பாரும்.'' எழுந்து போய்ப் பார்க்க அலுப்பில் படுத்திருந்தபடி குரல்கொடுத்தார். அவரது மனைவி கேற்றடிக்குப் போய்ப்பார்த்துவிட்டுத் திரும்பிவந்தாள்.

''ஆரது'' சிவபாதம் கேட்டார்.

''ஆரெண்டு தெரியேல்லை: சாமியாரின்ர உடுப்பு நடப்பாக் கிடக்கு. அந்தாளின்ர பார்வையும் சரியில்லை''

''சாமியாரோ?'' சிவபாதம் துள்ளியெழுந்தார்.

''இஞ்சேரும். டக்கெண்டு ஒழுங்குபடுத்தும். அவர் பெரிய மகான். நான் கூட்டிக்கொண்டு வாறன்''

கூறிவிட்டு கேற்றடிக்கு ஓடினார். கேற்றடியில் சாமியாரும், உதவியாளரும் நிற்பது தெரிந்தது.

''வணக்கம் ஐயா. உள்ளுக்க வாங்கோ. இருந்தாப்போல வந்திட்டியள்.'' சிவபாதம் பூரிப்புடன் உள்ளே அழைத்தார்.

''நான் உன்னோட கதைச்சுப் பொழுதுபோக்க வரேல்லை''

''ஐயா...!''

''என்ன காணும்? நான் அண்டைக்கு உந்த வெய்யிலுக்குள்ளாலை கஷ்டப்பட்டு உன்ரை சங்க ஆண்டுவிழாவுக்கு வந்தன். விழா நோட்டீசிலை என்ரை பேரை ஒரு மூலேக்கை கொண்டுபோய்ச் சின்னதாப் போட்டாய்.''

''அது ஐயா அச்சகக்காரர் தான் இடமில்லையெண்டு...''

''சரி அதைவிடு. இஞ்சை பார். இண்டைப் பேப்பரிலை என்ன வந்திருக்கெண்டு பாத்தனியே? அவன் வந்தான். இவன் பேசினான் எண்டெல்லாம் குடுத்திருக்குது. நான் வந்து பேசினன் எண்டு ஒரு சொல்லு எழுதினியே? ஆ!''

சாமியார் துள்ளிக் குதித்தார்.

''நான் பேப்பருக்குக் குடுக்கேல்லை ஐயா. ரிப்போட்டர் தான் வந்து குறிப்பெடுத்தவர். அவர் குடுத்திருக்கலாம்.''

''கண்டறியாத மசிர்! நீர் தலைவர் எண்டு இருக்கிறனீர். உதுகளைக் கவனிக்க வேணும். உமக்கு ஆளுமை இல்லைக் காணும்.''

''கோவியாதையுங்கோ ஐயா. எழுதிக்குடுக்கிற எல்லாத்தையும் போடச் சொல்லலாமே? தகுந்ததைத் தானே அவை போடுவினம்! எங்களுக்கும் அந்தச் செய்திக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை ஐயா''

மிகுந்த பணிவுடன் கூறினார் தலைவர் சிவபாதம்.

''இஞ்சை பாரும். எனக்கு உம்மோடை நிண்டு அத்தாப் பிச்சுக் கொண்டிருக்க நேரமில்லை. எனக்கு எவ்வளவோ பணிகள் கிடக்கு. நான் தந்த நூறுபுத்தகங்களுக்கும் ஐம்பது ரூபாப்படி கணக்குப் போட்டு, காசைக் கெதிலை ஆச்சிரமத்துக்கு அனுப்பி விடும்.''

சாமியார் கூறிவிட்டுத் திரும்பி நடந்தார்.

சிவபாதம் வாயடைத்துப் போய் நின்றார். அவரது மனம் கதிரமலை சொன்னவற்றை மீட்டுக் கொண்டிருந்தது.

'எங்களுடைய சமயத்தின் பெயரைக் கெடுக்கவென, சில பேர் சாமி வேடம் போட்டு உண்மையான சமயநெறியாளர்களுக்கும் மாசு உண்டாக்கி வருகினம். நெல்லுக்குள்ளே வந்து சேரும் பதர் போன்றவர்களை இனங்கண்டு அவர்களை அதற்கேற்றால் போல நடத்த வேண்டும். மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது சாமியார் விஷயத்திலும் பொருந்தும் என்பதனை என்னைப் போன்றோர் மறந்து போவதும் போலிகள் உருவாக காரணம் தான்'—என்று மனதால் பெருமூச்சு விட்டார் சிவபாதம். ★

(யாவும் கற்பனை)

# சீடனின் பேராசை

ஒரு குருவிடம் சீடன் ஒருவன் சென்று, ''யாருக்கும் கிடைக்காத அமிர்தம் எனக்குக் கொடுக்க வேண்டும்'' என்று கேட்டான்.

சீடனின் பேராசையைக் கண்ட குரு 'இவனிடம் அமிர்தம் கொடுத்தாலும் இவனால் அதை அனுபவிக்க முடியாது' என்பதைப் புரிந்து கொண்டார்.

அவர் அந்தச் சீடனிடம் ஒரு குடத்தில் அமிர்தம் கொடுத்து, ''இதை எங்கும் தரையில் வைக்காமல் தூக்கிச் சென்று வீட்டில் அருந்து'' என்று கூறினார்.

அவர் சொன்னபடியே சீடன் குடத்தை எடுத்து வரும்போது, வழியில் இருந்த ஒரு குளத்தில் தண்ணீர் குடிக்க விரும்பினான். 'குடத்தைக் கீழ வைக்கக்கூடாது' என்று குரு கூறியது நினைவுக்கு வந்தது.

'என்ன செய்வது?' என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் தறுவாயில் அந்த வழியாக யாரோ ஒருவன் வந்தான்.

''அமிர்த குடம்'' என்று சொல்லி அவன் கையில் கொடுத்தால் அவன் அதைக் குடித்து விடுவானோ என்று பயந்த சீடன், ''இந்தக் குடத்தில் விஷம் இருக்கிறது. இதைக் கொஞ்ச நேரம் நீ கையில் வைத்திரு. நான் நீர் அருந்திய பிறகு வந்து உன்னிடமிருந்து வாங்கிக் கொள்கிறேன்'' என்று சாமர்த்தியமாகச் சொல்லி, அந்த மனிதனிடம் அமிர்தக் குடத்தைக் கொடுத்துவிட்டுக் குளத்தில் இறங்கினான்.

அவன் திரும்பி வந்து பார்த்தபோது குடம் காலியாக இருந்தது!

குடத்தை வாங்கிய மனிதன் தீராத வயிற்று வலியால் துன்பப்பட்டுத் தற்கொலை செய்து கொள்ள விரும்பி அதற்கு வழியைத் தேடிக் கொண்டிருந்தவன். ஆகவே 'விஷம்' நிரம்பிய குடத்தைக் கண்டதும், 'என் ஆயுளுக்கு முடிவு கட்ட இது சரியான வாய்ப்பு!' என்று நினைத்துக் குடத்தில் இருந்ததைக் குடித்துவிட்டான்.

ஆனால் அமிர்தம் அவன் வயிற்றில் சென்றதால் அவன் வயிற்றுவலி தீர்ந்தது!

சீடனோ கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் ஏமாந்தான். ★

# குடும்பப் பொறுப்பு கை மாறுகிறது!

ஆண்கள் வேலைக்குச் சென்று பணம் ஈட்டுவது; பெண்கள் வீட்டுப் பொறுப்பைக் கவனிப்பது என்ற வழக்கம் மெல்ல மெல்ல மாறி வருகிறது!

இன்று ஆண்களே குடும்பப் பொறுப்புகளிலும் பிள்ளைகளிடமும் அதிக நேரம் செலவழிக்கின்றனர். பெண்களோ வேலையிடத்திலேயே அதிக நேரம் செலவழிக்கின்றனர் என்று நியூயோர்க் குடும்ப வேலை கழகம் அண்மையில் நடத்திய ஆய்வுமூலம் தெரிய வந்துள்ளது.

பிள்ளைகளுடன் தந்தைகள் செலவழிக்கும் நேரம் ஒரு நாளைக்கு சராசரி 30 நிமிடம் முதல் 2.3 மணி நேரம் வரை அதிகரித்துள்ளது! பிள்ளைகளுடன் தாயார் செலவழிக்கும் நேரத்தில் (3·2மணிநேரம்) கடந்த 20 ஆண்டுகளாக எந்த மாற்றமும் இல்லை என்று அந்த ஆய்வு கூறியது.

ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக வேலையிடத்தில் பெண்கள் செலவழிக்கும் நேரம் ஆண்களுக்கு ஈடாக 17மடங்கு அதிகரித்துள்ளது. ★

# காண்டாமிருகத்துக்கு மணமகள் தேவை

மும்பையில் உள்ள ஜீஜா மாதா உதயன் உயிரியல் பூங்காவில் இருக்கும் ஷிவா தன் ஜோடிக்காகக் கடந்த பத்தாண்டுகளாகக் காத்திருக்கிறார். ஷிவா...ஓர் ஆண் காண்டா மிருகம். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள உயிரியல் பூங்காக்களில் மொத்தம் 35 காண்டாமிருகங்களே உள்ளன. இவற்றில் 10 மட்டுமே பெண் காண்டாமிருகங்கள். எனவே ஒரு பெண் காண்டாமிருகத்தை டில்லிக்கு அனுப்ப மற்ற உயிரியல் பூங்கா பொறுப்பாளர்கள் மறுத்துவிட்டனர். பாவம்...ஷிவா...இன்னமும் ஒரு பிரம்மச்சாரியாகவே காலத்தைக் கழித்து வருகிறது. காலாகாலத்தில் கல்யாணம் ஆகவில்லை என்பதால் ஷிவாவுக்கு எதற்கெடுத்தாலும் 'முணுக்' கென்று கோபம் வந்துவிடுகிறதாம்

இதேவேளை—உலகின் ஏனைய நாடுகளைவிட ஆசியாவில் காண்டா மிருகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளிலேயே காண்டா மிருகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காண்டா மிருகங்களை வேட்டையாடுவதைத் தடுக்க எடுக்கப்பட்ட திட்டங்கள் வெற்றியளித்துள்ளதே அவற்றின் அதிகரிப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ★

# குடா நாட்டில்...

(III ஆம் பக்கத் தொடர்)

பொறுத்தவரை இது ஒரு முக்கிய காலகட்டம் என்கிறார் ஓர் ஆய்வாளர். அவரது கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

மனைவியையும், பிள்ளைகளையும் சந்திக்கும் ஆவலுடன் திரும்பி வரும் ஒருவர் தனது அன்புடன் சேர்த்து எச். ஐ. வி.யையும் அவர்களுக்குப் பரிசளித்து விட்டுச் செல்ல நேரிடலாம். சிந்திக்கவேண்டிய வேதனையான உண்மை இது.

இதை எவ்வாறு தடுப்பது?

வெளிநாடுகளில் இருந்து திரும்புவோர் தாமாகவே முன்வந்து எச். ஐ. வி சோதனைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்வதன் மூலம் தம்மையும், குடும்பத்தையும், சமூகத்தையும் ஆபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எச். ஐ. வி. பரம்பலைத் தடுக்க வெளிநாடுகளில் இருந்து வரும் சகலரும் கண்டிப்பாக 'எய்ட்ஸ்' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்ற கருத்து யாழ். மருத்துவ வட்டாரங்களிலும் தீவிரமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் எச். ஐ. வி. பரிசோதனை செய்ய வசதியாக யாழ்ப்பாணத்தில் நிலையம் ஒன்றைத் திறக்கும் திட்டம் குறித்து இது விடயத்தில் அக்கறை உள்ள வைத்திய நிபுணர்கள் சிலர் கூடி ஆலோசித்து வருகின்றனர். அத்தகைய நிலையம் ஒன்று விரைவிலேயே அமைக்கப்படும் என எதிபார்க்கலாம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிறவி

பகுதி 1

பாடசாலை முடிந்து களைத்து வீடு வரும் பிள்ளை "அம்மா நான் வந்து விட்டேன்" என்று குதூகலிக்கும். வீடு வந்ததும் ஏதோ புதிய பிறவி எடுத்தது போன்ற தெம்பு பிறக்கும்.

என்னதான் மனதை அழுத்திக்கொண்டே இருந்தாலும் — பாடசாலையால் வரும் பிள்ளையைக் கண்டதும் மனங்குளிர வரவேற்று — இதமாகப் பேசி அதன் மன மற்றும் உடற்களையை ஆற்றிவிடக் வேண்டிய இராஜதந்திர கடமை பெற்றவர்களுக்கு உண்டு.

குடும்பம் என்றால் ஆயிரம் கவைகள் இருக்கத்தான் செய்யும். அதுவும் வேலைக்குப் போகும் தாய் என்றால் வீட்டு நிலைமையைச் சமாளிப்பதில் அவளுக்கு எப்போதுமே 'ரென்ஷன்'தான்,

பிள்ளைகளைக் கடிகின்ற பெற்றார் — அவர்களுக்கு ஏதும் இடைஞ்சல் வந்ததும் பதறிப்போவது மட்டுமல்ல— கடிந்ததற்கும் சேர்த்தல்லவோ கவலைப்படுகிறார்கள்?

'பயல் வரட்டும். றிப்போட் சரியில்லை. என்ன படித்துக் கிழித்து விட்டான்' — என்று கறுவிக்கொண்டே றிப்போட்டால் விசுக்கிப் புழுக்கத்தோடு போராடிக் கொண்டிருந்தாள் மேரி.

அவன் வந்ததும் கேட்டுக் கிழித்துவிட்டுத் தான் வேலைக்குப் புறப்படவேண்டும். இன்று அவன் சற்றுக் கடுகடுப்பாகவே காணப்பட்டான். கடுகடுப்பைக் காட்ட வாய்த்தது பிள்ளை; கண்ணில் பட்டது றிப்போர்ட்.

இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் வீடு வாய்த்திருந்தது நகர பிளாட் வாழ்க்கை அலுத்த அவளுக்கு வீட்டருகே இருக்கும் சிறு மரக்காடுகளும் — தொலைவில் சலசலக்கும் நீரோடையும் இதத்தை தரவே செய்தன.

வழமைபோல அம்மா கண்டதும் ஓடிவந்து கட்டி அணைத்து முத்தம் கொடுப்பாள் என்ற எதிர்பார்ப்புடன் வந்தது பிள்ளை — 12 வயது ஆண் பிள்ளை— ஷோன்.

முதுகிலே புத்தக மூடை — நாளை வளர்ந்தால் மூடை அடிக்கும் தொழில் என்றால் —அதற்கு இப்போதே பயிற்சி — நாளும் வளரும் சுமை அதுவல்லவா?

சப்பாத்து, தண்ணீர் கான், யூனிபோம் (சீருடை), தொப்பி, விளையாட்டு உபகரணங்கள் என்று ஏகப்பட்ட சுமைகள். எல்லாவற்றையும் அப்பாடா என்று இறக்கி வைத்துவிட்டு 'அம்மா' என்கிறான் ஷோன்.

அந்த வார்த்தையோடு அத்தனை சுமைகளும் அவனிடமிருந்து கழன்று காற்றில் கரைகின்றன. இன்று அவனது 'மூடு'க்கு அம்மாவால் வர இயலவில்லை.

'நீ ஏன் சரிவரப் படிக்கவில்லை? இரண்டு பாடங்களில் குண்டடித்து விட்டாயே! பொய்காரப் பயல்— அதை என்னிடம் சொல்லவும் இல்லையே!' வெடுக்கெனப் பாய்ந்தாள் அவள்.

பிள்ளை முகம் சுருங்கிப் போனது. களை பலமடங்கு மேலும் ஏறிற்று. இந்த உலகம் ஒரு சிறைக்கூடம் என்ற எண்ணம் மேலும் வலுத்தது.

படித்துத்தான் பார்க்கிறேன். பரீட்சையும் எழுதுகிறேன். என்னால் இயன்றது ஏதோ அதை செய்கிறேன். பாஸ் வராதபோது என்ன செய்ய முடியும்? — நினைத்தான் ஷோன்.

பிள்ளை சற்றுக் களை தெளிந்து ஆறவிட்டுக் கேட்டிருக்கலாம். அதற்கு அவள் ரென்ஷன் இடம்தர வில்லை. பிறகு வேலைகளில் மூழ்கி விட்டால் மறந்து போகும். கேட்க மூடு வராது.

ஷோன் வரவை எதிர்பார்த்திருந்த அவனது ஆசை நாய் றோஜர் ஆரவாரம் செய்தது. சடைத்து வளர்ந்திருந்த கரிய மயிர்ச்சடை அவனது கால்களை வருடிக் கொடுத்தது. அதன் வாலாட்டம் அவனது களையையும் மனச்சுமையையும் விசுக்கிப் போக்கிக்கொண்டிருந்தது. மெல்ல அதன் தலையை வருடிக்கொடுத்தான். அவன் கைகளை நக்கிக் குளிர வைத்தது றோஜர்.

அதை உலகினில் ஓர் அற்புதமான அன்புப் படைப்பு எனவே நினைத்தான் ஷோன். அன்பு வைக்க — அதைப் பரிமாற — மனதை இளகவைக்க — வந்துபழக— இப்படியொரு துணை உலகினில் இல்லாவிட்டால் எப்போதோ மனிதனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கும்.

அவனை வீட்டுக்கு வெளியே வளவுக்குள் விளையாட இழுத்தது றோஜர். அதன் குறிப்பறிந்து வெளிப்பட்ட அவன் தன்னை மறந்து அதனோடு இணைந்தான்.

மேரியின் கண்கள் அவர்களைத் தொடர்ந்தன. அவனது ஆனந்தத்தில் தானும் பங்குகொள்ள இயலவில்லையே என்ற ஆதங்கம் பிறந்தது. அவனை வெடுக்கென்று ஏசிவிட்ட குற்ற உணர்வு மனதிலே குறுகுறுத்தது. ஆசையாக அவனை அழைத்து ஊட்டிவிட மனது பரிதவித்தது.

றோஜரோடு அத்தனை உரிமையாய் தன்னை மறந்து விளையாடுபவனை தான் அழைத்து அவனது மனநிலையினை இப்போ தளரச் செய்ய வேண்டாம் என நினைத்து அந்நியப்பட்டு விட்டுவிட்டாள் தாய்.

இதமாகச் சொல்லி — சமயம் பார்த்து பக்குவமாக நடந்திருந்தால் சிக்கல் எழுந்திராது என்ற ஞானம் இப்போதான் பிறக்கிறது.

அவன் ஆறித் தேறி வரட்டும். பிறகு சமாளிக்கலாம் என நினைத்தாள். ஐந்தரை மணிக்கு அவள் வேலைக்குப் புறப்பட்டாக வேண்டும். மணிக்கூட்டைப் பார்த்தாள். மணி மாலை 3.30ஐ காட்டியது. அன்று பெப்ரவரி 26 — 1993.

மீண்டும் மனவலியுடன் தனது அலுவல்களில் இறங்கி விட்டாள் மேரி. அருகே இரண்டு வயதுக் குழந்தை மண்டி அவளோடு குலவிக் கொண்டிருந்தது. இதமாகப் புல் பரப்பிய தரை. அழகிய மலைச்சாரல். ஓங்கிவளர்ந்து நிழற்குடை பிடிக்கும் மரங்கள். ஒரு பசுமையான வனப் பிரதேசம்.

அருகே இப்படி அமைந்தால் மனம் அதில் லயிக்காமலாவிடும்? ஷோனும் றோஜரும் இதமான அந்தச் சூழலுக்குள் ஓடிப்பிடித்து விளையாடத் தொடங்கினர். தன் மனத் துன்பம் எல்லாம் மறந்தான் ஷோன்.

தாய் வேலைக்குப் போனால் தம்பி மண்டியை பார்த்து பராமரிப்பது இவன் வேலை. அது அவனது துடிப்பான பருவத்துக்கு ஒரு தடைக்கல். பெரிய இடைஞ்சலாக இருக்கும். பிள்ளை பிராக்காட்டும் பொறுமை இந்த வயதில் வந்து விடுமா?

றோஜர் ஓட ஓட இவனும் துரத்தி விளையாடினான். பின்பு இவன் ஓட ஓட அது துரத்தி விளையாடும். புற்தரை மெத்தை விரித்து இருந்தது. புரண்டு எழுந்தான்.

றோஜரும் இல்லாவிட்டால் அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் அதுக்கும் அவன் தான் வேண்டும். பாய்ந்து பாய்ந்து அவன் ஆடைகளை அழுக்கு ஆக்கியும், கிழித்தும் விடும். அம்மாவிடம் வேண்டிக் கட்டுவான்.

றோஜர் வழிகாட்ட ஓடி விளையாடி இறுதியில் அந்த முட்கம்பி வேலியை வந்தடைந்தனர் இருவரும். பசுமை வனத்திடையே ஒரு எல்லையும் இருக்கிறதா என நினைத்தான் அவன்.

வேலிக்கு மறுபக்கம் வந்து விட்டான். கம்பியைச் சற்று தூக்கியது தான் தாமதம் றோஜரும் மறுபக்கம் வந்து விட்டது. இயற்கை தரும் சுகம்தான் என்ன என வியந்தான் அவன்.

மலைச்சரிவில் மேலும் இறங்கி விளையாடினர் இருவரும் சற்றுக் களை எடுத்தது. கால்கள் எரிவு கண்டன. பாடசாலையால் வந்து பச்சத்தண்ணீர்கூட குடிக்காமல் விளையாட வந்தது நினைவுக்கு வந்தது.

தொலைவில் சலசலத்து ஓடும் நீரோடை கண்ணில் பட்டது. அருகே வந்தான். தெளிந்த மலையூற்று நீர் கண்ணாடி போலத் தெரிந்தது. ஒரு சொட்டு உள்ளங் கையால் அள்ளி நாக்கில் விட்டுப் பார்த்தான்.

அப்படி இதமான தண்ணீரை அவன் வாழ்க்கையில் சுவைத்ததே இல்லை. இயற்கை என்ன இனிமையானது என நினைத்தான். தண்ணீரை கையால் அள்ளி அள்ளி ஆசை தீர — தாகம் அடங்கப் பருகினான்.

அவனோடு சேர்ந்து றோஜரும் தண்ணீரை நக்கிக் குடிக்கத் தொடங்கியது வாலை ஆட்டி ஆட்டி அது குடித்த விதம் நீரின் சுவையைக் காட்டிற்று.

மீண்டும் விளையாட்டு. வீடடில் இருந்து எவ்வளவு தூரத்தில் வந்துவிட்டோமோ என்ற கணிப்போ கவலையோ இருவரிடமும் இருக்கவில்லை. இருவரும் ஜன்னல்களைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் அடங்கிக் கிடக்கப் பழகியவர்கள். இன்று சுதந்திரம் கிடைத்தல்லவோ இருக்கிறது!

நேரம் மாலை 5.00 மணி. சூரியன் தன் அஸ்தமனத்துக்கான கோலங்களை வானில்

**-மு. சிவநேசன்-**

போடத் தொடங்கி இருந்தான். இன்னும் இருள் கவியவில்லை.

மீண்டும் ஒரு வேலி — இரும்புக் கதவு — பூட்டப்படுக் கிடந்தது அது அவனது எழுச்சிக்குத் தடையாக எல்லை போடப்பட்டது போலக் கிடந்தது

போதாதென்று 'உட்புக வேண்டாம்' என்ற அறிவிப்பு வேறு அவன் கண்ணில் பட்டு — இதயத்தை வலித்தது

உள்ளே ஆபத்தாக எதுவுமே தென்படவில்லை உடனடியாக வீடு திரும்பவும் மனமில்லை. சூழலை ஆராயத் தொடங்கினான். றோஜர் ஓடித் திரிந்தது. அவனை வம்புக்கு இழுத்தது. திரும்பிப் போகப் பாதை தெரியாது றோஜர் நிச்சயம் வழிகாட்டும் என்ற துணிவு உண்மையும்கூட. வந்த வழியே மோப்பம் பிடித்து வீடுவரை செல்ல அதனால் இயலும்.

உருக்குச் சட்டங்களினூடே நுழைந்து மறுபுறம் வந்துவிட்டான். றோஜரும் கூடவே புகுந்து வந்தது. இரண்டாவது வேலி தண்டல் என்ன சுகம். வரவரப் பசுமையின் அதிகரிப்பே தென்பட்டது. நேரம் ஆகிவிட்டதால் வீட்டில் தாய் சூடாகவே இருப்பாள்.

(தொடரும்)

**உண்மைச் சம்பவம் - உலகினுக்கோர் படிப்பினை**

**மரணத்தின் வாயிலுக்குச் சென்று திரும்பிய ஒரு சிறுவனின் கதை இது!**

## விடைகள்

IX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### கண்டுபிடியுங்கள்

| | சீலன் | ராஜீ | சேகர் | குமரன் | வினோ | சபேஸ் | திவா | சுரேஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| எடுத்த ஓட்டங்கள் | 08 | 18 | 12 | 40 | 05 | 22 | 03 | 13 |
| வீழ்த்திய விக்கட்டுகள் | 00 | 00 | 02 | 02 | 01 | 01 | 00 | 02 |

### இயலுமா?

அம்மா, அப்பா, மாமா, அண்ணி, அத்தை, சித்தி, பாட்டி, அத்தான், பேரன், பட்டா, மகன், மன்னி.

## அரசியல்...

(II ஆம் பக்கத் தொடர்)
இப்போது நாடி சோர்ந்து போனார்கள் —

''எங்கள் பிரச்சினைக்கு இன்னும் ஐந்து இல்லை பத்து வருடங்கள் போனாலும் தீர்வு என்ற ஒன்றைக் கனவிலும் காணமுடியாது என்ற நம்பிக்கை இழந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள். இதுவே அரசியல் நிலை'' என்றார் அவர் இரத்தினச் சுருக்கமாக.

எங்களின் மூத்த அரசியல் தலைவர்களிடமும், அடுத்தடுத்த, இன்றைய தலைவர்களிடமும் இதய சுத்தியும் உண்மைத்துவமும் இல்லாமற் போனதன் விளைவு இது என்பது அவரது மதிப்பீடு. ★

## மனிதனுக்கு..

(I ஆம் பக்கத் தொடர்)
யாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இந்த இருதய மாற்று சிகிச்சை இங்கிலாந்தில் நடத்தக் கூடாது என்பதில் டாக்டர்களும், அரசும் உறுதியாக இருக்கின்றன.

இதனால்தான் யோரன் இஸ்ரேலிலே இந்த ஆபரேஷனை வைத்துக் கொள்ளலாம் என்று கூறி யிருக்கிறார். இந்த இருதய 'ஆபரேஷன்' மூலம் புதியமருத்துவ புதுமை படைக்கலாம் என்பதால் ஜாக்கப் லாவி ஒப்புக் கொண்டு விட்டார்.

இந்த சாதனை முயற்சிக்கான தேதி இன்னும் குறிப் பிடப்படவில்லை. ★

## குள்ள மாப்...

(VII ஆம் பக்கத் தொடர்)
மணம் நடந்தது.

சென்னையில் அண்மையில் நடந்த இந்தத் திருமணத்தை பொலீஸ் துணை சுப்பிரின்டன் ஜவகர் சந்திரசேகர் நடத்தி வைத்தார். குரோம் பேட்டையில் திருமணம் நடந்தது.

மணமகன் விசுவநாதன் இந்து மதத்தவர். மணமகள் பூண்டிமேரி கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தவர்.

எனவே இரு தரப்பினரையும் பாதிக்காத விதத்தில் வித்தியாசமான முறையில் திருமணம் நடந்தது.

மஞ்சள் கயிற்றில் தாலியும், சிலுவையும் கோர்க்கப் பட்டிருந்தன. அந்த மஞ்சள் கயிற்றை பூண்டிமேரி கழுத்தில் கட்டி அவளை தன்னவள் ஆக்கிக் கொண்டார் விசுவநாதன். ★

## காப்பியத்..

(VI ஆம் பக்கத் தொடர்)
நான் தான் கள்வன் என்று தீர்ப்பு வழங்கினான். தவறுணர்ந்த அரசன் உயிரையும் விட்டான்.

முடியாட்சியில் இருக்கும் அரசனுக்குப் பல அதிகாரங்கள் உண்டு. அதேபோல் குடியாட்சியில் இருக்கும் தலைவனுக்கும் பல அதிகாரங்கள் உண்டு. ஆனால் அதிகாரத்தைப் பயன்படுத்து முன் அது தர்மமா? அதர்மமா? என்று கேட்க வேண்டிய பொறுப்பு ஆட்சித் தலைவனுக்கு உண்டு.

அந்தப் பொறுப்பிலிருந்து தவறினால் அது முடியாட்சியானாலென்ன குடியாட்சியானாலென்ன உடனோ அல்லது தாமதித்தோ அது அழிந்தே தீரும்.

இது வெறும் தர்மோபதேசம்—அல்ல. வரலாறு கண்ட உண்மை. உலக வரலாறுகள் சான்றுபகரும். ★

## மீர் விண்வெளி...

(VII ஆம் பக்கத் தொடர்)
வீரர் விண்ணில் நடந்தபோது 'மிர்' நிலையத்தினுள்ளே இருந்த அமெரிக்க வீரர் ஆண்ட்ரூ தாமஸ் தால்கட்டின் உடுப்பிலிருந்து தகவல்களைப் பெற்று வந்தார்.

'மிர்' ஆய்வு நிலையத்தில் வீரர்கள் தங்கி ஆய்வுநடத்தி வருகிறார்கள். இந்த மாதத்தில் மொத்தம் ஐந்துதடவை அவர்கள் வெளியே அந்தரத்தில் நடக்க திட்டமிட்டிருந்தனர்.

'மிர்' நிலையம் கடந்த 12 ஆண்டு காலமாகச் செயல்பட்டு வருகிறது. அண்மைக் காலத்தில் பல கோளாறுகளையும் விபத்துகளையும் அது சந்தித்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளைப் பரபரப்பில் ஆழ்த்திய இந்திய அணு வெடிப்பு பரிசோதனைகள்!

நிலத்துக்கு அடியிலான ஐந்து அணுவெடிப்புப் பரிசோதனைகளை இந்தியா இவ்வாரம் வெற்றிகரமாக நடத்தியுள்ளது

1974 ஆம் ஆண்டு இந்தியா தனதுமுதலாவது அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனையை நடத்தி தனது அணு ஆற்றலை உலகுக்கு வெளிப்படுத்தி இருந்தது.

தற்பொழுது 24 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் —

அணு ஆயுதத்தடை ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு— உலகில் அணுஆயுதங்களை தடைசெய்யும் அவசியம் உணரப்பட்டுள்ள வேளையில் — இந்தியா நடத்திய அணுவெடிப்புப்பரிசோதனைகள் உலகை பெரும் பரபரப்பில்ஆழ்த்திவிட்டிருக்கின்றன.

இந்தியாவின் அண்டை நாடுகள் — குறிப்பாக பாகிஸ்தான், சீனா, இந்த அணு வெடிப்புப் பரிசோதனைகள் குறித்து கவலை வெளியிட்டுள்ளன.

இந்தியா பரிசோதித்தஅணு வெடிப்புக்கள் 1945 ஆம் ஆண்டு இரண்டாவது உலக மகாயுத்த இறுதியில் அமெரிக்காவினால் ஹிரோஷிமா நகர் மீது போடப்பட்ட அணுகுண்டைவிட சக்தி வாய்ந்தவை என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## அமெரிக்க பொருளாதாரத் தடைக்கு வாஜ்பாய் பணிந்து விடுவாரா?

ty) இந்தியா கையெழுத்திட மறுத்து வருகிறது.

அமெரிக்காவும் ஏனைய வல்லரசுகளும் அணுஆற்றல் துறையில் போதிய வளர்ச்சி அடைந்து விட்டன என்றும் —

உலகில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன் பிறநாடுகளைக் கட்டுப்படுத்த முயலுகின்றன என்றும் — இந்தியா குற்றஞ் சாட்டுகிறது.

இந்த ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திடப் போவதில்லை என்று 1996 இல் நடைபெற்ற ஜெனிவா ஆயுத பரிகரண மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி அருந்ததி கோஸ் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

NPT எனப்படும் அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா இந்த ஆண்டு கையெழுத்திடாவிடில் 1999 இல் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வர மாட்டாது.

ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்கு கையெழுத்திட

சோதனை விவகாரம் சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

### சி. ஐ. ஏ மீது குற்றச்சாட்டு

இந்தியாவின் அணு வெடிப்பு பரிசோதனைகள் குறித்து முன்கூட்டிய தகவல் வெளியிடத் தவறியதுக்காக

அணு ஆயுதத் தாக்குதலில் இருந்து இந்தியா தன்னைப் பாதுகாக்கும் நிலையில் இல்லாதிருந்ததாலேயே 1971 டிசெம்பர் பங்களாதேஷ் யுத்தத்துக்கு முன்னர் சோவியத் யூனியனுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டிருந்

**உலக உலா**

என்.பி. சீலன்

அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ. மீது அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அணுவெடிப்புப் பற்றிய தகவலைப் பெற முடியமாற் போனது குறித்த விசாரணை ஆரம்பித்திருப்பதாக சி. ஐ. ஏ. அறிவித்துள்ளது.

இந்தியா — பாகிஸ்தான் ஆகிய நாடுகள்மீதான தனது அவதானத்தை அதிகரிக்கப் போவதாகவும் சி.ஐ.ஏ தெரிவித்துள்ளது.

### உபகண்டத்தில் ஆயுதப்போட்டி உருவாகும் ஆபத்து

இந்தியாவின் அணு வெடிப்புப் பரிசோதனையால் அதிகம் அச்சம் அடைந்துள்ள நாடு பாகிஸ்தான் ஆகும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று யுத்தங்களை நடத்தி முடித்துள்ளன.

உபகண்டத்தில் ஆயுதப் போட்டிக்கு பாகிஸ்தான் தயார் என்றும் விரைவில் அணுவெடிப்பு பரிசோதனை ஒன்றை பாகிஸ்தான் நடத்த இருப்பதாகவும் பாகிஸ்தானின் வெளிவிகார அமைச்சர் கோகார்ட் அயூப் அறிவித்துள்ளார்.

ஒருமாத காலத்துக்குள் பாகிஸ்தான் அணுவெடிப்புப் பரிசோதனையை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவியுமான பெனாஸிர் பூட்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவுடன் பாகிஸ்தான் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் என்று பெரும்பாலான பாகிஸ்தான் எம்.பிக்கள் கோரி உள்ளனர்.

இந்தியாவின் மற்றொரு எதிரி நாடான சீனாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் இந்தியாவை பணிய வைக்க முடியும் என்று பாகிஸ்தானில் கருதப்படுகிறது.

1962 ஆம் ஆண்டு இரு நாடுகளும் யுத்தம் ஒன்றில் ஈடுபட்ட பின்னர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எத்தனையோ பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதிலும் உருப்படியாக எதுவும் கைகூடவில்லை.

இந்தியாவின் அருணாச்சல் பிரதேசத்துக்கு சீனா இன்னும் உரிமை கோரி வருகிறது.

### பாதுகாப்பே முதலிடம்

அணு ஆயுதக் குறைப்பை துரிதமாக அமுல் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா இன்னும் நம்பிக்கை கொண்டிருப்பதாக [illegible] [illegible] முக்கிய மானது என்றும் பாரதிய ஜனதாக் கட்சி தெரிவிக்கிறது

தது என்றும் பாரதிய ஜனதாத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

பங்களாதேஷ் யுத்தத்தின் போது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா அப்பொழுது ''யு.எஸ்.எஸ்.எண்டர்பிரைஸ்'' என்னும் அணு ஆயுதக்கப்பலை இந்து சமுத்திரப் பகுதிக்கு நகர்த்தி இருந்தது.



இந்தியாவின் முப்படைத் தளபதிகளுடன் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் காணப்படுகிறார்.

பங்களாதேஷ் யுத்தம்நடைபெற்று 14 ஆண்டுகளின் பின்னர் றிச்சேர்ட் நிக்ஸன் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாமீது அணுஆயுதத்தாக்குதல் நடத்த அமெரிக்கா அப்பொழுது ஆலோசித்து வந்ததாக தெரிவித்திருந்தார்.

### பாரதீய ஜனதாவின் சுதந்திர அணு ஆயுத கொள்கை

1996 — 98 தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுதந்திரமான அணு ஆயுதக் கொள்கை குறித்து பாரதீய ஜனதாக் கட்சி பிரஸ்தாபித்திருந்தது.

எனினும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் ஆட்சி அமைத்து ஒரு சில மாதங்களில் அணு வெடிப்பு பரிசோதனைகளை அது நடத்தும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை.

1998 தேர்தல் பிரசாரத்தின் போது பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிவிவகார கொள்கைப் பேச்சாளரான பிரஜேஸ் மிஷ்ரா, பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வந்தால் அணு குண்டை உற்பத்தி செய்யும் என்று பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

பிரஜேஸ் மிஷ்ரா இன்று பிரதமர் வாஜ்பாயின் பிரதான செயலாளராக இருக்கிறார்.

வெளிவிவகாரக் கொள்கையிலும் முக்கிய விவகாரங்களிலும் பிரதமருக்கு ஆலோசகராகவும் கடமையாற்றுகிறார்

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அக்னி ஏவுகணை உற்பத்தியை துரிதப்படுத்துவது குறித்தும் பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்திருந்தது.

ஆனால் தேசிய கொள்கை திட்டத்தில் இது குறித்து பிரஸ்தாபிக்கப்படவில்லை.

கோரி (Ghauri) ஏவுகணை உற்பத்தியை பாகிஸ்தான் இடை நிறுத்தி இருப்பதால் அக்னி ஏவுகணைப் பரிசோதனைகளைத் தொடருவதா? அல்லது இல்லையா? என்பது குறித்து இந்தியா இன்னும் முடிவு செய்ய முடியாத நிலையில் இருந்து வருகிறது.

2 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூரம் செல்லக் கூடியது அக்னி ஏவுகணை!

அக்னி ஏவுகணை திட்டத்தை பூர்த்தி செய்ய இன்னும் ஐந்து பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

### ஏவுகணை துறையில் ஏற்பட்ட முன்னேற்றம்

இந்தியா 1993 ஆம் ஆண்டில் முதல் கடவையாக ஏவுகணை அபிவிருத்தித் திட்டம் ஒன்றை வகுத்தது.

★ தரையில் இருந்து ஆகாயத்துக்கு ஏவக்கூடிய குறுகிய தூர திரிசூல் (Trishul) ஏவுகணை.

★ தரையில் இருந்து ஆகாயத்துக்குஏவக்கூடிய நடுத்தர ஆகாஷ்(AKash) ஏவுகணை.

★ தாங்கி எதிர்ப்பு நாக் (Neg) ஏவுகணை.

★ தரையில் இருந்து தரைக்குப் பாயக்கூடிய குறுகிய தூர பிரீத்வி (Prithvi) ஏவுகணை.

★ நடுத்தர உந்துவிசை கொண்ட அக்னி ஏவுகணை.

ஆகியவையே இந்தத் திட்டத்தின் கீழ் அடங்கும்.

பிரீத்வி ஏவுகணை ஏற்கனவே இந்தியாவின் ஆயுதப் படையில் இணைக்கப்பட்டு விட்டது.

ஏனைய குறுகிய தூர ஏவுகணைகள் ஆங்காங்கே பொருத்தப்பட்டு விட்டன.

இந்தியாவின் அக்னி உந்துவிசை ஏவுகணை அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் சக்தி கொண்டது. தற்போதைய வெற்றிகரமான அணு வெடிப்புப் பரிசோதனைகளும் ஏவுகணை உற்பத்தியும் இந்தியாவை பலம் பொருந்திய நாடாக மாற்றக் கூடியவை என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் சர்வதேச நிர்ப்பந்தத்தை—குறிப்பாக அமெரிக்கபொருளாதாரதடையை இந்தியா வெற்றிகரமாக எதிர்கொள்வதிலேயே அதன் எதிர்காலம் தங்கி இருக்கும்.



இந்தியாவின் ட்ரொம்பாய் நகரிலுள்ள பாபா அணு ஆராய்ச்சி நிலையம் இதுதான். இந்தியாவின் அணு ஆராய்ச்சித் துறையில் இது முன்னணி வகிக்கிறது.

பரிசோதனை எதுவும் நடத்தாத நிலையில் ஹிரோஷிமா, நாகாசாக்கி நகர்கள் மீது அமெரிக்கா அப்பொழுது அணுகுண்டுத் தாக்குதலை நடத்தி இருந்தது. நாகசாக்கி நகரில் மட்டும் அப்பொழுது 70 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த திங்களன்று இந்தியாவின் அணுவெடிப்புப் பரிசோதனை செய்தி வெளிவந்தவுடன் நாகாசாக்கி நகர மேயர் தலைநகர் ரோக்கியோவில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு நேரில் சென்று தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

### கிளின்ரன் நிர்வாகம் குழப்பம்

ராஜஸ்தான் மாநிலத்தின் ஹொக்ரான் பாலைவனப் பகுதியில் நடத்தப்பட்டுள்ள இந்த அணுவெடிப்புப் பரிசோதனையால் கிளின்ரன் நிர்வாகமே மோசமாகக் குழப்பம் அடைந்துள்ளது.

ஏற்கனவே NPT எனப்படும் அணுஆயுதப் பாவல் தடை ஒப்பந்தத்திலும் (Nuclear Non Proliferation Treaty) —

மற்றும் CTBT எனப்படும் முழுஅளவிலான அணு ஆயுத தடை ஒப்பந்தத்திலும் (Comprehensive Test Ban Trea-

வேண்டிய 42 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

### பொருளாதார தடைநடவடிக்கை

இந்தியாவின் அணுவெடிப்புப் பரிசோதனைகளால் மிகுந்த குழப்பம் அடைந்திருப்பதாக அறிவித்துள்ள கிளின்ரன் இந்தியாவுக்கு எதிராக கடும் பொருளாதார தடை நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.

அமெரிக்கா இந்தியாவுக்கான பலகோடி டொலர் கடனுதவியை நிறுத்தி இருப்பது இந்திய வர்த்தக வட்டாரங்களில் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவை பணிய வைக்க அமெரிக்கா இனி எடுக்கப் போகும் நடவடிக்கைகள் மிகக் கடுமையாக இருக்கும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள தனது தூதுவரை ஆலோசனைக்காக அமெரிக்கா திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது. கனடா, ஆஸ்திரேலியா நியூசிலாந்து ஆகிய நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி இந்தியாவில் உள்ள தமது தூதுவர்களைத் திருப்பி அழைத்துக் கொண்டுள்ளன.

இந்த அணுவெடிப்பு பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org